# செந்தழல்

EVELYN RUTNAM LIBRARY JAFFNA

தமிழ் மன்றம்
யாழ்ப்பாண வளாகம்
திருநெல்வேலி ★ வட்டுக்கோட்டை
தமிழ் ஈழம்

## விவசாயிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

## உற்பத்தியைப் பெருக்குங்கள்!!

# பூமா நீர் இறைக்கும்

# வில்லியஸ் எஞ்ஜின் பொருத்திய

# பம் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

★ முந்துங்கள் இச் சந்தர்ப்பத்தை இழந்துவிடாதீர்கள்!

★ தண்ணீர் இறைக்கும் யந்திரத்துக்குரிய பலவித உபகரணங்கள், வண்டில் முதலியனவும் விற்பனைக்கு உண்டு.

தயாரித்து விநியோகிப்போர்:

# சிலோன் இன்டஸ்ரியல்

# எஞ்சினியரிங் வேக்ஸ்

158, ஸ்ரான்லி றேட்,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7426

# செந்தழல்

EVELYN RUTNAM JAFFNA LIBRARY
719

உலகெங்குமுள்ள சிறுபான்மைத் தேசிய இனங்களிற்கு
இழைக்கப்படும் அநீதிகட்கும் அடக்குமுறைகட்கும்
எதிராகத் தீரமுடன் போராடும்
**விடுதலை வீரர்கட்கு**
இச் செந்தழல்
சமர்ப்பணம்

**22 - 1 - 1977**

# இத் தழலில் ...


1. சமர்ப்பணம்
2. இத் தழலில் ...
3. வாழ்த்துச் செய்திகள்

   பேராசிரியர்கள் :

   கனகசபாபதி கைலாசபதி (வளாகத் தலைவர்)
   பேரம்பலம் கனகசபாபதி (விஞ்ஞான பீடாதிபதி)
   கைலாசநாத குருக்கள் (மனிதப்பண்பியல் இணைப் பீடாதிபதி)
   கார்த்திகேசு இந்திரபாலா (முன்னாள் மனிதப்பண்பியற் பீடாதிபதி)
4. பத்திராதிபரின் பக்கம்
5. மன்றத் தலைவர் மொழிகிறார்
6. இலக்கியத் தேறல்
7. நிரபராதிகள் — நியாயம் தேடுகிறார்கள்
8. பண்டாரவன்னியன்
9. சில நாடுகளும் நம் நாடும்
10. விடுதலைப் பாதையும் பாராளுமன்றமும்
11. வீடு பொருத்தமில்லை
12. தாகம்
13. மடையர்
14. உன்னிடம் மயங்குகின்றேன்
15. வடக்கும் கிழக்கும் ... ?
16. பிறப்பாக்கமும் மொழியும்
17. தமிழை மறப்பேனோ ?
18. தர்ம வியூகம்
19. தலைவி ஏமாற்ற ...
20. நம்பிக்கைகளின் சிதைவில் — புத்துயிர்ப்புக்கள்
21. என்றோ ஒரு நாள்
22. படைப்பாளி — படைப்பு — வாழ்க்கை
23. மனித மரங்கள்
24. சாவு நன்று

மன்றத் தழல் :

தமிழ் மன்ற அறிக்கை
கலைவிழாக் கோலங்கள் (படங்களுடன்)
'தேவன்' தந்த தீர்ப்பு
செயலவை நன்றி

கூர்ந் தழல் :

நாவல் அனுபந்தம்

தமிழ் நாவலிலக்கியம் — ஒரு நோக்கு
ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியம் — அண்மைக் காலப் போக்குகள்
மர்ம நாவல்



# வளாகத் தலைவர் வாழ்த்துரை

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகத்துத் தமிழ் மன்றம் மலர் ஒன்றினை வெளியிடுவதறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். வளாகங்களிலே மாணவர் மன்றங்கள் ஆக்கபூர்வமாகச் செய்யும் பணிகளில் ஒன்று, வருடா வருடம் தரமான சஞ்சிகைகள் வெளியிடுதலாகும். மாணவரது சிருஷ்டி யாற்றலுக்கும் சிந்தனை வளர்ச்சிக்கும் உகந்த களமாக இச் சஞ்சிகைகள் அமைகின்றன.

ஒவ்வொரு வளாகமும் ஏனைய வளாகங்களுடன் பல பொதுப் பண்பு களைக் கொண்டியங்கும் அதே வேளையில், சிற்சில தனிச் சிறப்பியல்புகளையும் வளர்க்க முற்படுதல் இயல்பே; அது தவிர்க்க இயலாததுமாகும். இவ்வுண் மைக்கு இயைய யாழ்ப்பாண வளாகமும் தனது குறுகிய கால வளர்ச்சிக்குள் சில பிரத்தியேகமான குணும்சங்களைப் பெற்றுள்ளமை கண்கூடு.

வளாகத்தின் பெருமைக்கும், போக்குக்கும் இயைபுடைய விதத்திலே தமிழ் மன்றத்தின் சஞ்சிகை மணம் வீச வேண்டுமென்று விழைகின்றேன்.

க. கைலாசபதி

*With Best Compliments*

*From*

# PENINSULA GLASS WORKS & INDUSTRIES

25, STANLEY ROAD,

JAFFNA.



# உதயசூரியன் நாட்டிலிருந்து...

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இளமைமிகு வளாகமாகிய யாழ்ப்பாண வளாகத்தின் தமிழ் மன்றம் வெளியிடும் முதலாவது ஆண்டு மலருக்கு 'உதய சூரியன் நாடு' ( *Nippon - the Land of the Rising Sun* ) என ஜப்பானிலிருந்து இச் செய்தியை அனுப்பி வைப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

பண்பாட்டு வளர்ச்சியில் பல்கலைக்கழகத்துத் தமிழ் மன்றங்களும் அவற்றின் ஆண்டிதழ்களும் ஈழத்தில் முக்கியமான ஒரு பங்கினை வகித்து வந்துள்ளன. ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுக் காலமாகப் பேராதனையின் பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் இந் நாட்டின் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் சிறந்த ஒரு பங்கினை வகித்து வந்துள்ளது. நாடகத் துறையிலும் இலக்கியத் துறையிலும், காலஞ்சென்ற பேராசிரியர் கணபதிப்பிள்ளை போன்ருேரும், இன்று தமிழ்ப் பேராசிரியர்களாகப் பல்வேறு வளாகங்களில் இருப்போரும் தமிழ் மன்றம் மூலம் தொண்டாற்றினர். தமிழ் மன்றத்தின் ஆண்டிதழ் வளர்த்த எழுத்தாளர் பலர் இன்று தமிழறிஞர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண வளாகத்திலும் இவ்வாறே முக்கியமான பண்பாட்டு வளர்ச்சிப் பணியில் ஈடுபடவேண்டிய ஒரு மன்றமாக எமது தமிழ் மன்றம் அமைகின்றது. அதனுடைய ஆண்டிதழ் எதிர்கால எழுத்தாளர்களையும் பல்துறை அறிஞர்களையும் வளர்க்கும் இதழாக—ஊடகமாக—வளரவேண்டும். இக் கடமையில் இவ் விதழ் தவருது என்பது எனது நம்பிக்கை. தமிழ் மன்றத்தின் ஆண்டிதழ் சிறந்த ஏடாக வளரவேண்டும் என வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

**கா. இந்திரபாலா**

*29 செப்டம்பர் 1976*
கமகுரா
ஜப்பான்.

உங்கள் இல்லங்களை

நவீன முறைத் தளபாடங்களால் அலங்கரிக்க

இன்றே விஜயம் செய்யுங்கள்

# சதா ஹோம் நீட்ஸ்

280, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்

( வண்ணை சிவன் கோவிலுக்கு அண்மையில் )

தொலை பேசி: 7169

தந்தி: 'கணேசன் ரெக்ஸ்'

உயர் ரக ஜவுளி வகைகளிற்கு

சிறந்த இடம்

# கணேசன் ஸ்ரோர்ஸ்

63, 78, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்




கலைவிழாவில் பேராசிரியர்

# வாழ்த்துச் செய்தி

இலங்கைப் பல்கலைக் கழக யாழ் வளாகத் தமிழ் மன்ற மாணவர்கள் தமது சஞ்சிகையை இவ்வாண்டும் சிறப்புடன் வெளியிடவிருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் மன்ற மாணவர்கள் உற்சாகத்துடன் தமிழ்ப்பணி யாற்றி வருவதை அறிவேன் பல்கலைக்கழகத்திற்குப் படிக்க வரும் மாணவர்கள் பலர் தமது சுதந்திரத்தை பிழையான வழிக ளில் பயன்படுத்துகிருர்கள். அப்படியில்லாமல் மாணவர்கள் தமது புதிய சூழ்நிலையை நன்குணர்ந்து கட்டுப்பாட்டுடனும் பொறுப்புணர்வுடனும் நடந்து, தாம் பெறவந்த குறிக்கோளை மறக் காது, கருத்துடன் கல்வி பயின்று அறிவிலும் பண்பிலும் மேம் பட்டவர்களாக வெளியேற வேண்டுமென்று விரும்புகிறேன்.

தமிழ் மன்றம் மேலும், மேலும் தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

பே. கனகசபாபதி

# குமரன் ரூறிஸ்ட் இன்

# KUMARAN TOURIST INN

யாழ்நகரில் சகல நவீன வசதிகளுடனும்

தங்குமறை வசதிகள், 24 மணிநேரச் சேவை

குறைந்த செலவு, நிறைந்த உபசரிப்பு

ஸ்பெஷல் உணவு வகைகள்

இன்றே விஜயம் செய்யுங்கள்

67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# நியூ பிளவ்ஸ்

சுத்தமான சுவையான சிற்றுண்டிகள், குளிர்பானங்கள்

இவற்றிற்கு யாழ்நகரில் தலைசிறந்த ஸ்தாபனம்

## நியூ பிளவ்ஸ்

## NEW PLAUS

5 & 6, Modern Market,

Jaffna.



கலைவிழாவில் பேராசிரியர்

# வாழ்த்துச் செய்தி

'செந்தழல்' என்னும் பெயருடன் ஆண்டுதோறும் வெளி வர இருக்கும் வருட சஞ்சிகை வரிசையில் முதல் வெளியீடாக இந்த இதழ் வெளிவர இருப்பதை அறிந்து மட்டிலா மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ் மன்றத்தின் உயர் இலட்சியங்களைப் பரப்பும் உன்னத ஏடாக இது விளங்கும். செந்தழல் வெளியீடு தமிழர்களின் மொழி, இலக்கியம், பல்வகை நுண்கலைகள் பற்றிய கட்டுரைகளை தொடர்ச்சியாக வெளியிடுவதன் மூலம் அரும் பெரும் சேவை செய்து தமிழர் பண்பாட்டைப் பரப்புவதில் வெற்றி ஈட்டுதல் வேண்டும் என என் மனமார்ந்த வாழ்த்துக் களைத் தெரிவிக்கின்றேன்.

கா. கைலாசநாத குருக்கள்

13-1-77

அன்பளிப்பு

S. R. செல்லத்துரை

216, K K. S. வீதி

யாழ்ப்பாணம்.

தொலை பேசி 296

யாழ் ஓட்டோ ஹவுஸ்

Specialists in

Water Pumps & Spares

Motor Cycle Spares

No 171, Stanley Road,

Jaffna

# M. M. ABDUL CADER & BROS

Direct Importers & Dealers

In

Hardware & Brassware Goods

Wholesale & Retail Merchants

No. 97, K. K. S. Road,

Jaffna

Phone : 443 ( Ext ) Cable : " Irumbu "

அன்பளிப்பு

டாக்டர் க. கந்தசாமி டி. ஏ. எம்.

சுதேச வைத்தியசாலை

பலாலி வீதி, திருநெல்வேலி

யாழ்ப்பாணம்

படப் பிடிப்பாளர்கள்

புளொக் தயாரிப்பாளர்கள்

போட்டோஸ்ரற் அச்சிடுவோர்

பிறேம்போடுவோர்

கண்ணுடிப் பொருள்கள்

தொலைபேசி : 7067

# GNANAMS

**Photographers**

**Block Makers**

**Photo Stat & Printers**

**Picture Framers**

**and**

**Dealers in Glass Wares**

81, Stanley Rd,

301, Clocktower Rd,

Jaffna.

**Tele Pohne : 7067**

# பத்திராதிபருடன் சில மணித்துளிகள்

தமிழ் மன்றத்தின் கன்னி வெளியீட்டில், எமது மன்றத்தின் நோக்கங்களையும் அந்நோக்கங்களை சென்றடைவதற்கான வழிகளையும் குறிப்பிடுவதே மிகப் பொருத்தமானதாகும்.

தமிழ்மொழி வளர்ச்சிக்குத் துணை நிற்றல், தமிழனின் கலை கலாச்சாரங்களைப் பேணுதல், தமிழ்ச் சமூக சீர்திருத்தங்களில் முன்னிற்றல் — இவைதாம் எமது நோக்கங்கள். சுருங்கக் கூறின் தமிழினத்தின் தனித்துவத்தைப் பேணுதல்தான் எமது நோக்கம்.

தமிழன் ஒருவன், அவன் தமிழன் என்ற காரணத்துக்காக இத்தீவிலே தனிப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றான் என்பதை நாம் கூறித்தான் தெரியவேண்டுமென்பதில்லை. இந்தப் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வு எது என்பதிலேதான் பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. தமிழனைத் தமிழன் ஆண்டால் பிரச்சினை தீருமென்பார் ஒருவர். தமிழனைத் தமிழன் ஆள்வதால் பிரச்சினை தீர்ந்துவிடாது, ஐக்கிய இலங்கையே சரியான தீர்வென்பார் மற்றவர்

தமிழ்மகனொருவனுக்கு தனிப் பிரச்சினைகள் இருப்பதற்கு அடிப்படைக் காரணமென்ன? எமது தனித்துவத்தைப் பேணுவதாயின், நாம் போராட வேண்டியது எதற்கெதிராக என்பதை நோக்குவோமாயின், சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து எமது இனத்தைப் பாதுகாப்பதற்கு ஒரே வழி இழந்த எமது நாட்டை மீளப் பெறுவதுதான் என்பது தெளிவு. தமிழ் ஈழத்தில் சிறீலங்காவின் இராணுவம், கடற்படை, ஆகாயப்படை என்பன முகாமிட்டிருப்பதும், தமிழ் மக்களுக்கு தனிப் பிரச்சினைகள் இருந்துகொண்டிருப்பதும், அப்பிரச்சினைகளுக்காகப் போராட முனைபவர்கள் சிறீலங்காவின் படைகளால் அடித்து நொருக்கப்பட்டுக்கொண்டிருப்பதும், தூரதேச அந்நியரால் கைப்பற்றப்பட்டு தம்வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் தமிழ் ஈழத்தவரை சுதந்திரமாக வாழவிடுவதற்கு சிங்கள மக்கள் தயாரில்லை என்பதைத் தவிர வேறெதையும் காட்டவில்லை. எனவே சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட எமக்குள்ள ஒரே வழி எமது நாட்டை மீளப் பெறுவதுதான்.

ஆனால், தமிழனைத் தமிழன் ஆள்வதால் பிரச்சினை தீர்ந்து விடாது என்ற கூற்றில் உண்மை இல்லாமலில்லை. தமிழனைத் தமிழன் ஆள்வதால் மட்டும் அதாவது வெறும் அரசியல் கைமாற்றத்தால் மட்டும் தமிழனின் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. தமிழ்ச் சமூகத்திலே புரையோடிப்போய்க் கிடக்கின்ற சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு, தமிழனைத் தமிழன் எவ்வாறு ஆள்கிறான் என்பதிலேதான் தங்கியிருக்கிறது.

ஆயிரம் சாதிசொல்லி தமிழன் தன்னுள் பிரிந்து நிற்பதற்கும் மற்றும் பல சமூக ஏற்றத் தாழ்வுக்கும் காரணமான நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ அமைப்பு முறைகள் தகர்க்கப்பட்டு உலக சோசலிச நாடுகள் காட்டி நிற்கும் வழியிலே, தமிழீழம் புனரமைக்கப்படுவது தான், தமிழினத்தின் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு. சுருங்கக்கூறின்,

அரசியல் சுதந்திரம்,

பொருளாதார சமத்துவம்

சமூக சகோதரத்துவம்

என்பவற்றை உள்ளடக்கியதாகிய விடுதலை ஒன்றே எம் இனத்தின் தனித்துவம் பேணப்படுவதற்கான வழி. எனவே சிந்திக்கத் தெரிந்த சந்ததியைச் சேர்ந்த மாணவ சமூகம் வெறும் அரசியல் கைமாற்றத்துக்காகப் போராடாமல், இனவிடுதலைக்காகப் போராடத் தயாராகட்டும். பச்சோந்திகள் தூக்கியெறியப்படட்டும். விடுதலை ஒன்றே நம் இலக்காகட்டும்.

அ. விமலதாசன்


# ராமகிருஷ்ணாஸ்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மோட்டார் வாகன, லொறி, மீன்பிடி வள்ளம், டிராக்ரர், தண்ணீர்ப் பம் என்ஜின்களுக்கு :

"கிருங்சாவ்ற் கிறைன்டிங்" "சிலிண்டர் றிபோறிங்" "கெட்பேசிங்"

மற்றும் பலவித வேலைகள் தமிழ் பிரதேசத்தில் முதல் முதலாக ஆரம்பித்து நடாத்தும் ஸ்தாபனம்.



முன்னாள் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர்
டாக்டர் இ. மு. வி. நாகநாதன்
"கிறுங் சாவ்ற்" கிறைண்டிங் மெசினை ஆரம்பித்து வைக்கிறார்

# RAMAKRISHNAS

**STANLEY ROAD,** **JAFFNA**

**AUTHORISED "FORD" STOCKISTS AND DEALERS IN MOTOR PARTS.**

PHONE : 7179 GRAMS : GURUDEV

# மன்றத் தலைவரின் செய்தி

எமது மன்றத்தின் முதலாவது ஆண்டுமலர் வெளியீட்டையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன். இதுபோன்ற மலர்கள்தான் எமது கருத்துக்களை பரவலாக்குவதற்கு ஏற்றவொரு கருவியாக இருக்கின்றன. பலதரப்பட்ட கருத்துக்கள் மோதுவதன் மூலம்தான் உண்மை புலப்படும் சிந்தனை தெளிவுபெறும். எனவே எமது மலர் கூறும் கருத்துக்கள் எமது சமுதாயத்தின் சிந்தனையை தூண்டுவதாக அமைகிறது.

எமது வளாகம் ஆரம்பிக்கப்பட்டபொழுது இப்பகுதி மக்கள் அதனை சந்தேகக் கண்ணுடன் நோக்கினர். அவர்களினது சந்தேகத்திற்கும் காரணங்கள் இல்லாமலில்லை. மிகப் பெரும்பான்மையான தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், இப்பகுதிக்கு ஒரு வளாகம் தேவையென்று மக்கள் வலியுறுத்தியும் கிடைக்காதது தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களினது அனுமதி மிகவும் குறைக்கப்பட்ட நிலையில் கிடைத்ததும், அத்துடன் இப்பிரதேசத்தில் இயங்கிக் கொண்டிருந்த இரு மிகப்பெரிய கல்லூரிகள் சுவீகரிக்கப்பட்டதும் அவர்களினது சந்தேகத்திற்கு காரணங்களாய் இருந்தன. இது எவ்வாறுக இருப்பினும் எமது பிரதேசத்தில் உள்ள இவ்வளாகத்தின் வளர்ச்சிக்கு எம் இனத்தை பாதிக்காதளவில் வேண்டிய உதவிகளைச் செய்வதில் எமது மன்றம் உழைத்து வருகிறது.

தமிழ் மொழியைக் கற்று பட்டம் பெற்று அதனுலேயே தமது அந்தஸ்தையும் உயர்த்தி வாழ்க்கையை நடாத்தும் சிலர் ஓரிரு கட்டுரைகளையும், கதைகளையும் இலக்கணப்பிழையின்றி எழுதிவிட்டு தாம் தாம் தமிழை வளர்க்கின்றேமென்று தம்பட்டம்அடித்துக்கொண்டிருப்பது கவலைக்குரியது. அரசியல் காரணங்களினுல் எமது மொழி திட்டமிட்டு அழிக்கப்படுகின்ற வேளையில் அதனைக் காக்கவேண்டுமென்பது தெரிந்திருந்தும் சிறு கண்டனமேனும் தெரிவிக்காமல் இருப்பதுமல்லாமல், கண்டிப்பவர்களின் சிந்தனைகளுக்கு மாறுபட்ட அர்த்தம் கற்பித்து விமர்சித்துக் கொண்டிருப்பது விந்தைக்குரியது. சுயசிந்தனையுடன் நடந்துகொள்ள வேண்டிய இளைஞர்கள் சிலரும் இவர்களிடமிருந்து அற்ப சலுகைகளை எதிர்பார்த்து அவர்கள் வழியில் சென்று கொண்டிருப்பது வேதனைக்குரியது. தமிழ்மொழி இந்நாட்டில் தகுந்த அந்தஸ்துடன் இருந்தால்தான் தமிழைக் கற்கும் இளைஞர்களினது எதிர்காலம் சுபீட்சமாக இருக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சுவர் இருந்தால்தானே நாம் சித்திரம் வரையமுடியும்.

எமது மன்றத்தின் நோக்கம் ஒரு சிலரின் மனதைப் புண்படுத்துவதோ அன்றிக் கண்டிப்பதோ அல்ல, ஆனல் இனத்தின் நலனுக்காக அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்பதேயாகும். இனஐக்கியம், தேசியம் என்பன வெகுவிரைவில் ஏற்படும் என்று கூப்பாடு போடுபவர்களும் எம்மில் இருக்கத்தான் செய்கிறார்கள். காலப்போக்கில் அவர்கள் இப்போது சொல்கின்ற தேசியம், இனஐக்கியம் என்பதன் சாத்தியமற்ற தன்மையை உணர்ந்து ஈழத்தமிழரின் தேசியம், ஐக்கியம் என்பவற்றிற்கு குரல் கொடுக்கும் காலம் வருமென்பது எமது திடமான நம்பிக்கை. எனினும் இச்சிந்தனைத் தெளிவு வெகு விரைவில் ஏற்பட வேண்டுமென்பதே எமது பேரவா.

இறுதியாக ஒரு வார்த்தை! மன்றத்தின் வளர்ச்சிக்கு பல கருத்துடையவர்களும் பலவழிகளிலும் பங்குகொண்டு உதவியிருக்கிறார்கள் என்பதை நாம் மறக்கவில்லை. அவர்கள் அனைவருக்கும் நாம் என்றும் கடமைப்பாடுடையோம். இவர்களனைவரது உதவியுடனும் தொடர்ந்து எமது மன்றம் வளர்ச்சியுற்று தன்னால் இயன்ற பங்கை தனது இனத்திற்கு செய்யுமென்பதில் சந்தேகமில்லை.


**இ. சி. செல்வேந்திரன்**
தலைவர்
தமிழ் மன்றம், யாழ்ப்பாண வளாகம்


விடுதலை = அரசியற் சுதந்திரம்

+ பொருளாதார சமத்துவம்

+ சமூக சகோதரத்துவம்

விடுதலை ≠ அதிகாரக் கைமாற்றம்

# இலக்கியத் தேறல்

"நா. தர்மராசா"

தமிழ் இலக்கியமென்னும் கரை இல்லாக் கடலிலே மூழ்கி, முக்குளித்து எடுத்து வந்த முத்துக்களாம் கவிதைகள் சிலவற்றை தமிழன்பர்கள் முன்னிலையில் வைப்பதில் பெருமை அடைகிறேன். எனது செயல் கண்டு ஆய்ந்தறிந்த அருந்தமிழ்ச் சான்றோர்கள் இப்படியும் கூறலாம்.

''ஈயாடுவதோ கருடற் கெதிரே?
இரவிக் கெதிர் மின்மினியாடுவதோ?
நாயாடுவதோ வுறுவெம் புலிமுன்?
நரியாடுவதோ நரகேசரி முன்?
பேயாடுவதோ அழகூர் வசிமுன்?
.............................................
.............................................''

ஆனல் இலக்கியக் கடலில் நான் ஆழ்ந்து ஆய்ந்து எடுத்த சில நித்திலங்களை, எமக்கு ஆதரவாக ஒரு கவிஞன் பாடியிருக்கும் பாடல் தந்த துணிவினுல் முன்வைக்க விழைகிறேன்.

''கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர் கோகனதைப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில''

என்ற பாடலின்படி, 'சக்கரவர்த்தி இருக்கும் போது மன்னர்களால் என்ன செய்ய முடியும் என்று அவர்கள் எல்லோரும் கடலில் வீழ்ந்து இறப்பதில்லையே! அழகிய தாமரை மலரைக்கண்டபின்பும்கொட்டியும்ஆம்பலும் மலராதொழிவதில்லையே...' என்ற கருத்துப்படி மனத்துணிவு வரப்பெற்று, கவி இன்பத்தில் களிக்கவென்று உங்களையும் அழைப்பதில் மகிழ்வுறுகிறேன். வாரீர்! பாரீர்! வளமான கவிதைதனைத் தேரீர்!

### இரு பொருள் படப் பாடுதல்.

இரு பொருள்படப் பாடுவதிலே வல்லவராக விளங்குபவர் காளமேகப் புலவரே! அவரது வாயிலிருந்து வெளிவரும் கற்பனைச் சிதறல்களாம் கவிதைகள் எமக்குத் தேறலாகத் தித்திக்கின்றன. இரு பொருள்பட அவர் பாடும் பாடல்களில் சிலவற்றை உற்று நோக்கும்போது அவர் போன்ற கவிஞரைத் தமிழுலகம் பெற்றதே பாக்கியம் என்றுதான் கூறவேண்டும். காளமேகம், ''களியுந்திய கடலுப்பென்று நன்னூற் கடலில் மொண்டு வளியும் பொதிய வரையினிற் கால் வைத்து...'' பொழிந்த தேன் மழையில் சிறு துளியை மாந்திக் களிப்போமாக.

காளமேகப் புலவர் திருமலைராயன் என்னும் அரசனின் அரண்மனைக்குச் சென்றபோது அங்கிருந்த கவிராயர்களுக்கும், அவருக்கும் போட்டி மூண்டது. அந்தப் போட்டியில் அவர்கள் கூறியவற்றைவைத்து உடனுக்குடன் கவிதை பாடினுர் காளமேகம். அந்த நேரத்தில் அந்தக் கவிஞர்களில் ஒருவன், "கஞ்சி குடி'' என்று சிவபெருமான் மேல் சிலேடையாகப் பாடவேண்டுமென்று கேட்டபோது அவர் ''அதற்கும் மேலாகப் பாடுகிறோம்'' என்று கூறிப் பாடிய வெண்பா இது.

''நேற்றிரா வந்தொருவனித்திரையிற் கைப்பிடித்தான்
வேற்றுரரா னென்று விடாயென்றேன்— ஆற்றியே
கஞ்சிகுடி என்றான்; களித்தின்று போவென்றேன்.
வஞ்சியரே சென்றான் மறைந்து,

தன்னை ஒரு பெண்ணுகப் பாவித்துத் தனது கனவிலே ஒருவன் வந்து தனது கையைப் பிடிக்க, தான் அவனை வேற்றூரான் என்று எண்ணி ''விடாய்'' (விடமாட்டாயா) என்பதாகவும், அதனை அவன் ''விடாய்'' (தாகம்) என்று நினைத்து கஞ்சியை ஆற்றி அவள்தாகத்தைத் தீர்ப்பதற்காக ''கஞ்சிகுடி'' என்று கூறியதாகவும் தானே அவன் ''கஞ்சிகுடி'' என்பதை காஞ்சிப்பதியில் குடியிருக்கும் இறைவன் என்று அர்த்தங்கொண்டு ''களித்து இன்று போ'' என்று (என்னைக் கூடிக்களித்து செல்வாயாக) என்று கூறியதாகவும் ஆனல் அவனே அதை, தான் ''கஞ்சிகுடி'' என்று சொன்னதற்

குப் பரிகாசமாக ''களிதின்று போ'' என்று கூறுகிறளே என்று எண்ணி மறைந்து விட்டானும். இப்பாடலில் ''விடாய்'' ''கஞ்சி குடி'' ''களித்தின்றுபோ'' என்ற மூன்று சொற்களும் இருகருத்துப்பட வருவதைக் கண்டு களிப்படைகிறேம். ''ஆற்றியே'' என்ற சொல்லுங்கூட ஒரு கருத்தில் ''சாந்தப்படுத்தி'' என்றும் இன்னெரு வகையில் ''ஆறச்செய்க'' என்றும் வருவதைக் காணலாம். எனவே இங்கு ''களித்தின்று'' தொடருவோம்.

திருமலைராயனின் இன்னெரு கவிஞர் காளமேகப் புலவரிடம் சிவபெருமானுக்கும், முருகனுக்கும், விநயகருக்கும் மகா விஷ்ணுவுக்கும், சிவனடியார்க்கும் தனித்தனியே ஆறு தலை உண்டென்று பாடும்படி கேட்க அவர் ஒவ்வொரு ''ஆறுதலை''க்கும் வேறு கருத்து அமையப் பாடினர்.
பாடல் :

''சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு
மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை யானவே—சங்கைப்
பிடித்தோற்கு மாறுதலை பித்தனர் பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார்''

இங்கு சிவபெருமானுக்கு ஆறுதலையில் இருப்பதைக் குறித்தும் (ஆறு-நதி) முருகனுக்கு ஆறுதலை இருப்பதாகவும், விநயகருக்கு மாறுதலையும் (வித்தியாசமான தலை) மகாவிஷ்ணுவிற்கு பிரளயமாகிய உறைவிடமும், சிவபெருமானின் பாதத்தைப் படித்த சிவனடியார்களுக்கும் ஆறுதலை (ஆறுதல்)ப் பார் எனப் பாடினர்.

கலிங்கத்துப் பரணி என்னும் நூலிலே சயங் கொண்டாரும் ஒரு சொல்லுக்கு இரு பொருள் வைத்துப் பாடியுள்ளார். அதனையும் இங்கு கவனிப்போம். கடை திறப்புப் பாடலாக அமைந்த அப்பாடல் இதுதான்.

காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர் களற் சென்னி
காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
களப் போர் பாடத் திறமினே !

இங்கு முதலில் வரும் ''காஞ்சி'' ஆபரணங்களையும் ''கலிங்கம்'' ஆடைகளையும் குறிப்பனவாயும், பின்னர்வரும் ''காஞ்சி'' காஞ்சி நகரையும், கலிங்கம் கலிங்க நகரையும் குறிப்பது விளங்குகிறது.

இதே விதத்தில் தற்கால நடையில் ஒரு புலவர் ''திருமுகம்'' என்பதற்கு ''கடிதம்'' என்ற கருத்தும், ''அழகிய முகம்'' என்ற கருத்தையும் வைத்து கீழ்வருமாறு பாடினர்

'' கருவிழிக் கன்னி எந்தன் கருத்தினைக்
கவர்ந்தே அன்றோர்
'' திருமுகம் '' விடுத்தனுப்பிச் சிரித்திட்
டாள் சிந்தைகூர, அந்தக்
கருமுகில் கிளித்து மீழம் கதிரவன் அன்ன
மங்கை
திருமுகம் நோக்கி யானும் திருமுகம்
அனுப்பிவைத்தேன்''

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கம்பர் இராமாயணத்தில் ஒரு பாடலில் ஒரு சொல்லுக்கு நாலு கருத்து வருமாறு பாடியுள்ளது மிகவும் சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது.

சுந்தர காண்டத்தில் இலங்கையைக் காக்கும் தெய்வம் அனுமானை நோக்கி வந்ததனைக் காட்டும் இடத்தில் கீழேவரும் பாடலைக் காணலாம் '' அஞ்சுவண்ணம் '' என்ற சொல்லே நாலு அடிகளிலும் வந்தாலும் நாலுவிதமான கருத்திலேயே அச்சொல் பிரயோகிக்கப் பட்டிருப்பதைக் கவனிக்கலாம்.

'' அஞ்சுவணத்தின் ஆடையுடுத்தாள்
அரவெல்லாம்
அஞ்சுவணத்தின் வேகமிகுந்தாள்
அருளில்லாள்
அஞ்சுவணத்தின் உத்தரியத்தாள்
அலையாரும்
அஞ்சுவணத்தின் முத்தொளிரார்த்
தணிகொண்டாள் ''

இங்கு முதலடியில் ஐந்து வர்ணத்தின் என்றும் இதன் இரண்டாவது அடியில் அஞ்சும்—உவணத்தின் என்றும் (இங்கு உவணம் என்பது கருடன்). மூன்ருவது அடியில் அம் சுவணத்தின் என்றும் (இங்கு அழகிய சுவர்ணம்—பொன்) ஈற்றடியில் அம்—சுவள்— நத்தின் என்றும் (இங்கு அழகிய நத்தையிலிருந்துஎடுக்கப்படும் முத்தின்) நாலு விதமாக பொருள்படுகிறது. இவ்வகையாகக்

கவிஞர்களின் வாயிலிருந்து வெளிவரும் கவிதைத் தேறல் சுவைப்போர்க்கு இனிமையாக இருப்பதில் வியப்பில்லையன்றோ.

இனி இன்னுமொன்றையும் நோக்குவோம். குலோத்துங்க சோழன் பாண்டியனின் மகளைத் திருமணஞ் செய்தபோது பாண்டியன் தனது அவைக் களப் புலவரான புகழேந்திப் புலவரைச் சீதனமாகக் கொடுத்தார். குலோத்துங்க சோழனின் குருவாகிய ஒட்டக்கூத்தர் தனதுபொறுமையால் புகழேந்திப் புலவரை சிறையில் அடைத்து வைத்தார். அந்தக் காலத்தில் நாட்டில் யாராவது ''கவிஞன்'' என்று ஏதாவது பாடினுல் அவனை ஒட்டக்கூத்தர் அழைத்து அவனது திறமையைச் சோதித்து சிரச்சேதம் செய்து வந்தார்..........இதனை

............................................

இரண்டொன்று முடிந்து தலையிறங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை

............................................

என்ற அடிகளால் தெளியலாம். ஒட்டக்கூத்தரின் ஆணைப்படி பிடிக்கப்பட்ட சில கவிஞர்களும் புகழேந்தியாரோடு சிறையில் வாடினுர்கள். ஒட்டக் கூத்தர் சிறையில் உள்ள கவிஞர்களைக் காணவருவதை அறிந்து புகழேந்திப் புலவர் எல்லாக் கவிஞர்களுக்கும் நல்ல பயிற்சி அளித்து ஒட்டக்கூத்தருக்கு நல்ல பதிலடி அடிக்க எண்ணி அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றுர்.

அங்கு வந்த ஒட்டக்கூத்தர் ஒரு ''குயவனை'' அழைத்து அவனைப்பற்றி விசாரிக்க எண்ணித் தன்னைப்பற்றி மிகவும் பெருமையாக,

''மோனை முத்தமிழ் மும் மதமும் பொழி
ஆனை முன்வந் தெதிர்த்தவன் ஆரடா?''

என்றுர். அதற்கு அந்தக் குயக் கவிஞன்
கூனையுங் குடமுங் குண்டு சட்டியும்
பானையும் பணுமங்குசப் பையல் யான்''

என்றுன். இங்கு ஈற்றடியில் அங்குசப் பயல் என்பது யானையை அடக்கும் அங்குசத்தை வைத்திருப்பவனைக் குறிக்கிறது. ஆனுல் வேறு கருத்தில் பானையும் பண்ணும் அங்குசப்பையல் என்றும் மாறுபடுகிறது.

இத்தகைய கவிதைத் தேறலில் சிறிதளவை மாந்திக் களித்துக் கொண்டிருந்த உங்களுக்கு இன்னும் அருந்தவேண்டுமென்று இயற்கையே. தேறல் — தேன் — மது எனவே மது அருந்துபவர்கள் ஆரம்பத்தில் சுவைக்கமாட்டார்கள். ஆனுல் சிறிதளவு அருந்திவிட்டால் தொடர்ந்து அருந்திக் கொண்டே இருப்பார்கள். அதன்படி சிறிதளவு இலக்கியத் தேறலை அருந்திய நாமும் தொடர்ந்து அருந்தி ஆனந்திப்போமாக.

★

## செல்லாக்காசு

'கண்ணன்'

வீட்டு முகப்பிலிருந்த கதிரையில் கவலையோடு அமர்ந்திருந்தேன்
எனது மருமகன் — அக்காமகன் — என்னருகில் ஓடிவந்தான்
'மாமா ... மாமா ...' என்றுன்
நான் ''என்னடா !! என்றேன்.
''ஏன் மாமா ஒரு மாதிரி இருக்கிறீங்கள்...'' என்றுன்
''இல்லேடா ... இந்தக் காசிலே 'தமிழ் வாழ்க' எண்டு எழுதிப் போட்டாங்கள்'' என்றேன்
''அதுக்கு...''
'' இந்தக்காசை செல்லாதெண்டு சொல்லிப்போட்டான் '' என்றேன்
மருமகன் என்னருகில் தரித்து நின்றுன் : பிறகு கேட்டான்
'' ஏன் மாமா தமிழ்வீழ்க எண்டு எழுதினு செல்லுமெண்டு சொல்லுவாங்களோ''
நான் '' ஓமடா சொன்னுலும் சொல்லுவாங்கள் ...'' என்றேன் அவனை அருகில் இழுத்து முத்தித்தேன்.

சாய்ப்புச் சாமான்கள்

★ பட்டு

★ பருத்தி

★ நைலோன்

★ சிந்தட்டிக்

★ கைத்தறி

★ வோயில்

சேலைகளுக்கும்

★ சேட்டிங்

★ சூட்டிங்

★ றெடிமேட்

★ சிறுவர்

உடைகளுக்கும்

இதர பிடவை வகைகளுக்கும்

# இராசமலர் களஞ்சியம்

79, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி: 494

# 'நிரபராதிகள் - நியாயம் தேடுகிறார்கள்'

— செல்வி மாலினி கந்தசாமி —
( விஞ்ஞானம் 2-ம் வருடம் )

கீழ்வானில் அக்கினிக் குழம்பாகக் கனன்று கொண்டிருக்கும் கதிரவனைப் பார்த்தபடி நடந்துகொண்டிருந்தான் தேவராஜன். அவன் உள்ளம் அதைவிட மோசமாகக் கொதித்துக் கொண்டிருந்தது.

'அவர்கள் நம்மைப் பற்றி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? குட்டக் குட்டக் குனிகின்ற முட்டாள்களல்ல நாம் என்பதை இம்முறை அவர்களுக்குக் காட்டத்தான் வேண்டும்.

தொழிற்சாலை வாயிலை தேவராஜன் அடைந்தபோது பெரிய கூட்டமொன்று அவன் வரவுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. அந்தத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் 'தமிழ் ஊழியர் மன்றத்தின்' தலைவனாக பொறுப்பேற்றிருந்தான் தேவராஜன். 'வர்க்கப் பிரச்சனைகள்தான் கலவரங்களுக்கு முக்கிய காரணமென்றாலும் அதனால் பாதிக்கப்படுவது முக்கியமாகத் தமிழ் இனமாகவே இருக்கின்றதே! அது ஏன்?' இந்தக் கேள்வி பல ஊழியர்களிடம் இப்போது பொங்கிக் கொண்டிருக்கிறது.

இதுவரை மொத்தமாக நான்கு தமிழ் ஊழியர்கள் அந்தத் தொழிற்சாலையை விட்டு நீக்கப்பட்டிருந்தார்கள். மூன்று பேர்கள் நீக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகிறது. ஒருவன் -சண்முகம்- நீக்கப்பட்டு ஒரு மாதமாகிறது. இவர்களெல்லாம் நீக்கப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் எதுவாயிருந்தாலும் அவர்கள் வெளியே காட்டிய காரணம், பணம் கையாடல், சிங்களம் படிக்கவில்லை என்பதே! அது உண்மை தானா? என்று ஆராய்வதை விட இது அநியாயம்? என்று பொங்கியெழுந்து 'நமக்கு நியாயம் வேண்டும்' என்று அமைதியாகக் கோரிக்கை விட்டு நேற்றோடு ஒரு மாதம் முடிந்து விட்டது. இன்று?

தன் சக ஊழியர்களைப் பார்த்து ஒரு கணம் தன்னை நிதானப்படுத்திக் கொண்டான் தேவராஜன்.

நான் உங்களுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. பேச்சு வார்த்தைக்கு இணங்கி வரவேண்டும் என்று நாம் கொடுத்த அவகாசம் நேற்றோடு சரியாகி விட்டது.

முதல் முறை நமது நண்பனொருவன் வேலையை விட்டு நீக்கியபோது அமைதியாக இருந்தோம். பயந்து அல்ல! கலகத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக'

''இரண்டாவது முறையும் காரணம் கேட்டு விட்டு அமைதியாகி விட்டோம். அவர்கள் அடித்துக் கலைத்தபோதும் மௌனமாகி இருந்தோம்! அடிக்கத் தெரியாமலல்ல.. அமைதியை விரும்பியதால்! ஆனால் அவர்கள் நம்மைப் பற்றித் தப்பாக நினைத்து விட்டார்கள் என்று நமக்குப் புரிகிறது. மேலும் இருவரை வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள். அவர்களில் ஒருவன் குடும்பப் பாரம் பொறுக்கமுடியாமல் தற்கொலை செய்து கொண்ட கதையை நாம் மறக்கமுடியாது! எனவே 'வேலையை விட்டு நீக்கிய தமிழ் ஊழியர்களைத் திரும்பவும் வேலைக்குச் சேர்க்க வேண்டும்' என்று கோரி இன்று நமது அடையாள வேலை நிறுத்தம் நடைபெறட்டும். ஒரு மாத அவகாசத்தின் பின்னும் அவர்கள் நியாயம் வழங்க மறுத்தால் நியாயம் கிடைக்கும் வரை வேலை நிறுத்தம் தொடரும்''

* * *

காற்றில் மிதப்பது போலப் பறந்து வந்த மனேஜர் விஜயவீராவின் கார் தொழிற்சாலையில் நுழைகிறது. அதைத் தொடர்ந்து உதவி மனேஜர் ஏகாம்பரத்தின் கார் நுழைகிறது. கட்டவிழ்த்து விட்ட வெள்ளம் போல தொழிலாளர்களின் குரல்கள் கோசமிடுகின்றன. தர்மத்தின் குரலாய் - நியாயத்தின் குரலாய்-சத்தியத்தின் வெப்பத்தைப் போல் ஓங்கி ஒலிக்கின்ற அவர்களின் நேர்மைக் குரல்களினால் கலங்காதவர்களாக இருவரும் தொழிற்சாலையினுள் நுழைகிறார்கள்.

விண்ணைப் பிளந்து நியாயம் பெறுவோம் என்பதைப் போல் அவர்கள் வான்முட்டக் கோசமிடுகிறார்கள்.

'நமக்கு நியாயம் வேண்டும்'

'வேலை நீக்கிய ஊழியர்களை மீண்டும் வேலையில் சேர்'

'நமக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான பதவி உயர்வுகள் நமக்குத் தேவை'

'நாங்கள் இனத் துவேசிகளல்ல!...வர்க்க பேதங்கள் நமக்குத் தேவையில்லை!...நமக்கு நியாயமே வேண்டும்!'

அவர்கள் குரல் ஓங்கி ஓங்கி ஒலிப்பதை மனேஜர் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

* * *

வாசற்படியில் இருந்தபடியே நாடியில் கைவைத்தபடி வெற்றுப்பார்வை பார்த்தபடி இருந்தான் சண்முகம். அவனை வேலையை விட்டு நீக்கி இரண்டு மாதமாகி விட்டது. அதற்கு முடிவு ஒன்றும் கிடைக்கவில்லை. தலைவர்கள் பேச்சுவார்த்தைக்கு இணங்கி வரவே இல்லை.

'என்னை வேலையை விட்டு நீக்க அப்படி என்ன தப்புச் செய்தேன்... அவன்'... ஆழ்ந்து சிந்தித்தான்.

'போனமுறை நம் நண்பனொருவனை வேலையை விட்டு நீக்கியதற்காக வேலை நிறுத்தம் செய்யத் தூண்டினேனே! அதற்காகவா ?'

நியாயமான பதவி உயர்வு நமக்குக் கிடைக்க வேண்டும் என்று எல்லோரையும் கேட்க வைத்தேனே! அதனாலாக இருக்கலாம்'

'மனேஜருக்குப் பிடிக்காத அரசியல் கூட்டங்களில் ஈடுபட்டு போராட்டங்களில் ஈடுபடுவதனால் அவருக்குப் பிடிக்காமல் போயிருக்கலாம்.'

கதவு திறக்கும் ஒலிகேட்டு அவன் நிமிர்ந்தான். அவன் மனைவி செல்லம் வந்து கொண்டிருந்தாள். பாவம்! அவள். அவனை வேலையை விட்டு நீக்கிய பின்னால் அவளது நகைகள் ஒவ்வொன்றாக அடைவு கடைக்குப் போய்க்கொண்டிருக்கின்றன மற்ற மனைவிகளைப்போல் உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு என்ன சுகத்தைக் கண்டேன்? என்று அவள் மூக்கைச் சிந்தவில்லை. அந்த வரையில் அவன் பிழைத்தான்.

மனைவியினதும் பிள்ளைகளினதும் கண்ணீரைப் பார்த்துச்சகிக்காமல் தற்கொலை செய்து கொண்ட நண்பனொருவனை நினைத்த போது அவனுக்கு நெஞ்சில் இரத்தம் கசிந்தது. 'ஆனால் நான் ஒரு கோழையைப் போல் தற்கொலை செய்யமாட்டேன். நியாயம் கிடைக்கும்வரை நான் போராடித்தான் தீருவேன்', அவன் உடலைச் சிலிர்த்துக் கொண்டான்.

இந்தநேரம் பார்த்துத்தான் அவர்கள் குடும்பத்தில் தேவைகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. பிள்ளைகளுக்குப் புத்தகம், சம்பளப்பணம், என்று வரும் செலவுகளை மனைவியே நகைகளை அடைவு வைத்துச் செலவு செய்தாள். அவன் நெஞ்சில் சுமையோடு மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பான்.

'செலவைக் குறைப்பதற்காக ஒருமைல் தொலைவிலுள்ள பாடசாலைக்கு நடந்து போகும் பிள்ளைகள்'...

'பால் குடிக்கப் பிடிக்கவில்லையென்று பாலையே நிறுத்திவிட்ட பிள்ளைகள்'...

'சில குழந்தைகளுக்குரிய சிறிய ஆசைகளைக் கூட நிறைவேற்ற முடியாமல் தவிக்கும் மனைவியின் கண்ணீர்'...

'என் செல்வங்களே'! என்று உதடு துடிக்க...உள்ளம் வெடிக்க..அவன் அவர்களை அணைத்துக்கொண்டு ஆறுதல் சொல்லும் போது நெஞ்சில் இரத்தம் கசியும்

சண்முகம் நிமிர்ந்து மனைவியைப்பார்த்தான். அவள் மூக்கின் ஓரங்களிலும் கன்னத்திலும் ஓடுவது என்ன இரத்தக் கண்ணீரா? அவன் நெஞ்சிலும் அவனைப்போல் இளைஞர்களின் உள்ளத்திலும் வடிகின்ற செந்நீரின் சின்னமா அது? நெற்றியிலிருந்த குங்குமம் வியர்வையில் கரைந்து ஓடிக் கொண்டிருந்தது.

எங்காவது வெளியே போய்விட்டுவரும் போது 'சாப்பிட்டு விட்டேன்' என்று அவனும், 'பசிக்கவில்லை', என்று அவளும் அரைப்

பட்டினி கிடப்பது சாதாரணமாகிவிட்டது: 'பாவம்! அவளுக்கு எத்தனை பொறுமை' என்று அவனும் 'பாவம்! அவருக்கு எத்தனை பொறுப்பு?' என்று அவளும் தமக்குள்ளே உருகிக் கொள்வார்கள். தியாகங்கள்தானே அன்பின் அவதாரம்! புறச்சூழல்களாலே அவர்களுடைய அன்பு குறையயில்லை.

''கொடுமைகளும் அநியாயங்களும் ஒரு போதும் வெல்லாது, என்று சொல்வாயே செல்வம்! ஆனால் என் விசயத்தில் அது பலிக்கவில்லையே பார்த்தாயா?'' ஒருநாள் அவன் மனைவியிடம் சொன்னான்.

''கொடுமைகள் வெல்லுறதுபோலத் தோன்றலாம் ஆனால் கொடுமைகள் ஒரு நாளும் வெல்லாது'' அவள் உறுதியாக மறுத்தாள்.

''நாங்க ...... எவ்வளவு காலமாக நமக்குரிய உரிமைகளுக்காக போராடுகிறோம் தெரியுமா? ஆனா... நாங்க பாதிக்கப்படுறது இன்னும் குறையேல்லையே! எனக்குத் தெரிய எத்தனைபேரை வேலையை விட்டு நீக்கியிருக்கினம்!...எத்தனையோபேர் நியாயமான பதவி உயர்வு கிடைக்காமல் எந்த வேலையில் போனாங்களோ, அந்த வேலையிலிருந்தே இன்னும் போராடுகினம். தனக்குக் கிடைக்கவேண்டிய பதவி உயர்வு கிடைக்கேல்லையெண்டு ஒருத்தன் 'வேலையே வேண்டாம்' எண்டு உதறிப்போட்டு வந்தான்... ஆனா! அவன்ர திறமையைக் கேள்விப்பட்டு ஒரு கொம்பனி தானாய் அவனை வேலைக்குக் கூப்பிட்டது...''

''நல்லவங்களுக்கு எப்போதும் நன்மைதான் கிடைக்கும். நீங்க நினைக்கிறதைப் போல கொடுமைகள் வெல்லாதுங்க''

''அப்படியானா...மற்றவங்க எல்லாரும் நல்லவங்களில்லை என்று சொல்கிறாயா செல்வம். 'தராதரப்படுத்தல்' என்ற முறை வந்ததாலே எத்தினைபேர் உயர் படிப்பு இல்லாம ரோட்டில சுத்துகினம் எண்டு உனக்குத் தெரியுமா செல்வம்? வசதி இருக்கிறவங்க தங்க பிள்ளைகளை வெளியிலே அனுப்பி படிப்பிக்கலாம். ஆனா ஏழைகள் என்ன செய்யமுடியும்? அவங்களிட்ட இருக்கிறது பணம் இல்லையே' பண்புதானே''

''அதெல்லாம் சரி என்று நான் சொல்லேல்லையே! நமக்குரிய நியாயங்கள் நிச்சயம் நமக்குக் கிடைக்காமல் போகாது! ஏனென்றால் நாம் நிரபராதிகள்...நாங்க குற்றவாளிகளல்ல!

''நாங்கள் நிரபராதிகளென்றதாலே தான் நியாயத்தைத் தேடுகிறோம். நமக்குக் கிடைக்கவேண்டிய நியாயம் கிடைக்குமெண்டுதான் நாங்க பொறுத்திருக்கிறோம். நியாயம் கிடைக்காட்டி, நாங்களே நியாயத்தைத் தேடிப் போவோம்: அது தான் என் கொள்கை'' என்று சொல்லிவிட்டு அவன் அமைதியானான்.

* * *

''நீங்கள் யோசித்துப் பாருங்கள்...... மிஸ்டர் தேவராஜன் புதிய பதவி... உங்கள் வசதிக்கு புதிய கார் இப்போ உங்கள் சம்பலத்திலும் மூன்றுமடங்கு அதிக சம்பலம்''... தன்னுடைய அரைகுறை தமிழ் அறிவையும் ஆங்கில அறிவையும் கொண்டு தான் நினைப்பதை அவனுக்குப் புரியவைக்க முயன்றார் மனேஜர்.

''உங்களுக்கு இங்கேயே வேலைசெய்ய விருப்பமில்லாவிட்டால் வேறு இடத்துக்கு மாற்றி விடுகிறோம்'' உதவி மனேஜர் பக்கப்பாட்டுப் பாடினார்

தேவராஜனுக்குச் சினம் பொங்கியது. 'ஓ! பதவியையும் பணத்தையும் காட்டி என்னை விலைபேசுகிறீர்களா? உங்களால் முடியுமா அது?

''மௌனம் சம்மதத்தின் அறிகுறியென்று எடுத்துக்கொள்ளலாமா? மிஸ்டர் தேவரா-ஜன்.'' என்று கேட்டார் உதவி மனேஜர்.

''இல்லை... இல்லை... மௌனம் கலகநாசம் என்றும் ஒரு பொருளுண்டு அதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்'' அவன் சினத்துடன் சொன்னான்.

''இல்லை... நீங்கல் அவசரப்படாமல் யோசியுங்கல், இந்த வசதிகளை உங்கலால் எப்போதாவது பெறமுடியுமா? உங்கல் முடிவை நாலைக்குச் சொல்லுங்கல்'' என்று சொன்ன படியே உதவி மனேஜருடன் அவ் இடத்தை விட்டு நகர்ந்தார் மனேஜர்.

'என்ன ஒரு தைரியம் என்னை இப்படிக் கேட்டுவிட்டுப் போவார்கள்'? தனி மனிதன் வாழவும் மற்றவர்கள் துன்புறவும் தான் எங்கள் வேலைநிறுத்தம் நடப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?... இல்லை! எங்களுக்கு நியாயம் வேண்டும்!... நியாயம்தான் வேண்டும்! பதவிகளும் பணமுமல்ல,'' அவன் வேகமாக எழுந்து உதவிமனேஜர் அறையைவிட்டு வெளியேறினன்.

வேலை நிறுத்தத்தினுல் ஏற்படப் போகும் மோசமான பொருளாதார நட்டத்தை தடுப்பதற்காக தேவராஜனைச் சமாளிக்க முயன்ற மனேஜர் அவனுடைய 'வணங்காமுடித்' தன்மையைக் கண்டு உள்ளூரக்கலங்கினுர். சே! வரவர இவங்களால பெரிய தொல்லையாப் போச்சு!... எல்லாரையும் நீக்கிப் போட்டுப் புது ஆட்களைச் சேர்க்க வேணும்!' அவர் மேலிடத்து ஆலோசனைக்காக விரைந்தார்.

வீதியில் வேகமாக வந்துகொண்டிருக்கிருன் தேவராஜன். எதிரில் வருகின்ற அவன் நண்பர்கள் அவனைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக்கொண்டு போகிருர்கள். 'ஏன்? ஏன்? அவர்கள்தானே அவனை சங்கத் தலைவனுக்கினுர்கள்!...... அவர்கள் தானே அவனைத் தங்கள் வழிகாட்டியென்று நம்பினுர்கள்!... இப்போது மட்டும் முகத்தைத் திருப்பிக்கொண்டு போகிருர்களே! ஏன்?''

''அடேய்.....கருங்காலி'', யாரோ கூச்சலிடுகிருர்கள்.

''யார் கருங்காலி? நானு?...... நான் தானு?'' அவன் திடுக்கிட்டு விழித்துக் கொள்கிருன். 'சே! நானுவது கருங்காலியாவது... ஆனுல் என்னைக் கருங்காலியாக்கத்தானே அவர்கள் முயன்றுர்கள்.... அவர்களுக்கு எங்கள் வலிமையைக் காட்டத்தான் வேண்டும்!' எண்ணங்கள் உறுதியாக அவன் கால்களைப் பிடித்துத்தள்ள அவன் எழுந்து கிணத்தை நோக்கி நடந்தான்.

பத்து நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை நிறுத்தத்தினுல் தொழில்கள் எதுவும் முடியாமல் தேங்கத் தொடங்கின. 'நாமென்ன இவர்களுக்குப் பணிவது?' என்ற நிலைமாறி 'நாம் ஒரு சமரச நிலைக்கு வரத்தான் வேண்டும்' என்ற நிலை உருவாகி விட்டது. மனேஜரும் உதவி மனேஜரும் அவசர அவசரமாக மேலிடத்து உதவியை நாடினுர்கள். 'இனிப்பொறுக்க முடியாது' என்று கண்டபின் இரு அதிகாரிகளை பேச்சு வார்த்தைக்காக அனுப்பி வைத்தார்கள்.

அதிகாரிகள் தொழிற்சாலை வாயிலை அடைந்தபோது தொழிலாளரின் தீவிரத்தைக் கண்ணுலே கண்டார்கள்.

'நமது உரிமைகள் நமக்குத் தேவை'

''கொடுமைகள் தாமே அழியும் என்று காத்திருந்தோம்... அழியவில்லை... கொடுமைகளை அழிக்க நாமே புறப்பட்டு விட்டோம்''

''நாங்கள் இனத் துவேசிகளல்ல'...... எமக்குரிய நியாயமான உரிமைகளை நாம் இழக்கத் தயாரில்லை''

''நியாயம் நமக்குக் கிடைக்கும் என்று காத்திருந்தோம் கிடைக்கவில்லை!...... நாமே நியாயத்தைத் தேடிப் புறப்பட்டுவிட்டோம்!''

'மனித உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள்'

அவர்களுடைய அக்கினி தெறிக்கும் வார்த்தைகளினூடாக நடந்தபோது அதிகாரிகளுக்கு உடல் சிலிர்த்தது. மௌனமாக அவர்களுக்குக் கையமர்த்திவிட்டு ஆலோசனை அறையினுள் புகுந்தார்கள். தொழிலாளர்கள் மௌனமாக — ஆவலோடு தமது கோரிக்கைகளிலுள்ள நியாயத்தை எண்ணி — நமக்கு நியாயம் கிடைக்கும் என்று நம்பி — அவர்கள் பதிலுக்காகக் காத்திருந்தார்கள்.

★

# "பண்டாரவன்னியன்"

— புங்கையூர் ராஜ்குமார் —

—1—

தாய் நாட்டு மண்காக்க இறுதிவரை
போராடி உயிர்துறந்த மன்னர்களைத்
தாய் நாட்டின் மக்களே மனத்திருத்தும்
எண்ணமின்றி மறந்து விட்டார்,
நம் நாட்டின் சரித்திரம் படைத்தவர்கள்
திட்டமிட்டு மறைத்தனரோ அன்றித்
தம்பாட்டில் சரித்திர நாயகர்கள்
தாமாக மறைந்தனரோ யார் அறிவார் ?

—2—

கண்டார் கதி கலங்கி ஓடும் வண்ணம்
வலி படைத்து வாழ்ந்து வந்த
பண்டார வன்னிய னென்னும்
பேர்படைத்த மன்னனவன்
பறங்கிகளின் சொற்கடங்கி கைகட்டி
வாய்பொத்தி வாழ்ந்திடாது
புறங்காட்டி ஓட வைத்த ஈழத்தின்
தனிப்பெரும் மன்னனுவான்.

—3—

கதிரவனே மறையாத இராச்சியத்தின்
நன்றி மிக்க விசுவாசிகள்,
கதிரதனின் சுமையதனல் தலைவணங்கும்
நெல்வளமும் மட்டுமன்றி,
யானைகளும் குதிரைகளும் மற்றும் பல
வற்ருத கனிவளமும் அகத்தே கொண்டு
சேனைகளும் பலபடைத்த வன்னிநகர்
தமதாக்கும் எண்ணம் கொண்டார்.

—4—

மறங்காக்கும் பரம்பரையில்
வந்தவர்தான் வன்னியர்கள்,
அறங்காக்கும் பண்பும் அவர்களிடம்
நிறைய உண்டு
யாழ்ப்பாண இராச்சியத்தைத் தமதாக்கிச்
சுவைகொண்ட ஆங்கிலேயர்,
காழ்ப்பாண எண்ணமுடன் வன்னியரைத்
திறைகொள்ளத் தூது விட்டார்.

—5—

வானமும் பொழிகின்றது பூமியும் விளைகின்றது
என்று மொழியுரைத்த மன்னன்
தானமாய் வேண்டுமென்று பறங்கிப்படை
என்னிடத்து இரந்து நின்றால்,
அள்ளியள்ளித் தந்திடுவேன், அதுவன்றித்
திறைவேறு கேட்டாயானால்
பள்ளியறையில் நீ காணும் கனவிற்கூட
திறை கொடுக்க மாட்டேனென்றான்.

—6—

சீறுகின்ற துப்பாக்கிக் குண்டுகளும்
பீரங்கிப்படைகளும் கொண்டதம்மை
வீறுகொண்டு வெறும் வாட்படையும்
வேற்படையும் மட்டும்கொண்டு
எதிர்த்திடத் துணிந்து நின்ற பண்டார
வன்னியனைத் தாக்க எண்ணி,
எதிர்ப்படை நடத்திச் சென்றான் பறங்கித்
தளபதி வொன் றிபேக் என்பவன்.

—7—

கூலிகாக்க மாரடிக்கும் கூட்டத்தைச்
சேர்ந்த அந்தப் படைகளெல்லாம் தாய்நாட்டு
வேலிகாக்கப்போராடும் மறக்கூட்டத்தின்
வாளினதும் வேலினதும் தாக்கம்கண்டு
புறங்காட்டி ஓடுகின்ற தளபதிமேல் ஈட்டியொன்றை
எறியநின்ற வீரனையும் போர்க்களத்து
அறங்காட்ட நினைத்த மன்னன்
தடுத்து, தப்பிப் போக விட்டான்.

—8—

காக்கை வன்னியனென்னும் களங்கம்
கொண்ட கயவனின் துணையைக் கொண்டு
யாக்கை பெரிதென்றெண்ணி தப்பி
ஓடி வந்த தளபதியும் திட்டமிட்டு
மூன்று பெரும் படையினை முத்திசையில்
இருந்தும் நடத்திவந்து நாட்டின்
ஊன்று கோலாய் நின்றவனைக்
கைதியாக்கி நடத்திச் சென்றான்.

—9—

நீதிமன்றின் கூண்டினுள்ளே சங்கிலியால்
பிணைக்கப்பட்ட நிலையிற்கூட
நீதியற்ற மன்றமிது என்றுரத்துச்
சத்தமிட்டான் வன்னிமகன்,
திறை தந்தால் மன்னிப்பு உண்டென்றாலும்
திறைசெலுத்த மறுத்து நின்ற மன்னவன்
முறையற்ற முறையிலே துப்பாக்கியால்
சுடப்பட்டு மண்ணில் வீழ்ந்தான்.

—10—

இறுதியாக இறக்கின்ற வேளையிலும்
இரத்தத்தின் நடுவிலே துடித்தபோதும்
அறுதியாக அவன் உரைத்திட்ட வாசகங்கள்,
ஒரேயொரு பண்டார வன்னியரை நீர்
அழித்திட்டபோதும் அவன் இரத்தத்தின்
ஒவ்வொரு துளியிலும்
துளிர்த்திடும் ஆயிரமாயிரம் பண்டார வன்னியரை
நீங்கள் அழித்திட முடியாது.

உலகில்

# சிலநாடுகளும் நம்நாடும்

| பெயர் | சனத்தொகை (000) | விஸ்தீரணம் சதுர மைல் | ச. கி. மீ. | சுதந்திரம் அடைந்த ஆண்டுகள் |
|---|---|---|---|---|
| கேப்வேடித் தீவுகள் | 284 | 1557 | 4033 | |
| காம்பியா (Gambia) | 493 | 3977 | 11295 | 1965 |
| மொறிசியஸ் | 868 | 720 | 2045 | 1968 |
| சுவாசிலாந்து | 463 | 6705 | 17363 | 1968 |
| சீ செல்ஸ் (Seychellas) | 56 | 100 | 259 | |
| பார்படோஸ் (Barbados) | 243 | 166 | 430 | 1966 |
| ஜமேக்கா (Jamaica) | 1976 | 4411 | 10962 | 1962 |
| றினிடாட் அன் ரொபாக்கோ (Trindad and Tabago) | 1064 | 1980 | 5128 | 1962 |
| ப்பாகிறெயின் (Bahrain) | 227 | 231 | 598 | |
| சைப்பிரசு | 659 | 3572 | 9251 | 1960 |
| குவெய்த் (Kuwait) | 883 | | 16000 | |
| லெபனுன் | 3055 | 3400 | 10400 | 1941 |
| தமிழ் ஈழம் | 3500 | 6677 | 17293 | ? |
| மாலைதீவு | 115 | 115 | 298 | 1965 |
| சிங்கப்பூர் | 2185 | 224 | 581 | 1959 |
| லீசென்ஸ்ரீன் (Liechteinstein) | 21 | 618 | 157 | |
| லக்சம்பேக் (Luxembourg) | 350 | 999 | 2556 | |
| கட்டார் (Quatar) | 86 | 4000 | 10360 | |
| மோல்ரா (Malta) | 322 | 122 | 316 | 1964 |
| சான் மறினோ ((San Marino) | 19 | 23·6 | 61 | |
| பிஜித் தீவுகள் | 551 | 7036 | 18233 | 1970 |
| நாறு (Nauru) | 7 | 8 | 21 | 1968 |
| நியுகெப்றைட்ஸ் (NewHebrides) | 90 | 5700 | 14763 | |
| ரொன்கா (Tonga) | 92 | 270 | 693 | 1970 |
| மேற்கு சமோவா (Western Samoa) | 152 | 1097 | 2842 | 1962 |

ஆதாரம் : 1. Statistical Year Book 1974 except our country
2. Oxford Economic Atlass 1972.

STICH AND WEAR

at

MISKINS

**Gents & Ladies Tailors**

**and**

**Readymade Garments**

27, GRAND BAZAAR

JAFFNA

அன்பளிப்பு

V. K. இராசரத்தினம்

95 ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

தொலைபேசி 7447

**B. KANAPATHIPILLAI & CO**

**Importers and Distributors of**
**Motor Spares Motor Cycle Spares**
**Tractor Spares & Electrical goods.**

12/2, Stanly Road,

JAFFNA.

TELE] Grms: **Motorparts**
Phone: **2 3 8**

**Space Donated**

**By**

**A. K. S.**

**Motor Stores**

**Chavakachcheri**

# தமிழ் மக்களின் விடுதலைப் பாதையும் பாராளுமன்றத் தேர்தல்களும்

ச. வி. இமானுவேல், ந. சிவராஜன்
(3 ஆம் வருடத்தினர் விஞ்ஞானம்)

தமிழ் பேசும் மக்கள் இன்று தமது தாய்நாடான தமிழ் ஈழத்தை இழந்த நிலையில், தமது நாட்டிலேயே அடிமைகளாக, மொழி, கலை, கலாச்சார சுதந்திரமின்றி இருப்பது சகலரும் அறிந்த ஒரு விடயம். சுதந்திரம் இல்லாத நிலையில் பொதுவாக எந்தவொரு அடிமைக்கும், எவ்வாறு சலுகைகள் மறுக்கப்படுமோ அவ்வாறே தமிழனுக்கும் உரிமைகள், சலுகைகள் மறுக்கப்படுகின்றன. எனவே உரிமைகள் சலுகைகள் என்பவற்றுக்காகப் போராடிக் கொண்டிருந்து காலத்தை வீணக்காமல், அடிப்படைக் காரணமான அடிமைத்தனத்துக் கெதிராக, அதாவது அயல் நாடான சிறீலங்காவிடம் தாம் இழந்து நிற்கும் தமது தமிழ் ஈழத்தை மீளப்பெறுவதற்காக போராடத் தொடங்கியிருக்கும் இவ்வேளையில், இப்போராட்டத்தில் பாராளுமன்றத்திற்குச் செல்வதன் மூலம் போராட்டத்தை வலுவுள்ளதாக்கலாம் என ஒரு சாராரும் பாராளுமன்றத்துக்குச் செல்வதால் எமது போராட்டத்தில் பின்னடைவுதான் அதிகமென ஒருசாராரும் கருதுகிருர்கள்.

பாராளுமன்றத் தேர்தல் விடுதலைப் போராட்டத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றிய ஒரு தர்க்கமாக இக்கட்டுரையை அமைக்கலாம் எனக்கருதித் தொடர்கிறோம்.

முதலாவதாக,

''பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தால் எமது பிரச்சினைகளை உலகறியச் செய்வதற்கு ஒரு அரிய வாய்ப்புக்கிடைக்கிறது.'' என்ற வாதத்தை எடுத்துக் கொள்வோம்.

பாராளுமன்ற மொன்றில் முன்வைக்கப்படும் ஒரு பிரச்சினையானது உலகெங்கும் விரைவில் பரவும் என்பது மறுக்க முடியாத ஓர் உண்மை. ஆனுல் எம்மைப் பொறுத்தவரையில் நாம் எமது பிரச்சனையை பாராளுமன்றத்தில் முன்வைக்கவே முடியாத நிலையிலேயே இருக்கிறோம் என்பது முதலில் உணரப்படவேண்டும். எமது தமிழ்த் தலைவர்கள் 76ஆம் ஆண்டு மாசி 4ம் திகதி தனிநாட்டுப் பிரேரணையைச் சபையில் கொண்டுவந்த சமயம் அரச தரப்பு பிரதிநிதிகள் யாவரும் சபையைவிட்டு வெளியேறி இவர்களது விவாதமே நிகழாதபடி செய்திருக்கிருர்கள். மேலும் இவர்கள் நிகழ்த்தும் உரைகளும் பதிவேட்டில் தமிழிலேயே வைக்கப்படுகின்றன. (தமிழில் நிகழ்த்தப்படும் பட்சத்தில்)

இனி வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மாநாட்டில் இவர்களின் பங்கைக் கவனிப்போம். முன்னேருமுறை பாராளுமன்றப் பிரதிநிதிகள் மகாநாடொன்றில் எமது பிரதிநிதியொருவர் எமது பிரச்சினைகளை எடுத்து விளக்கியிருக்கிருர். அதன்பின்னர் அவர்கள் வெளிநாட்டுப் பிரதிநிகளுடன் தொடர்பு கொள்வதே தடைசெய்யப்பட்ட நிலையில், அண்மையில் நடந்த கூட்டுச்சேரா மாகாநாடுகளின் மகாநாட்டில் பார்வையாளராக மட்டும் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்ட நிலையில் இருந்திருக்கிருர்கள். அதாவது இனிமேலும் இவர்கள், இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு எமது பிரச்சினைகளை விளக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பது கண்கூடு. இவர்கள் பா. உ. கள் என்ற ரீதியில் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்த காலங்களில் மேற்படி பிரசாரத்தைச் செய்யத் தவறியிருக்கிருர்கள். ஆனுல் இனிமேல்

அவர்கள் அதைச் செய்வார்கள் என வாதத்துக்காக எடுத்துக்கொண்டாலும் அவர்கள் இனி பா உ. கள் என்ற ரீதியில் வெளியே செல்ல அனுமதிக்கப் படமாட்டார்கள் என்பது முன்னர் விளக்கப்பட்ட உண்மையிலிருந்து தெளிவாகிறது.

இனி, பாராளுமன்றப் பிரதிநிதிகளல்லாதார் மேற் கொண்ட பிரதான நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் பாராளுமன்றப் பிரதிநித்துவம் பிரசாரத்துக்கு தேவையில்லாதவொன்றென்று புலனாகிறது. உதாரணமாக லண்டனிலுள்ள தமிழ் இளைஞர்களால் நடத்தப்படும் பிரசாரத்தின் ஒரு துளிகூடவாவது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தால் ஏற்படவில்லை எனலாம். மேலும் அண்மையில் நடந்த எமது தலைவர் ஒருவருக்கு எதிரான வழக்கில் பெறப்பட்ட பிரசாரம், பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பிரசாரத்துக்குத் தேவை என்பதைப் பொய்யாக்குகிறது. மேலும் ''அரபாத்'' போன்றவர்கள் ஐக்கிய நாடுகள் சபை வரை சென்று குரலெழுப்பி வருவதும், பாராளுமன்ற அமைப்பு முறையில்லாத வியட்னும் விடுதலையடைந்திருப்பதும் விடுதலைக்கு பாராளுமன்ற அமைப்பு முறை அவசியமற்றது என்பதைக் காட்டுகிறது.

அடுத்து, எமது பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு செல்லாதவிடத்தில், அந்த இடங்களுக்கு, எம்மைக் காட்டிக் கொடுப்பவர்கள் பாராளுமன்றத்துக்குச் சென்று, அங்கிருந்தபடி எமது பிரச்சினைகளை வெளியூராருக்கு மூடிமறைக்க முயலுவர், என்ற கூற்றை ஆராய்வோம். விடுதலைப் போராட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒருநாட்டில் போராட்டங்கள் வெடிக்கும் போது அதுபற்றிய செய்திகள் வெளிநாடுகளுக்குப் பரவாமல் தடுக்க முடியாதென்பதற்கு இன்று வெள்ளையர் ஆட்சியின் கீழ் நசுக்கப்பட்டு சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஆபிரிக்க சுதேசிகளின் விடுதலைப் போராட்டம் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைத்துக் கொண்டிருப்பது தகுந்த சான்றாகும். இத்தனைக்கும் அந்த வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளுடன் 20 கறுப்பு இனத் துரோகிகள் ஒட்டிக் கொண்டிருந்தபோதும் கூட எமக்கு இப்போராட்டங்கள் பற்றிய செய்திகள் கிடைத்துக் கொண்டுதானிருந்தன. மேலும் விடுதலைப் போராட்டமொன்று வெடிக்கும்போது அது காட்டிக் கொடுப்பவர்களால் நசுக்கப்படமுடியாத வொன்றாகத் தானிருக்கும் என்பதற்கு விடுதலைப்போராட்டம் நிகழ்த்தி வெற்றி கண்டநாடுகள் சான்று பகர்கின்றன. எனினும் காட்டிக்கொடுப்பவர்கள் பாராளுமன்றத்திலிருப்பதால் ஒரு சில இடையூறுகள் இருக்கும் என்பது உண்மையே. எனவே இவ்விடத்தில் பாராளுமன்றத்திற்குச் செல்லுவதால் எமக்கு ஏற்படும் பேரிழப்புகள்பற்றி ஆராய்வது பொருத்தமானதாகும்.

(1) பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திற்காகத் தேர்தல் ஒன்று நடாத்தப்படும்போது அத்தேர்தலுக்காக விரயமாக்கப்படும் சக்தி குறிப்பிடத்தக்களவு பெரிதாகும். அத்துடன் அதற்கான பொருள்விரயமும் கால விரயமும் எவ்வளவினது என்பது தமிழ்மக்கள் அறிந்ததே.

(2) தேர்தலின்போது தமிழினம் கூறுபட்டு நின்று போராடும்போது தமக்குள் வேண்டாத பிளவுகளை ஏற்படுத்திக் கொள்கிறது.

(3) வரப்போகும் தேர்தல்களில் சிறுபான்மை இனத்துக்கான, ஒருதனித் தொகுதி என்றரீதியில் தொகுதிகளைப் பிரிக்கும் முயற்சிகள் நடைபெறுவது தெரிந்ததே. இந்நிலையில் தமிழினம் தேர்தலில் குதிக்கும்போது வேண்டப்படாத, அழித்தொழிக்கப்பட வேண்டிய ஒன்றான சாதிப்பிரிவினை, சிறுபான்மையினருக்குச் சலுகை என்ற போர்வையில் நிரந்தரப்பிரிவினை யொன்றாக்கப் பட்டுவிடும் என்பது துல்லியமாகத் தெரிகிறது.

(4) பொதுத்தேர்தலில் ஒரு வெற்றியீட்டிவிட்டால் அதுவே போதும் என்ற மனோநிலையை மக்கள் மத்தியில் உண்டுபண்ணும் ஒரு சாதனமாகவும் இத்தேர்தல் அமைகிறது.

(5) தேர்தலில் தலைவர்கள் தெரிவுசெய்யப்பட்ட நிலையில் ''தலைவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்'' என்ற ஒரு தப்பான அபிப்பிராயத்தையும் ஒவ்வொரு தமிழ் மகனும் தனது பங்கை பொறுப்பை, மறந்து எல்லாச் சுமையையும் தலைவர்கள் தலையில் போட்டு ஓய்ந்திருக்கும் ஒரு நிலையையும் பாராளுமன்றத் தேர்தல்

உருவாக்குகிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. மேலும் எமது மக்களில் ஒரு பகுதியினர் வாக்குரிமை இழந்து நிற்கின்ற நிலையில் போராட்டமானது மக்களளவில் பரவலாக்கப்பட்டாற்ருன் மலையகத் தமிழ் மகனும் போராட்டத்தில் பங்குவகிக்க முடியும். பாராளுமன்றப் போராட்டத்தால் தான் வெற்றியடையலாமென்ருல் மலையகத் தமிழ் மக்களுக்குப் போராட்டத்தில் பங்கில்லை என்பது போலாகும்.

(6) மேற்கூறிய எல்லாவற்றுக்கும் மேலாக பாராளுமன்றத்துக்கு எமது பிரதிநிதிகள் செல்லுவதால் இன்னும் இலங்கை ஓர் ஒற்றை நாடு என்பது போலும், சிறீலங்கா அரசிடமிருந்து கேட்டுத்தான் எதையும் பெறவேண்டும் என்ற படு அடிமைத்தனமான ஒரு நிலையும் உருவாகி விடுகிறது. பாராளுமன்றத்தில் இருந்துகொண்டு இன்னும் எமக்கு அதுகொடு, இதுகொடு என்று சலுகைகளுக்காகப் போராடிக் கொண்டு, விடுதலைக்காகப் போராடுவதில் அர்த்தமில்லை. எமக்கு வேண்டியது விடுதலையைத்தவிர வேறெதுவுமில்லை என்பது தெளிவாகியபின் அதை விடுத்து பாராளுமன்றத்திலிருந்து எமது பிரதேசத்துக்கு கூடிய பஸ் தேவை என்ருே வேறுசலுகை தேவை என்ருே கேட்டுக் கொள்வதால் நாம் இன்னும் அவர்களைத் தான் நம்பவேண்டும் என்ற தப்பான எண்ணத்தை எம் மத்தியிலே உருவாக்கி விடுகிருேம்.

எனவே பாராளுமன்றத்தில் எம்மைக் காட்டிக் கொடுப்பவர்கள் இருப்பதால் எமக்கு ஏற்படுவதிலும் பார்க்க எத்தனையோ மடங்கு பெரிதான நட்டம் எமது பிரதிநிதிகள் பாராளுமன்றத் தேரதலுக்கு நிற்பதால் ஏற்படுகிறது என்பது வெளிப்படை.

ஆகவே பாராளுமன்றத் தேர்தல் விடுதலைப் பாதைக்கு ஒரு தடைக் கல்லாகவே அமைகிறது. எனவே தேர்தலைப் பகிஷ்கரித்து விடுதலைப் போராட்டத்தில் முழுமூச்சுடன் இறங்குவதே சிறந்த வழி.

◉


# School of Accountancy

## 57, HOSPITAL ROAD, JAFFNA.

*Offers Tuition Facilities for*

G. C. E. O/L (Artes, Commerce, Seience)

A/L Examination

Institute of Chartered Accountants Exams (Sri Lanka)

First in Arts Exam

Bachelor of Arts Exam

International Association of Book-keepers (Lond)

Institute of Administrative Accounting (Lond)

Classes of H N. C. E. will be conducted from January 1977.

# Aero Electrical Industries

10, Point Pedro Road,
Kankesanthurai.

**ELECTRICAL ENGINEERS,
CONTRACTORS & SUPPLIERS**

*We are manufacturers of the following Electrical items*

- ★ G. I Stay Wires of all sizes
- ★ Heater Cupboards for Industrial and Hotel use
- ★ Heater Bars, Cuffs, Cartridges and Circular Plats for The Plastic Rubber Based Industries
- ★ Domestic and Industrial Heating and Lighting Appliances

## தெல்லிப்பளைக் கல்விக் கழகம்

B. A. GAQ
G. C. E A/L O/L கலை, வர்த்தகம், விஞ்ஞானம்

H. N. C. E N. C. G. E.

ஆகிய பரீட்சைகளில் சித்திபெற நிர்வாகியுடன் தொடர்புகொள்ளவும்
விசேட சிங்கள, ஆங்கில வகுப்புகளும் நடைபெறுகின்றன.

தெல்லிப்பளைக் கல்விக் கழகம்

காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பளை.

அன்பளிப்பு

## அனுஷன் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர் : மு. கனகலிங்கம்
மெயின் வீதி
செட்டிகுளம்

# வீடு பொருத்தமில்லை

"அருண் சக்தி"

அகில வளாக ரீதியில் தமிழ் மன்றத்தால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றுள்ளது.

"இஞ்சாருங்கோ... இஞ்சாருங்கோ"

என்னப்பா...

"அவர் தம்பிமுத்தர் வந்திருக்கிறார்... நேரமும் எட்டுமணிக்கு மேலையாப்போச்சு ... இன்னும் படுத்திருக்கிறியளே ... எழும்பி வாருங்கோ...

"கோபாலு இல்லையே"?

"அவன் தம்பி இப்பதான் வாங்குகள் கதிரையள் குடுக்கப் போறான்"

மீனாட்சியின் பதிலைக் கேட்ட கனகன் தனது உடம்பின் உளைவையும் நித்திரைத் தூக்கத்தையும் முறித்துக்கொண்டு மெதுவாக எழும்புகின்றான். இரவு முழுவதும் குடிபுகுதல் கொண்டாட்டத்தில் அங்குமிங்கும் ஓடித்திரிந்தவன் படுக்கைக்குச் செல்வதற்கு இரவு இரண்டுமணிக்கு மேலாகிவிட்டது. அந்தக் களைப்பு இன்னும் அவன் உடலை விட்டு நீங்கவில்லை.

மெதுவாகக் கண்களைத்துடைத்துக் கொண்டவன் கொடியிலே தொங்கவிட்டிருந்த சால்வையையும் எடுத்துக் கொண்டு விருந்தைப் பக்கமாகச் செல்கிறான். முன் விருந்தையில் அமர்ந்திருந்த தம்பிமுத்தர் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவர் நெற்றியில் துலங்கும் திருநீற்றுக் குறிகளில் ஏற்பட்ட நெளிவுகள் அதை அவனுக்குப் புலப்படுத்தியது. "மழையும் ஒரு மாதிரியாக்கிடக்கு கொஞ்சம் இருங்கோ வாறன்" என்றபடியே கிணற்றடியை நோக்கி நடந்தான் கனகன்.

பதிலுக்கு தலையை அசைத்த தம்பிமுத்தர் தட்டத்தில் கிடந்த வெற்றிலையில் ஒரு பாதியைக் கிழித்து வாயுக்குள் திணித்துக் கொள்கிறார். தம்பிமுத்தர் ஓரளவு பணம் படைத்தவர். பக்கத்து வீட்டுக்காரர் கனகனுக்கு சிறிது உறவினனும் கூட. அவரின் தோட்டத்தைத் தான் கனகனும் குத்தகைக்குச் செய்துவந்தான்.

குடிபுகுதல் கொண்டாட்டத்துக்கு கனகன் அவருக்கும் அழைப்பு விடுத்திருந்தான். ஆனால் அவர் இரவில் வரவில்லை. இப்போது தான் வந்திருக்கிறார். கனகன் இரண்டு வருடக் குத்தகைப் பணத்தை இன்னும் கொடுக்கவில்லை. குடிபுகுதல் கொண்டாட்டத்தில் சேரும் பணத்தை நம்பி உறுதி கொடுத்திருந்தான். சாட்டோடு சாட்டாக இதையும் கேட்பதற்கு தம்பிமுத்தருக்கு இது நல்லதருணமாக இருந்தது.

கிணற்றடியில் முகத்தைக் கழுவிக் கொண்டு திரும்பிய கனகன் அரைகுறைப் பூச்சுடன் கட்டி எழுப்பப்பட்ட தனது வீட்டை ஒருதரம் பார்க்கிறான். தம்பிமுத்தரின் காணியில் படாத பாடு பட்டு இந்த இரண்டு வருஷத்திலும் நட்ட வெங்காயத்தாலும் மிளகாயாலும் உழைத்த பணத்தில் மிதந்த அந்த வீடு அவனது உழைப்பின் பெறுமதியைக் காட்டி அவனையே பிரமிக்க வைத்தது.

"எப்பிடி கொண்டாட்ட மெல்லாம்..." தம்பிமுத்தர் சிரித்தபடியே கதை கொடுத்தார்.

"அதுக்கொண்டும் குறையில்லை ... " தெரியாதே மகனும் கொழும்பாலை வந்து நிண்டான். அதாலை கொஞ்சம் சுகமாய்ப் போச்சு" அருகில் கிடந்த கதிரையில் அமர்ந்தபடி பதில் சொன்னான் கனகன்.

"வீட்டுக்கும் ஞாயமாய்......... பிடிச்சிருக்கும். எத்தினை... ஒரு இருபது ... ... இருபத்தைஞ்சு பிடிச்சிருக்கிமே .. ... "

"ஓ......... ஓ ..... உதுகளை ஆர் கணக்குப் பார்த்தது ..... அப்பிடிப் பிடிச்சிருக்கும் ஆண்டவன் புண்ணியத்திலை ...... மிளகாயும் வெங்காயமும் வாய்ச்சதாலை ஒரு மாதிரிச் சமாளிச்சிட்டன்."

"உங்களுக்கென்ன ...... அங்காலை .. ... இரண்டு வருஷம் போன இன்னுமொரு

வீடு கட்டிப் போடலாம்.'' தம்பி முத்தரின் பதில் கனகனுக்கு இன்னும் உற்சாகத்தைக் கொடுத்தது.

''உங்கடை குத்தகைக் காசும் ...... எவ்வளவெண்டு தெரியாது. அதையும் ஒருக்கா...... கணக்குப் பாத்து ......... வையுங்கோ ......... எல்லாத்துக்கும் வெள்ளிக்கிழமை மட்டிலை வாறன்.'' சம்பாஷணைகளுக்கிடையில் கனகனே குத்தகைக் காசையும் ஞாபகப் படுத்தினுன்.

''கொண்டாட்டத்திலை கொஞ்சம் சேர்ந்திருக்குப் போலை ......'' ஒரு அசட்டுச் சிரிப்பை உதிர்த்தபடி கூறிய தம்பிமுத்தர் கனகனின் கைக்குள் ஒரு பத்து ரூபாய் நோட்டைத் திணித்துவிட்டு தனது விசயத்தை முடித்துக் கொள்கிருர்.

கனகனின் கண்கள் தம்பி முத்தர்போன திசையையே தொடர்ந்தன. ''இந்த இரண்டு வரியமும் குத்தகைக் காசை வேண்டாமல் பொறுத்திருந்ததாலை எங்களுக்கு நல்லதாய் போச்சு...மீனுட்சி. இல்லாவிட்டால் இப்ப கடனெல்லே பட்டிருப்பம்...இனி அதுக்கு... வட்டி என்ன?'' கனகன் சொன்னதை மீனுட்சி அரைகுறையாகக் கேட்டபடி தன் வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தாள்.

வெள்ளிக்கிழமை விடிந்ததும் விடியாததுமாக கனகனுக்கு தம்பிமுத்தரின் ஞாபகம் தான் வந்தது. முதல் நாள் எண்ணி வைத்திருந்த பணத்தை மறுபடியும் எண்ணியபடி தம்பி முத்தரிடம் புறப்படலானுன். வீட்டு முன் விருந்தையில் ஏதோ கணக்கு வழக்குகளில் தன் சிந்தனையை சுழலவிட்டுக் கொண்டிருந்த தம்பிமுத்தர் மூக்குக் கண்ணுடியை சிறிது விலக்கிவிட்டுப் படலையைத் திறந்து கொண்டு வந்த கனகனை ஒரு நோட்டம் விடுகிருர். பிறகு தன் வேலையில் கவனத்தைத் திருப்பி இருப்பதுபோல் நடித்தாரோ அது அவருக்கு மட்டும்தான் தெரியும்.

கனகனின் செருமல் ஒலி அவரின் காதுகளுள் தெளிவாக விழுந்திருக்க வேண்டும். ''உதார்...கனகனே வா வா...'' அருகில் கிடந்த வாங்கை சிறிது தள்ளிவிட்டபடி வரவேற்குர்.

''கணக்குகள் ஏதேன் பாத்தியளோ ''

''கணக்குகள் ... அண்டைக்கே பாத்திட்டன் ...கனகன்...அதுபோக அதுக்கு முன்னம் உனக்கு ஒண்டு சொல்லவேணும் ... இப்ப தோட்டக் காணியளுக்கு எவ்வளவு கிராக்கியெண்டு உனக்குத் தெரியுந்தானே. இதுகளை இப்ப சொந்த பந்தம் பாக்கேலாது இந்த வரியம், போன வரியமெல்லாம் உனக்கு மாத்திரமில்லை, தோட்டக்காறர் எல்லாருக்கும், நல்ல அடிப்புத்தான். இப்பிடி வரேக்கை... நீங்கள் எங்களுக்கும் கொஞ்சம் கூட்டிதர நினைக்கிறயில்லை.''

நாங்களும் எத்தினை பாடுபட்டு உழைக்கிறம் பாருங்கோ... தனியக் காணி மட்டும் கிடந்தாப்போலை வந்து கொட்டுண்ணுதே... சரி சரி ஐஞ்சைப் பத்தைக் கூட்டித்தாறது என்ன அதிலை?

''உப்பிடிச் சொல்லாதை கனகன். காணி 'இல்லாமல் உங்கடை'] உழைப்பை எங்கே கொட்டுவியள். எத்தினை சனம் காணிக்கு அடிபடுகுதுகளெண்டு தெரியுமே. ஆ...... அது போகட்டுக்கும்......... இந்தா நானும் இப்ப குத்தகை வேண்டாமல் பொறுத்து இரண்டு வரியமாய்ப் போச்சு. அந்தக் காசை வட்டிக்கு விட்டாலும் இப்ப எவ்வளவு வந்திருக்கும். உனக்கெண்டு நான் வட்டிக்கணக்குப் போடயில்லை. இந்த இரண்டு வரியத்துக்கும் நூற்றி இருபத்தைஞ்சுப்படி குத்தகை போட்டிருக்கிறன். மூவாயிரம் ரூபா மட்டமா வருகுது'' கணக்குப் புத்தகத்தைப் பார்த்தபடியே சொல்லிக் கொண்டிருந்தார் தம்பிமுத்தர்.

கனகனின் கண்கள் குளமாயின.

''உங்களுக்குத் தெரியும் .....பாருங்கோ உழைச்சனுன் தான். ஒரு வீடு கட்டலாலை ஒரு சதமும் மிச்சமில்லை. இந்த நிலையிலை நீங்கள் சொல்லாமல் கொள்ளாமல் செய்யிறது சரியில்லை. கிட்டத்தட்ட ரண்டாயிரம் சொச்சந்தானே வரும்.''

''கனகன் நான் சொன்னது உனக்கு விளங்கயில்லை. உந்தக் குத்தகைக் காசை இரண்டு வரியத்துக்கும் கடனுகத் தந்தனுன் எண்டு வைச்சால் வட்டி தரத்தானே வேணும்''

''எனக்கெண்டா உது நல்லதாய் தெரியயில்லை' இப்ப என்னட்டை ரண்டா

யீரத்தி இருநூறுதான் கிடக்கு. இந்த வரி யத்திலே இருந்து... கூட எடுக்கில் எடுங்கோ பரவாயில்லை.''

''தெரியும் கனகன் தெரியும் உப்பிடி நீ சொல்லுவாயெண்டு தெரியும். இந்த வரியத்திலே இருந்தெண்டாலென்ன வாற வரியத்திலே இருந்தெண்டாலென்ன நான் சொன்னதுதான் குத்தகைக் கணக்கு. அதோடை ஆனியோடை தறையையும் விட்டுவிடவேணும் எனக்கு வேறை வருமானங்களில்லை. நானுந் தோட்டஞ் செய்யப் போறன்.''

தம்பிமுத்தர் சிறிது கண்டிப்பாகக் கூறினர்.

''நீங்கள் தறையை விடுவிக்கிறதுக்காகத்தான் உப்பிடிச் சொல்லுறியள். உங்கடை தறை எங்களுக்குச் சொந்தமாகிவிடுமெண்டு பயப்பிடுறியள். எங்களுக்கு உங்கடை சொத்து தேவையில்லை. தறையைப் பாவிக்கிறதுக்குத்தானே குத்தகை தாறம்''

''நீரும் சட்டம் கதைக்கத் தொடங்கி விட்டீர்......என்ன? நான் நினைச்சால் குத்தகைக் காசையும் காணியையும் உடனை மீட்பன். தெரிஞ்சுதே?

தம்பிமுத்தர் கணக்குக் கொப்பியைச் சுழற்றி எறிந்துவிட்டு வாக்குவாதத்தில் இறங்கிவிடுகிறார். கனகனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

''இது ஒன்றுமில்லை. உங்களுக்குப் பொறுமை. உங்கடை வீட்டுக் கோடியிலே கிடக்கிற கோழிக்கூட்டைப் போலே ஒரு ஓலைக்குடிலுக்கை கிடந்து கொண்டு எவ்வளவை உழைச்சாலும் அது உங்களை ஒண்டும் செய்யாது. இது என்னடா எண்டா எங்கடை நிலத்தை நம்பியிருக்கிறவை எங்களுக் கெதிரா ஒரு வீடு கட்டிப் போட்டினமே எண்ட உடனை உங்களுக்குள்ளை ஒழிச்சுக்கிடந்த பொறுமை உங்களை வெளிக் காட்டிப் போட்டுது'' கனகனின் மகன் கோபாலின் குரலது. பக்கத்து வீடு ஆதலால் அவர்களின் வாக்குவாதம் கோபாலுக்கு நன்றாகக் கேட்டது.

ஓ ...ஓ...... மாளிகையல்லே கட்டிப் போட்டியள் '' நக்கல் சிரிப்போடு பதிலளித்தார் தம்பிமுத்தர்.

'' ஓ இது மாளிகைதான் .. எங்கடை உழைப்பாலே வந்தது. எங்களுக்கு மாளிகை தான் ஏன்? உங்கடை உந்தப் பொறுமை உள்ளத்துக்கு இந்த வீடு ஏதோ பெரிய பாரச் சுமையாகத் தானே தெரியிது. அல்லாட்டால் உப்பிடிப்பேசுவியளே.'' கோபால் சிறிது உரக்கப் பேசினன்.

தலையைத் தாழ்த்திக் கொண்டிருந்த கனகனுக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. மெதுவாகத்தான் கொண்டு வந்த காசை அவர் முன் வைத்து விட்டு வீட்டை வீட்டு வெளியேறினன்.

''எத்தினை வரியமாய் வெய்யிலிலும் மழையிலும் பாடுபட்டு உழைச்சம். ஒருத்தரும் திரும்பிக் கூடப் பார்க்கையில்லை. கொஞ்சம் காசு வந்த உடனை பெரிய மனிசரெண்டு இருக்கிற நீங்கள் எத்தனை வகையாலே நசுக்கப்பாக்கிறியள். உங்கடை காணி எங்களுக்கு தேவையில்லை. ஆனல் காணியை உடன் விடமாட்டோம், இன்னும் ரண்டு வரியம் செய்து போட்டுத் தான் விடுவோம். கோபால் ஆவேசத்துடன் பேசினன்.

'' இதுமட்டுமில்லை குத்தகையும் இது தான் கூடத் தரேலாது. எங்களுக்கு வருமானம் வந்தவுடனை கூட்டிக்கேக்கிற நீங்கள் நட்டம் வந்தால், குறைச்சு விடுவியளே... கோபாலின் பேச்சு தம்பிமுத்தரை திணறடிக்கச் செய்தது.

'' எடே...எடே.. கதைக்காமல் போடா உன்னேடை எனக்கென்ன கதை'' தம்பி முத்தர் அவ்வளவில் வாயடக்கிக்கொள்கிறர்

மறுநாள் மாலை தம்பிமுத்தர் விதானையாரோடு கனகனின் வீட்டுக்குச் சென்றது கனகனுக்குச் சிறிது கவலையைக் கொடுத்தது. என்றாலும் கனகனும் தனது நிலையை அவர்களுக்குச் சொல்லத் தயங்கவில்லை.

''இந்தா கனகன்...ஏன் கோடு கச்சேரி எண்டு இழுபட்டு மனஸ்தாபப்படப்போறியள். இரண்டு வரிசத்திலே காணியை விடுகிறேன். என்று ஒரு சீட்டு எழுதிக் கொடுத்திடு. அதோடை இனி நூற்றி இருபத்தைஞ்சுப்படி குத்தகையையும் குடு. சரிதானே''. விதானையார் சொல்லிய முடிவு கனகனுக்குக் கொடூரமானதாகத் தெரியவில்லை. ஏனெனில்

அவன் முடிவும் அப்படித்தான் இருந்தது. ஆனல் தம்பிமுத்தருக்கு இது அவ்வளவு திருப்தியைக் கொடுக்கவில்லே. என்ருலும் உதட்டளவில் சிரிப்பை வரவழைத்துக் கொள்கிருர்.

''ஆ. ஆ அது சரி விதானேயார் அந்த இரண்டு வரியக் குத்தகைக் காசையும் பதி னேஞ்சாம் திகதிக்கு முன்னம் தந்திட வேணும். தம்பிமுத்தரின் கண்டிப்பான குரல் சிறிது பலமாகக் கேட்கிறது.

தம்பிமுத்தர் கூறியது கனகனேத் தூக்கி வாரிப்போட்டது. அண்டைக்கு தானே இரண்டாயிரத்தி இருநூறு ருபாவையும் அவர் முன் வைச்சேன். ஒரு வேளே மறந் திருப்பாரோ? என்னவோ? ''அண்டைக்கு தானே உங்கடை காசைக் கொண்டுவந்து தந்தேன் '' மனதுக்குள் எழுந்ததைக்கேட்டே விட்டான்.

''என்ன? என்ன? காசு தந்திட் டியோ? பாத்தியளே விதானேயார், நாங் களும் பொறுத்துப் பொறுத்து விட அவர் சொல்லுற கதையை. அதுதானே சொன்னனுன். உவங்கடை விசயத்தை உடனேக்குடனே கோடேறித் தீர்த்துப் போடவேணுமெண்டு!!

கனகனுக்கு என்னத்தைச் சொல்லி நம்பவைப்பது என்று ஒன்றும் புரியவில்லே. அவர்களின் வாக்குவாதம் சத்தியம் சொல்லுமளவுக்கு வந்து விட்டது. தின மும் திருநீற்றுக் குறிகளோடு காட்சிதரும் தம்பிமுத்தர் அந்தத் திருநீற்றிலே தொட் டுத் சத்தியம் செய்யுமளவுக்குப் பொய் காரஞகி விட்டதை நினேத்த போது கன கனின் மனத்தில் எழுந்த கோபத்துக்கும் ஆவேசத்துக்கும் அளவேயில்லே.

தம்பிமுத்தரின் நிலே விதானேயாரைக் கூட நம்பவைத்து விட்டது. ஒரே திருநீறு ஏழையின் கைபட்டபோது ''பொய் சத்தி யமாகவும்'' பணக்காரனின் கைபட்டபோது உண்மையின் பிரதிபலிப்பாகவும் விளங்கு கிறது. ''எல்லாத்துக்கும் காரணம்...... பணந்தான்'' கனகன் தனக்குள்ளேயே முணுமுணுத்துக் கொள்கிருன்.

சொல்லக்கூடிய வழிகளிலெல்லாம் சொல்லியும் கனகஞல் விதானேயாரை நம்பவைக்க முடியவில்லே, அவ்வூர் பெரிய மனுசர்களேயெல்லாம் தம்பிமுத்தரிடம் தூதனுப்பிப் பார்த்தான். ஜே. பீ. கூட சமாதானத்துக்கு வந்தார். பலனளிக்க வில்லே. பெரிய மனுசர் நாவில் எழுந்த பொய்தானே அது அவர்களின் கௌரவத் தைக் குறைக்குமளவுக்கு கொஞ்சங் கூட மாறமாட்டுது. இதை கனகன் அறியா மலில்லே.

மறுநாட்காலே வழக்கம்போல் விடிந் ததும் விடியாததுமாக தம்பிமுத்தர் தனது சுவாமி அறைக்குள் நுழைகிருர். அவ ரதுகை அவரை அறியாமலேயே ஒரு கணம் இரும்புப்பெட்டியின் பூட்டைத் தடவிப் பார்க்கிறது. ஜன்னலே வெளிச்சம் வரத் தக்கதாகத் திறந்து விடுகிறது. திருநீற்றுத் தட்டத்திலே தனது வலது கைவிரல்களேப் புதைத்துக் கொண்டவர் நெற்றியிலே மூன்று குறிகளே இடுவதற்காக அண் ணுந்தார்.

அடுத்த நிமிடமே அவரது கைகள் நடுங்கத் தொடங்கின. நெற்றியிலே மூன்று குறிகளே வைக்க முயற்சித்தார். ஆனல் அது ஒரே பூச்சாகத்தான் விழுந்தது. இத்தனேக் கும் காரணம் அவரது கண்கள் அந்த ஜன் னலினூடாக கனகன் வீட்டு மாமரத்தில் தொங்கிக்கொண்டிருந்த சடலத்தைக் கண் டதுதான்.

அது கனகனின் சடலம். தம்பிமுத்த ருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லே. படபடத்த நிலேயில் சுவாமிப் படங்களுக் குக் கற்பூரத்தைக் காட்டுகிருர். அது அந் தப் பிணத்துக்கும் சேர்த்துக் காட்டுவது போல் அவருக்குத் தென்பட்டது. அவசரஅவ சரமாகத் தேவாரம் ஒன்றையும் முணுமுணுத் துக் கொள்கிருர். அவரின் மனம் இன்னும் சிறிய நேரத்தில் கனகன் வீட்டில் எழப் போகும் மீனுட்சியின் மரண ஓலத்தை எண்ணிப்படபடத்தது.

மீனுட்சி கதவைத் திறப்பாள் ......... பிணத்தைக் காண்பாள். ஊர்மக்கள் கூடு வர். இதை நினேத்துப் பார்க்கும்போது தம்பிமுத்தருக்கு எப்படி இன்றைய பொழு தைக் கழிக்கப் போகிறேன் என்ற அச்சமே எழுந்தது.

அவர் நினைத்து முடிக்கவில்லை. மீனாட்சியின் அழுகுரல். அது ஊரைக் கூட்டுமளவுக்கு பெரிதாக ஒலிக்கிறது. இனியும் தாமதிக்கக் கூடாது என்ற எண்ணமோ என்னவோ தம்பிமுத்தரின் கால்கள் கனகன் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கின.

கனகன் அவசரப்பட்டிட்டான் குத்தகைக் காசைத் தாறதுக்கு இன்னும்ஒரு வரியத் தவணை சொன்னா பொறுக்கமாட்டேனே'' அந்த நேரத்திலும் நிலை தளராமல் நடுங்கிய கால்களை நிலத்தில் அழுத்திக் கொண்டு கூறினார் தம்பிமுத்தர்.

கொஞ்ச நேரத்துக்குள்ளாகவே ஊர் கூடிவிட்டது. மரணச் சடங்கில் பலபேர்களுக்குள் அவரும் ஒருவராக இருக்கிறார். அன்று அந்த மஞ்சள் கடதாசிக்குள் கனகன் சுற்றித்தந்த இரண்டாயிரத்திருநூறு ரூபாயும் மடிப்புக்குலையாமல் அப்படியே இரும்புப் பெட்டிக்குள் கிடக்கிறது. அது இப்போ அவரின் மனத்துக்குள் கிடந்து சுவாசத்தை அடைப்பதுபோன்ற பிரமையைக் கொடுத்தது. பலரது பேச்சுக்குரல்களும் அவரது காதுக்குள் நுழைகின்றன. ''கனகனுக்குப் புது வீடு பொருத்தமில்லை.'' ''கட்டின நாள் தொடக்கம் கரைச்சல்தான்'' விபரமறியாத பலரின் பேச்சுக்குரல்கள் அவை.

[யாவும் கற்பனை]

★

## We are not tamils — நாங்கள் தமிழர்கள் அல்ல

— கண்ணன் —

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதி பஸ்சில் ஏறியிருந்தது முதல் என் கவனமெல்லாம் அந்த இரு சிங்களவர் மீதே படிந்திருந்தது.

அப்படியிருந்ததிற்கு ஒரு கரணம் அவர்கள் என்முன்னாலிருந்தது. மற்றையது தங்கள் தாய்மொழியிலேயே பலமாக அவ்வப்போது பலத்த சிரிப்புகளுடன் பேசிக்கொண்டிருந்தது.

கடுகதி பஸ் கோப்பாயை அண்மித்துக் கொண்டிருந்த நோரம் அவர்கள் ஏனோ மௌனமாகி விட்டார்கள். ஒருவர் தனது கையிலிருநது ஆங்கிலப் புத்தகமொன்றில் மூழ்கி விட்டார்.

பஸ்ஸும் கோப்பாய்ச் சந்தியில் நின்று ஆட்களை ஏற்றிக் கொண்டு விரைந்தது.

அப்போது வறிய தமிழ் முதியவர் ஒருவர் அவர்களைப் பார்த்து ''நேரம் என்ன'' என்று கேட்டார். அவர்களில் ஒருவர் கேள்வியின் அர்த்தத்தை புரிந்துகொண்டு தமிழ் தெரியாத காரணத்தால் — ஆங்கிலத்தில் நேரத்தை சொன்னார்.

அந்தத் தமிழ் முதியவரும் அவர்கள் சிங்களவர்கள் என்பதை புரிந்துகொண்டு தொடர்து பலவற்றை – நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள் போன்றவற்றை – அவர்களிடம் கேட்டு அவர்களுடன் ஆங்கிலத்தில் அளவளாவிக் கொண்டிருந்தார். முதியவர்களினதும் அவர்களினதும் உரையாடலிலிருந்து அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு புதிது என்பதை அறிந்தேன்.

முதியவரும் நல்லூரில் இறங்கி விட்டார். கடுகதியும் யாழ்ப்பாணம் நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

நானும் அவர்களைத்தட்டி, மன்னிக்கவும். நீங்கள் இருவரும் நன்றாக ஆங்கிலம் பேசுசிறீர்கள். நன்றாக படிக்கவும் செய்கிறீர்கள் ஆனால் நீங்கள் உரையாடும் போது, ஏன் சிங்களத்தில் உரையாடுகின்றீர்கள்'' என்று ஆங்கிலத்தில் வினவினேன்.

அவர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துத்கொண்டனர். பின்னர் அவர்களுள் ஒருவர் என்னைத் திரும்பிப்பார்த்து **'We are not Tamils'** என்றாரே பார்க்கலாம். நான் அசந்து போனேன்.

# பாஸ்போட் விசா விரைவில் எடுப்பதற்கு

உள்ளூர் சுற்றுலாக்கள்,

தென் இந்திய ஸ்தலங்கள்,

காசி, காஷ்மீர் யாத்திரை - சுற்றுலாக்கள்,

வசதியான பிரயாணங்கட்கு

தொடர்பு கொள்ளுங்கள்

# "சத்தியா றவல்ஸ்"

224 A கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

1977-ம் ஆண்டு சித்திரைமாதம் தென்னிந்திய யாத்திரை ஒழுங்கு செய்யப்படும்

தொலை பேசி எண் 7677



அன்பளிப்பு

# தாமோதரா ஸ்ரோர்ஸ்

உரிமையாளர் : K. S. தாமோதரம்பிள்ளையும் சகோதரர்களும்

மொத்த வியாபாரிகள்,

பத்திரிகை விற்பனையாளர்கள்

B C C விற்பனையாளர்கள்

ஜனதா பீடி, பூரணதி லேகியம் ஆகியவற்றின்

ஏஜண்டுகள்

பெரியகடை, மன்னார்.

# தாகம் — வ. ஐ. ச. ஜெயபாலன்

உப்பு வாடைக் காற்று
இழுத்து வந்த முகில்த்தேரில்
வானத்தமரன்
மழை மன்னன்
புல்பூண்டு மலர் வளையம்
சாத்தவோ மண் வந்தான்.
வயல் வரப்பில் தெருவோரம்
காட்டுப் பூவரசுகள்
ஆவி உயிர்த்து உயிர்த்து அழுகிறதோ...!
வானத்தில் இனியெல்லாம்
வரும் காட்டுத் தாராக்கள்
எவனோ ஒரு இளைஞன்
இரங்கி இரங்கி அழும்
அவலத்தை இந்த
செம்மணியின் வயல்வெளியை
தாண்டுகையில் செவிமடுக்கும்.

ஓமப்புகையில் மங்கி,
முதலிரவின்
கலவி ஆவேச
இன்ப அந்தரங்களிலே
இளை நெக்கி,
வட்டிக் கடைகளிலே
மெலிந்து கிழடாகாமல்
அறுந்ததே தோழா உன்னை
அகத்துடையாள் பொற்தாலி.

வானத்துப் பந்தலால்
வழுவும் நட்சத்திரப் பூவாய்
காற்றில் சறுக்கி
நிலமண்டும் புள்ளினங்காள்...!

இங்கேதான் எங்கோ
ஆழுகின்றவர்க்க
ஆண்டைகளின் காவல் நாய்கள்
நீதியின் புத்திரனை
துடிக்கப் பதைக்க
சுட்டு விழுத்தியது.

சுரண்டல் இன ஒடுக்கல்
அரக்கரைவிட உங்கள்
ஏழை மனதில்
இரக்கம் இருக்குமன்றோ!
நிலமீது
பன்னும் நகப்பாதம் பதிக்கையிலே
மண்களின் புண்போல
செந்நீர் கிடந்து அழும்
தொட்டத்தில் மதிக்காதீர்.
சொல்லவா வேண்டும்
தெற்கிருந்து வந்தவர்க்கு!
குற்றமற்ற பாலகரின்
செங்குருதிச் சுவடுகளை
ஆயிரமாய்க் கண்டு
அனுபவங்கள் பெற்றிருப்பீர்.

உலகெங்கும்
நாடுகளைப் புரட்டி
நவயுகத்தை ஆக்கியது
மண்ணில் படிந்த
வாலிபத்து ரத்தத்தால்
கண்பீளை கழுவுண்டு
விழிப்படைந்த மக்கள்
வேளை வருகிறது.

—

சுவைமிகு சுவீற்ரீ கோப்பி

சர்பத் சிற்றுண்டி வகைகள்

யானை மார்க் குளிர்பானங்கள்

இவை யாவும்

இன்முகத்துடன் எந்நேரமும் பரிமாறப்படும்

ஒரே ஸ்தாபனம்

## "சுவீற்ரீ கூல்"

மாதகல் வீதி பண்டத்தரிப்பு.




# சரோஜா தங்க மாளிகை

SAROJA GOLD MART

கண்டி வீதி, சாவகச்சேரி.

*உரிமையாளர் :*



இராசையா இராசதுரை

பவுண் பொன் வெள்ளி

வாங்குமிடம்.

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்

நவீன முறையில் செய்து கொடுக்கப்படும்.

# மடையர்

மு. திருநாவுக்கரசு

மனித பண்பியற்பீடம் (2-ம் வருடம்)

இக் கட்டுரை எவரையும் புண்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்படவில்லை. ஆனால் மனித வர்க்கத்தைப் புண்படுத்துகின்ற மடையர்கட்கு உண்மையானதும் பொருத்தமானதுமாகிய இப் பட்டமளிப்பு அவசியம் என்பதன் பேரிலேயே அவர்கள் இப்பட்டத்திற்குத் தகுதியானவர்கள் தான் என்பதை நிரூபித்து இப் பட்டத்தை சூட்ட வேண்டியுள்ளது. இக்கட்டுரையின் ஓர் பகுதியில் எழுகின்ற சந்தேகத்திற்கோ, வினாவிற்கோ, இன்னோர் பகுதியில் அதன்போக்கிலேயே விடை அமைந்துள்ளதால் இங்கு எச் சந்தேகமும் எழுமிடத்து கட்டுரையின் முழுவடிவத்தையும் கொண்டே கருத்திற் கொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.

மனித தாற்பரியத்தின் அடிப்படை அம்சத்தினைப் புரிய முடியாதவர்கட்கும், புரிந்தும் அப் பண்புகளை நடைமுறையிற் கடைப்பிடிக்க முடியாதவர்களாகிய கோழைகட்கும் சூட்டப்படுகின்ற ஓர் பட்டமளிப்பே மடையர் என்பதாகும். மனிதவாழ்வின் அடிப்படையில் எந்தவிதமானதொரு உண்மையுமில்லாமல் மனிதனைப் பாகுபடுத்திச் சாதிக் கொடுமையினூற் துன்புறுத்திக்கொண்டிருப்பவர்கட்கு இந்த மடையர் என்னும் பட்டமளிப்பு அவசியமானதாகும். மனித அடிப்படை உண்மையை உணரமுடியாத சாதிப் பாகுபாட்டாளர் நிட்சயமாக மடையரே தான் என்பதைச் சித்தாந்த ரீதியாக, தர்க்கரீதியாக செயற்பாட்டு ரீதியாக ஆகிய அணுகு முறைப்படி மடையர்களேதான் என்பது தெளிவாக இங்கு நிரூபிக்கப்படுகின்றது. எந்தவோர் பெரும் பதவி வகிப்பவராக இருந்தாலும் சரி கலாநிதிப் பட்டம் பெற்றவராக இருந்தாலும் சரி சாதிப்பாகுபாட்டைக் கடைப்பிடிப்பவராயிருந்தால் அவர் மடையரேதான் என்பது தெளிவாக்கப்படுகின்றது. அடிப்படையில் மனித தாற்பரியத்தை புரிந்துகொள்ளமுடியாத அளவிற்கு அறிவின்மையால் சாதிப்பாகுபாட்டைக் கடைப்பிடிக்கின்ற அறிவற்றவர்க்கும், புரிந்தும் வரட்டுத்தனமான சமூககட்டுப்பாட்டிற்காக பாகுபாட்டைத் தன்னகத்தேயேனும் தகர்க்கமுடியாது கடைப்பிடிக்கும் கோழைகட்கும், எதுவித குற்றமுமறியாத நிரபராதிகளைத் தாழ்ந்தவர்கள் எனச் சிறுமைப்படுத்தி சமூகரீதியிலான ஓர் கொடிய தண்டனையை வழங்குகின்ற கொடிய அநீதிக்காரர்களுக்கும், இக்கொடிய தண்டனையை வழங்க அதிகாரமோ உரிமையோ அற்றவர்களாகிய இந்த நான்கு வகையுள்ளும் ஏதாவதில் அடங்குபவர்கட்கு பொதுப்படையாகக் கொடுக்கக்கூடிய பட்டமளிப்பே மடையர் 'என்பதாகும். அதாவது அறிவற்றவன், கோழை, அநீதிக்காரன் அதிகாரமின்றித் தண்டிப்பவன் ஆகிய நாலுள்ளும் அடங்குவோர் நிட்சயமாக மடையர்களாகத்தான் இருப்பார்களேயொழிய உண்மையான மனிதராக இருக்க மாட்டார்கள்.

மனிதம் என்னும் சொல்லின் முக்கிய குணம்சம் பகுத்தறிவேயாகும். அந்தப் பகுத்தறிவின் பிரகாரம் நோக்கும்பொழுது மனித வர்க்கத்தின் அடிப்படையில் சாதிப்பாகுபாடு என்பது எந்தவிதமானதொரு அர்த்தமுமற்றதாகவே காணப்படுகின்றது. அதாவது ஓர் விவசாயின் மனைவி கருத்தரிப்பதுபோலத் தான் ஓர் ஆடுமேய்ப்பவரின் மனைவியும் கருத்தரிக்கின்றாள் அவ்வாறு கருத்தரிப்பதன் மூலம் ஆடுமேய்ப்பவரின் மனைவிக்கு ஆட்டுக்குட்டியும், விவசாயின் மனைவிக்கு தாவரங்களும் பிள்ளைகளாகப் பிறப்பதில்லை, இருவரும் பெற்றெடுப்பது மனிதக்குழந்தையேதான். அதேபோல ஜனாதிபதியொருவர்க்குப் பிறக்கும் பிள்ளை ஜனாதிபதியாகவோ, அல்லது பொலீஸ் அதிபர் ஒருவர்க்குப் பிறக்கும் பிள்ளை அதே பொலீஸ் பட்டிகளுடன் பொலீசதிகாரியாகவோ பிறப்பதில்லை. இதிலிருந்து ஓர் மனிதன் பிறக்கும்போது சாதியாகவோ, தொழிலாகவோ பிறப்பதில்லை. மனிதன் சாதிகளைப் பெறவில்லை பிள்ளைகளைத்தான் பெறுகின்றான், எனவே சாதிப்பாகுபாடென்பது ஓர் அர்த்தமற்றதாகும். இந்த அடிப்படையிலான சாதாரண உண்மையை மனி

தன் என்ற முறையிற் பகுத்து உணர்ந்து கொள்ளமுடியாதவராயின் அவர்கட்குப் பகுத்தறிவு இல்லையென்பதே அர்த்தம். மனித வர்க்கத்தின் அடிப்படை இலக்கணம் பகுத்தறிவேதான். எனவே பகுத்தறிவென்ற ஒன்று இல்லையென்றதின் பேரில் மனித உடலுடன் இருந்தாலும் மனித வர்க்கத்தை விட்டு கீழ் நோக்கியே செல்கின்றார்கள். எனவே உயர்ந்த நிலையிலிருந்து தாமே கீழ் நோக்கிச் செல்பவர் மடையர்களாகத்தான் இருக்கமுடியும். ஆகவே சாதிப்பாகுபாட்டைக் கடைப்பிடிப்பவர் பகுத்தறிவற்ற கீழ் நோக்கிச் செல்பவர் என்பதன் பேரில் மடையர்கள்தான் என்பது நிரூபணமாகின்றது. இங்கு உயர்ந்த சாதிக்காரர்களாகக் கருதிக் கொள்கின்ற பெரியோர்களே அந்தத் தாழ்ந்த சாதிக்காரர்களாகக் கருதப்படும் மக்களிற்கு ஏதோ கருணை கூர்ந்து சமூக அந்தஸ்த்துக் கொடுங்கள் என்றுகேட்பதற்கு பிச்சைகள் எதுவுமில்லை. ஆனால் சாதிப்பாகுபாட்டைக் கடைப்பிடிக்கின்ற அந்த மடையர்கட்கு பால்வாய் மாறாத பங்சிளம் பாலகராயிருந்தாலும்சரி உண்மையான மனிதர்களாக உள்ள எவரும் அறிவுப்பிச்சை கொடுங்கள். அதன்மூலம் அந்த மடையர்களை மனிதவர்க்கத்திற்குயர்த்த உதவி புரியுங்கள் என்றுதான் கேட்கவேண்டியுள்ளது.

சாதாரண மடையர்கள் மட்டுமல்ல மடையர்கூட்டத்திற்கு தலைவர்களேயுண்டு. நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்றும், ஆலயக்கதவடைப்பாளராகிய மடையர் கூட்டத் தலைவர்கட்கெல்லாம் பெருமளவு அறிவுப் பிச்சையை பாலகர்கள்தான் மனமிரங்கிக் கொடுக்கவேண்டியுள்ளது. பூசனிக்காயொன்றுல் அதைச் சித்திரமாக வரைந்துவிட்டு இது பூசனிக்காய்தான் என்று எழுதிவிடவேண்டியதில்லை. பார்த்த உடனேயே இது தான் பூசனிக்காயென்று கண்டுகொள்ள முடியும் என்பதன்பேரில் மக்களால் மடையரை அடையாளம் கண்டு கொள்ள முடியும். எனவே அவ்வாறு அடையாளம் காணப்படும் மடையர்கட்கெல்லாம் அடிப்படையிலான அறிவுப்பிச்சை கொடுக்கவேண்டியதே அவசியமாக உள்ளது.

ஒப்பந்தங்கள் என்பன மனித சுற்றோட்டத்தின் சகல கட்டங்களிலும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. கருவிலிருந்து மனிதன் பிறப்பதற்கு முன்பாகவும், பிறந்த பின்பாகவும் பல்வேறு வகைப்பட்ட ஒப்பந்தங்களை அவன் தான் வாழப்போகும் மனிதவர்க்கத்துடன் அவனிற்குத் தெரிந்தும் அதேவேளை அவனை அறியாமலுமே பல கட்டத்திலும் செய்து கொள்கின்றான். அதில் மனிதவர்க்கமென்ற ரீதியில் ஓர் அடிப்படை மனித ஒப்பந்தம் எல்லோரிற்கும் சமமாக இருக்கும், இதைவிடத் தனித்தனியே தாய்க்கும் மகனிற்குமிடையே ஓர் ஒப்பந்தம், அதேபோல காதலன் காதலிக்கிடையே ஓர் ஒப்பந்தம், இவ்வாறு மனிதவர்க்கத்தின் சகலகட்டங்களிலும் ஒப்பந்தமென்னுமோர் சாதனம் புலப்பட்டும் புலப்படாமலும் செயற்பட்டுக் கொண்டிருக்கும் 1 காதலனிற்கும், காதலிக்குமிடையே ஒன்று படுத்தலாகிய ஒப்பந்தம் குலையும்போது இருவருமே பிரிந்து விடுகிறார்கள். இதேபோலத்தான் எந்தவொரு அமைப்பினதும் ஒப்பந்தத்தை மீறும் பொழுது அவர் அந்த அமைப்பிலிருந்து விலகிக் கொள்கிறார். எனவே மனிதம் என்கின்ற அடிப்படை ரீதியான சமத்துவம் மிகு ஒப்பந்தத்தை மீறும்போது அவர் அந்த மனித அணியிலிருந்து விலகிக்கொள்கின்றார். மனிதவர்க்கத்தை விட ஓர் மேலான அணி உலகியல் வாழ்வில் இல்லை என்பதால் அவ்வாறு மீறிய நபர் ஓர்கீழான அணியையே சென்றடைகின்றாரென்றும், அவ்வாறு மேல் நிலையினின்று தாமாகவே கீழ் நிலையைச் சென்றடைபவர் மடையரேயென்றும் சந்தேகமின்றிக் கொள்ளமுடிகின்றது. அதேவேளை காரணமின்றி ஒப்பந்தத்தினை மீறுபவன் மடையனுக்த்தான் இருப்பானென்பதால் நியாயமின்றி மனித ஒப்பந்தத்தை சாதியெனும் வரட்டுச் சொல்லால் மீறுபவர்கள் நிட்சயமாக மடையரே தான்

ஓர்தாழ்த்தப்பட்டவரெனக் கருதப்படுபவர் கிணறு வெட்டவும் வெட்டும் வேளை அதனில் தண்ணீரள்ளவும் அனுமதிக்கப்படலாம். ஆனால் கிணறுவெட்டி முடிந்த பின் அதனிற் தண்ணீர் அள்ள அந்த நபரை அனுமதிக்கப்படாதாம். இதேபோலத்தான் வீடுகட்டவும் அவ்வேளை அதன் எந்தவோர் அறையுள்ளும் செல்லவும் அனுமதிக்கலாமாம். ஆனால் வீடு கட்டி முடிந்தபின்பு மட்டும் அவரை உள்ளே செல்ல அனுமதிக்க கூடாதாம், அதாவது அவர் கைவண்ணத்தில் உரு

வான வீட்டில் வசிக்கலாம். ஆனால் அவன் மட்டும் வீட்டிற்குள் நுழையக்கூடாதாம். இப்படியான விடயங்களைக் கடைப்பிடிப் போர் நிட்சயமாக மடையர்தானே. தீவுப் பகுதி மக்கள் என்னும் ஓர் சாதிப் புறக்க ணிப்பு. இதுதான் விந்தையிலும் விந்தை. அதாவது தீவுப்பகுதி மக்கள் என்று ஒரு பகுதி மக்களைப் புறக்கணிக்கின்றவர்கள் வாழ்கின்ற நாடே தீவாகவும் இருக்கின்றது. தானே ஒரு தீவில் வாழ்ந்து கொண்டு இன்னோர் பகுதி மக்களை தீவுப்பகுதியினர் என்று புறக்கணிப்போர் மடையர்தானே. இதனை உற்று நோக்கும் போதுதான் அந்த மடையரின் விசித்திரமே புலப்படுகிறது.

சாதிப் பாகுபாட்டைப் பொறுத்தவரை யில் தமக்கது பிழையானதுதான் என் கின்ற உண்மை தெரியுமென்றும், எனவே தாம் மடையர்கள் அல்லவென்றும் ஆனால் சமுதாயக் கட்டுப்பாட்டிற்காக தாமதனைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளதென்றும், அவ் வாறு கடைப்பிடிக்காது விட்டால் தம்மை யும் தாழ்ந்தவரெனப் புறக்கணித்து விடுவார் கள் என்று வக்காலத்து வாங்கும் கூட்ட முமுண்டு. இங்கு மடையர்கள் சொல்லும் வாறெல்லாம் ஆடுவதும் அந்த மடையர் களுடைய கட்டுப்பாட்டை தன்னகத்தே யேனும் உடைக்க முடியாமற் கோழை களாய் இருப்பதுவும் முழுமையான மடைமையேயாகும். எனவே இங்கு இப் பேற்பட்டவர்களும் மடையர்களேதான்.

சாதி ஒதுக்கீடென்பது குற்றச்சாட்டெ துவுமற்ற நிரபராதிகள் மீது விதிக்கப் படும் ஓர் கொடிய தண்டனையாகும். அதா வது இந்தியாவில் ஓர் நபர் ஏதாவது ஓர் குற்றம் செய்திருந்தால் அக்குற்றத்திற்காக பஞ்சாயத்தால் வழங்கப்படும் அதிஉயர் தண்டனை அவனை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைப்பதேயாகும், அதாவது அவன் அந்த சமூகத்தினுடைய எந்த ஓர் வீட்டினதும் மங்கல, அமங்கல மாகிய எந்தவிதமான தொரு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்ற முடி யாது. பூட்டப்படாது விட்டாலும் சமூகச் சிறையுள் இடப்படுகின்றான். இது எவ் வாறு ஓர் தண்டனையாகுமோ அவ்வாறு தான் இந்தச் சாதிப் பாகுபாடென்பதும் ஓர் தண்டனையாகும், இங்கு எந்தக் குற்ற முமறியாத நிரபராதிகள் மீது தாழ்ந்தவ ரெனக் குற்றம் சுமத்தி சமூகத்திலுருந்து ஒதுக்கிவைப்பதாகும். இங்கு உயர்ந்த சாதிக் காரரென்போர் ஓர் அநீதிக்கார ராகக் காணப்படுகிறார்கள். காரணமோ, நியாயமின்றித் தண்டனை வழங்குவது மடையரிற்குரிய குணதிசயத்தில் ஒன்றாகும், இங்கு குற்றச்சாட்டுகள் என்ன? வீதி களின் குப்பை கூழங்களைக் கூட்டி சுத்தம் செய்து அழகுபடுத்துவதன் மூலம் சுகா தாரவசதியுடன் மற்றயோரை வாழவைப் பது தான் குற்றமா? அழுக்குப் படிந்த ஆடைகளைச் சுத்திகரித்து அதனை அழகு படுத்தி அணியவைப்பதுதான் குற்றமா? சிகையை அலங்கரித்து சமுதாயத்தில் அழ குடன் வாழவைப்பதுதான் இன்னொரு பகு தியினரின் குற்றமா? அவ்வாறு இவர்கள் செய்வதுதான் குற்றமென்றால் தங்கள் தாடி மீசைகளை அலங்கரிக்கும் ஒவ்வொரு வரும் குற்றவாளிதான், வீட்டைச் சுத்தம் செய்தும் பிள்ளைகளின் ஆடைகள் முதலிய வற்றைச் சுத்தம் செய்தும் அலங்கரித்தல் போன்ற இதேமாதிரியான கடமைகளைச் செய்யும் ஒவ்வொருவரின் தாயும், தந்தை யும், சகோதரமும் உபசரித்து விருந் தளிப்போரும் குற்றவாளிகளே, எனவே இந்தத்தாய், தந்தை, சகோதரம், விருந் தளிப்போர் ஆகியோர் தாழ்த்தப்பட்ட சாதிகளாவர். இன்னும் உற்று நோக்குமி டத்து பயன் பாட்டை ஏற்படுத்திக் கொள்வதன் பொருட்டு வாழ்க்கைக்கு அத் தியாவசியமான துணைபுரிவதன் மூலம் குற்ற வாளிகளாத் தாழ்த்தப்படுவதென்றால் மனை வியைக் கட்டியணைப்பதுவும், முத்தமிடுவ துவும் குற்றமே அப்படியாயின் மனிதவர்க் கமே இருக்கமுடியாது. மறுகோணத்தில்மேற் கூறிய குற்றவரம்புகளுள்ளும் உயர்ந்தோன் எனப்படும். எந்தவோர் மனிதனும் அடங் குவானென்பதால் அவனும் தாழ்த்தப்பட்ட சாதியேதான். இந்த இடத்திற்தான் சாதிப் பாகுபாட்டுக்காரர் எந்தளவு தூரம் முழு மடையர் என்று தெரிகின்றது, இந்தஇடத் திற்தான் சாதிப்பாகுபாடென்பது எந்தவித மானதொரு விடையும் பகர முடியாததாய் தனக்குத்தானே கழுத்திற் சுருக்கிட்டு முழி களைப் பிதுக்குகின்றது, வாயைப் பிழக்கின் றது, நாக்கைத்தள்ளுகின்றது, திக்குமுக்காடி வாயாலும் மூக்காலும் இரத்தம் கக்குகின் றது. முதலாளித்துவத்தின் இறுதி நிலையில்

அதனுடைய தற்கொலை பற்றிய மாமேதை மாக்சின் வர்ணனை இச்சாதிக்கொடுமை யென்னும் இடத்தில் மிகவும் துலக்கமாகப் பொருந்துகின்றது.

மொழிரீதியான புறக்கணிப்பைவிடசாதி ரீதியான புறக்கணிப்பு ஓர் கொடிய மடைமையாகும். அதாவது சாதிப்பாகுபாடென்பது எந்த விதத்திலும் அர்த்தமற்றதாய் அடிப்படையில் இயக்கசக்தியற்றதாகவே காணப்படுகின்றது, தன்னகத்தே எந்த விதமானதொரு இயக்க சக்தியுமற்ற இந்தப் பாகுபாடு பூச்சியத்தில் வைத்தே மடையர்களால் சுழட்டி இயக்கப்படுகின்றது. ஆனல் மொழியென்பது தன்னகத்தே இயங்கும் தன்மை வாய்ந்த அர்த்தமுள்ள செயற்பாட்டை மையமாகக் கொண்டு சுழல்கின்றது. 2. அது வழக்கத்தில் உயிரோட்டமான பாவனையில் உள்ள ஒன்ருகும். எனவே இயங்கிக்கொண்டிருக்கின்றபெறுமானமுள்ள ஒன்றிலிருந்து பாகுபாட்டை ஏற்படுத்துபவர்களைவிட அர்த்தமற்ற ஒன்றை இயக்கிக் கொண்டு இருப்பவர்கள் அதனை இயக்கும் வேகத்தின் மூலம் சமுதாயத்தைத் துன்புறுத்துபவர்கள் கொடுமையான மடையர்களேயாவர். இங்கு சாதிப்பாகுபாடென்பது அர்த்தமற்றதென்றும் அது உண்மையில் பெறுமதியற்ற ஒன்றேயென்றும் மேலே பலவாருன காரணங்கள்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மொழி வேறுபாட்டின் காரணமாக இன்னேர் மொழியை ஆக்கிரமித்துக் கொள்பவர்கள் இரக்கமும் மனிதாபிமானமும் அற்றவர்கள் என்பது உண்மைதான். ஆனல் அடிப்படையான ஒப்பீட்டு ரீதியில் சாதிப்பாகுபாடு அதைவிடக்கூடிய மடமையும், மனிதாபிமானமற்ற தன்மையும் கொண்டது. மனிதனைப் பாதிக்கும் எந்தவிதமானதொரு அமைப்பும் தானே அழியத்தவறும் பட்சத்தில் இரத்த ஓட்டத்தினுலாவது ஒரு நாள் அது அழிக்கப்படுவதை வரலாறு நிரூபிக்கின்றது. அது சாதி, இனம், மதம், மொழி, நிறம் என்கின்ற எந்தவோர் அநீதியான பேதத்திற்கும் பொருத்தமுடையதாகும்

ஞானி கொன்பூசியஸ் அறிவைப்பற்றிக் கூறுமிடத்து ''நற்பண்பிற்கு வழி நடத்துவது ஒன்றுதான் உண்மையான அறிவென்றும், அறிவிற்காக அறிவல்ல மனிதனை பண்படுத்தி வளம்படுத்துவதற்காகவே அறிவென்று மேலும் விளக்கினர் '' எனவே மனிதனுகப் பிறந்ததன் பிரகாரம் அந்த மனிதனிற்குரிய இலக்கணமான அடிப்படை மனிதப் பண்புகளைப் புரிந்துகொள்ள முடியாத ஒருவன் எந்தவிதமான பாரிய இயந்திரங்களை உருவாக்கும் நுட்பங்களைத் தெரிந்திருந்தபோதிலும் அவன் மடையனேதான் அதாவது அந்தநுட்பம்ஒருகாலற்றபந்தலாகும் அறிவு மனிதர்க்கானதேயொழிய இயந்திரத்திற்கானதோ அன்றி அவன் வகுக்கும் பதவி கட்டோ ஆனதல்ல எப்படியும் அடிப்படையில், இயந்திரம் எதுவும் மனிதனிற்கேயானது, எனவே அந்த மனிதற்கான தாற்பரியத்தை உணர முடியாதவராயின் அவர் மடையரேதான் ஆதலினுல் எந்த ஓர் பெரும் பதவியை வகிப்பவராகஇருந்தாலும்சரி, நிபுணராக இருந்தாலும்சரி சாதிப்பாகுபாட்டைக் கடைப்பிடிப்பவர்களாயிருந்தால் அவர்கள் மடையர்களேதான்.

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் நரகத்தில் இடர்ப்படோம்'' என்று அப்பர் சுவாமிகள் பாடிய அந்த பதிகத்தை அதாவது எந்தவொரு மனிதனும் யாருக்கும் குடி (அடிமை) யல்ல. அவ்வாறு குடிமைப்படுத்தும் நரகத்திற் தள்ளும்போது நமனை (சாவிற்கு) அஞ்சவேண்டியதில்லை. அதனுல் நகரத்தில் இடர்ப்படுவதில்லை. என்பதாகிய இந்த சமர்த்துவம் மிக்க தன்மானமான இப்பாடலடிகளையெல்லாம் பல மடையர்களும் உச்சாடனம் செய்கிருர்கள். ஒரு வேளை உச்சாடனம் செய்யும் அந்த வேளையிலிருந்து அவர்கள் மடையரில்லையோ என்று கருதும்போது அவர்கள் வாயிலிருந்து தாழ்ந்தவன் எனப்படுவோன் சுவாமியைக்காவலாமா என்றமறுவார்த்தையும்பின்னுல்எழுதுவதுண்டுஅப்படியாயின்ஏன் முதலில் இந்த ஒப்புயர்வற்ற பதிக் வரியைப் பாடினுர் என்ருல் மடையரின் வாயில் அர்த்தம் தெரியாமலே எந்தச் சொற்களும் வெறும் புலம்பலாக வருவது இயற்கைதானே. எனவே அந்தமடையர் அலட்டல் மடையர் ஆவார்.

அர்த்தமற்ற முறையில் மனிதரைப் பாகுபடுத்திப் புறக்கணிப்பவர்கள், எந்த வகையிலும் காரணம்கூற முடியாமல் மனிதரைநசுக்கிக் கொள்பவர்கள் நிட்சயமாக மடையர்களேதான் என்பது அடிப்படை

யிலிருந்தே திட்டவட்டமாக நிறுவப்பட்டுள்ளது, சாதிப்புறக்கணிப்பின் வகைகளை ஒன்றோடொன்று மோதவிட்டதன் பிரகாரம் சாதிக்கொடுமையானது ஏதும் கூறக் கதியற்று வெட்கித் தலைகுனிவால் தன் கழுத்திலேயே சுருக்கிட்டு அவல நிலையில் அலங்கோலப்பட்ட தன்மையும் ருசுப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் சந்தேகத்திற்கிடமற்றவராகிய மடையர்கட்கும் அம் மடையர் கூட்டத் தலைவர்கட்கும் உண்மையான மனிதனுக உள்ள எந்தவொரு பாலகனுயினும் சரி உபதேசித்து மனித வர்க்கத்தைவிட்டு அவர்களை கீழ்நோக்கிச் செல்லவிடாது தடுத்து மீண்டும் மனித வர்க்கத்துடன் அவர்களை இணைக்க உயர்த்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

''கொடுமையான எதிரிகளைவிட மடையரான நண்பர்கள் மிகவும் கெடுதலானவர்கள்.''

மூலம் — போதிசத்துவர்

## அடிக்குறிப்பு

1. ஒப்பந்தம் என்று கூறப்பட்ட விடயம் பற்றியது :- இங்கு மனிதவர்க்கத்தின் அடியொட்டியாக இருந்து புலப்பட்டும். புலப்படாமலும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற அந்த ஒப்பந்தமென்னும் செயற்பாட்டைப்பற்றி மேலும் விளக்குவது ஓர் தனி விடயமாக் அமைந்துவிடும் என்பதாலும், கட்டுரை அளவைமீறி எழுதமுடியாமையாலும் அதனைக் கருகலாகவே விடவேண்டியது தவிர்க்கமுடியாததாய் அமைந்துள்ளது.

2. மொழியானது தன்னகத்தே இயக்கசக்தியைக்கொண்ட ஓர் தனிப்பட்ட அலகென்னும் கருத்தை மேலும் இங்கே விளக்க முடியாமையும் மேற்கூறப்பட்டவாறே.

◉

விடுதலையின் முதற்படியை

சாதியின் அழிவிற் சந்திப்போம்

கலகலவென்று
சிரித்து மகிழ
படியுங்கள்

எஸ். கே. நீசனின்

# கலகலப்பு

( நகைச்சுவை மாத இதழ் )

உதவி : C. S. பாஸ்கர்

( கள்ளுக்கடை கறிக்கடை
தவிர எங்கும் கிடைக்கும் )

◉ சிரிக்க வைத்தோம்
◉ சிரிக்க வைக்கிறோம்
◉ சிரிக்க வைப்போம்

தமிழ் மன்றத்தின் வளர்ச்சிக்கு

எமது வாழ்த்துக்கள்

N. தேவராஜா

273, பிரதான வீதி,

இரத்தினபுரி.

இலங்கையில் பிரசித்தி பெற்ற

ஜவுளி வியாபாரிகள்

க. நாகமுத்து அன் சன்

NAGAMUTHU'S

48, 50, பெரியகடை வீதி,

யாழ்ப்பாணம்.

அருந்துங்கள்

அண்ணா கோப்பி

உடனுக்குடன் வறுத்து
அரைத்துப் பெற்றுக்கொள்ள

அண்ணா தொழிலகம்

இணுவில்

# உன்னிடம் மயங்குகிறேன்

செல்வி சி. கனகசபை
( மனிதப் பண்பியல் பீடம் )

இளமைக் கனவுகளின்
இன்ப உணர்ச்சியது
இதயமதைப் பிழிந்தெடுத்து
அன்பெனும் சாறு சேர்த்து
ஊறி வரும் காதலே
காளையாம் அவர் மனதில்
எப்போ தான் சங்கமமோ ?
ஏங்குகின்றேன் என் மனதில்
ஈங்கிதனை யார் அறிவார் ?
இன்பதாம் இச்செல்வமே.

கள்ளமின்றிக் கபடமின்றி
வெள்ளை உள்ளத்துடன்
ஒற்றுமையாகக் கல்விக்கூடமதில்
ஒன்றி வைத்த விதியே
இரட்டையாக வெளியேற்ற
இரண்டு வருடங்கள் விளையாடி
இன்னமுமா வெற்றி காண
மதியுடன் போராட்டம்

விதியே தொடர்ந்து செல் தொடர்ந்து செல்
இலட்சியத்தை நோக்கி
எந்தன் ஆதரவை நல்கிடுவேன்
உந்தன் செயல்பாட்டில்
இன்னும் காலத்தை நீட்டியோ
சோதனையில் வீழ்த்திடாதே
தொடர்ந்து நீ செயல்படின்
தொல்லைகள் தீர்வது திண்ணமே

என்மனதில் இவ்விதையை
அவரேதான் விதைத்துவிட்டார்
எப்படித்தான் செப்பிடுவேன்
எள்ளளவும் கூச்சமின்றி

அவர்பார்க்கும் பார்வைகள் தானும்
வட்டமிடும் கண்விழிதான்
வேடிக்கைப் பேச்சுக்களை
கிட்டவந்து விடும்போது தானும்
என்மனம் படும் பாட்டை
அவர்தன்னும் அறிவாரோ

ஈங்கிதனைத் தெரிவிக்க
எத்தனைநாள் முயன்றிட்டேன்
முயன்றிடும் போதெல்லாம்
முந்திடும் ஒரு ஏக்கம்
காதல் அது எனக்கில்லை
என்றுதான் சாற்றிடுவாரோ
கூடப்பிறவாத தங்கையென்று
கூச்சமின்றி கூறுவாரோ

மங்கையர்கள் ஆடவர்கள்
மண்ணிலுள்ள யாவருக்கும்
மிதக்கும் இந்த உணர்ச்சிகள்
என் மனதில் உதித்தது என் குற்றமல்ல
மறைவின்றி நான் சொல்வேன்
மன்மதன் சால் அவர் பார்வை
எனைப்பார்க்கும் போதெல்லாம்
ஏற்பட்ட உணர்ச்சிகளே

எந்நாளும் அவர் நினைவால்
வாடுகின்ற என் மனதோ
வாழும் நாள் எல்லாம் — அவர்
வீரக்கரம் பிடித்தே வாழத் துணிந்திட்டது
விதியே அவர் பெற்ருேர் என் பெற்ருேர்
என் சுற்றம் அவர் சுற்றம்
மனமார வாழ்த்திடவே
சேர்த்திடுவாய் எம்மையே.



# சரஸ்வதி விலாஸ்

(புதிய நிர்வாகம்)

புதிய இனிய சைவ உணவுகள்

சுவைமிக்க சிற்றுண்டிகள்

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# சரஸ்வதி விலாஸ்

வளாகச் சந்தி

325, பலாலி வீதி,

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

அழகிய
தங்கப்பவுண்
நகைகளுக்கும்
வைரங்களுக்கும்
சிறந்த
ஸ்தாபனம்

## கே. டி. எம்.

## ஜுவல்லர்ஸ்

நகை வைர வியாபாரம்

67, கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

போன்: 286



## குமரன் ஸ்ரோர்ஸ்

பாடசாலைப் புத்தகங்கள்
அப்பியாசக் கொப்பிகள்
மின்சார உபகரணங்கள்
சைக்கிள் உதிரிப் பாகங்கள்
மோட்டார் உதிரிப் பாகங்கள்

நியாயமான விலையில்

பெற்றுக்கொள்ளலாம்

உரிமையாளர்

S. K. சின்னத்தம்பி
குமரன் ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி
சாவகச்சேரி



சுவையான சுத்தமான
சைவ உணவுகளுக்கு
யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்

## வை. சி. சி. கு.

காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்



காலத்திற்கு ஏற்றவகையில்
நவநாகரீகமாகத் திகழவிரும்பும்
ஆடவரும் நங்கையரும்
நகரில் நாடும் தலைசிறந்த நிறுவனம்

ஸ்மக்ஸ் ரெயிலறிங்

உங்கள் ஆடைகளை
சிறந்த முறையில் தைத்துக் கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்

## ஸ்மக்ஸ் ரெயிலறிங்

10, 12, பஜார் லேன்

யாழ்ப்பாணம்

| | வடமாகாண மாவட்டங்கள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மன்னர் | | | | யாழ்ப்பாணம் | | | | வவுனியா * | | | |
| | எண்ணிக்கை | | நூற்று வீதம் | | எண்ணிக்கை | | நூற்று வீதம் | | எண்ணிக்கை | | நூற்று வீதம் | |
| | 1911 | 1971 | 1911 | 1971 | 1911 | 1971 | 1911 | 1971 | 1911 | 1971 | 1911 | 1971 |
| இஸ்லாமியர் இலங்கை | 7842 | 19032 | 30·63 | 24·4 | 3292 | 9720 | 1·01 | 1·4 | 1220 | 6381 | 7·04 | 6·7 |
| இஸ்லாமியர் இந்திய | 250 | 1846 | 0·98 | 2·4 | 193 | 592 | 0·05 | 0·1 | 21 | 284 | 0·12 | 0·3 |
| தமிழர் இலங்கை | 15241 | 39751 | 59·53 | 51·0 | 3,21,019 | 6,48,462 | 98.26 | 92·1 | 13468 | 58819 | 77·69 | 61·6 |
| தமிழர் இந்தியா | 1490 | 13602 | 5·82 | 17·5 | 889 | 24,581 | 0·27 | 3·4 | 591 | 14191 | 3·41 | 14·8 |
| சிங்களவர் | 639 | 3568 | 2·5 | 4·6 | 403 | 20,402 | 0·12 | 2·9 | 1848 | 15541 | 10·66 | 16·3 |
| ஏனையோர் | 141 | 83 | 0·54 | 0·1 | 916 | 593 | 0·28 | 0·1 | 188 | 320 | 1·08 | 0·3 |
| மொத்தம் | 25,603 | 77,882 | 100 | 100 | 3,26,712 | 7,04,350 | 100 | 100 | 17336 | 95536 | 100 | 100 |

* 1911இல் முல்லைத்தீவு மாவட்டத்தின் குடிப்பரம்பலே 1971இல் வவுனியா மாவட்டத்தின் குடிப்பரம்பலுடன் ஒப்பமிடப் பட்டுள்ளது.

## சிங்களவர் மயமாகுமா?

| | கிழக்கு மாகாண மாவட்டங்கள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மட்டுநகர் | | | | அம்பாறை * | | | | திருமலை | | | |
| | எண்ணிக்கை | | நூற்று வீதம் | | எண்ணிக்கை | | நூற்று வீதம் | | எண்ணிக்கை | | நூற்று வீதம் | |
| | 1911 | 1971 | 1911 | 1971 | 1911 | 1971 | 1911 | 1971 | 1911 | 1971 | 1911 | 1971 |
| இஸ்லாமியர் இலங்கை | 60383 | 61,188 | 39·23 | 23·7 | — | 1,23,935 | — | 45·4 | 9,529 | 60,698 | 32·03 | 31·6 |
| இஸ்லாமியர் இந்திய | 312 | 577 | 0·20 | 0·2 | — | 1153 | — | 0·4 | 185 | 840 | ·62 | ·4 |
| தமிழர் இலங்கை | 83382 | 174736 | 54·17 | 67·7 | — | 60152 | — | 22·0 | 16,913 | 67516 | 56·84 | 35·2 |
| தமிழர் இந்தியா | 566 | 7925 | 0·37 | 3·1 | — | 3769 | — | 1·4 | 320 | 5,739 | 1·08 | 3·0 |
| சிங்களவர் | 5721 | 11282 | 3·74 | 4·4 | — | 82,868 | — | 30·4 | 1,138 | 55,308 | 3·83 | 28·8 |
| ஏனையோர் | 3,529 | 2396 | 2·29 | 0·9 | — | 908 | — | 0·4 | 1,670 | 888 | 5·6 | 1·0 |
| மொத்தம் | 196090 | 258104 | 100 | 100 | — | 2,72,790 | — | 100 | 29,755 | 191,689 | 100 | 100 |

* 1911இல் அம்பாறை மாவட்டம் இருக்கவில்லை அது மட்டக்களப்பு மாவட்டத்துள் அடங்கியிருந்தது.

மூலங்கள்
1. Census of Ceylon 1911
2. Ferguson's Srilanka's Dineetary 74175

அன்பளிப்பு

நவநாகரீக முறையில்
உங்கள் ஆடைகளை தைத்து
அணிய வேண்டுமா இன்றே
சிறந்தமுறையில் குறைந்த செலவில்
ஆடைகளை தைத்து அளிக்கும்
யாழ்நகரில் சிறந்த

ஒரே ஸ்தாபனம்

"வெல்பிற்"

20, பெரியகடை யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண வளாகத்
தமிழ் மன்றத்தின்
ஓராண்டு நிறைவை
வாழ்த்துகின்றோம்

முருகன் எலக்றிக்கல்

(மின்சார ஒப்பந்தக்காரரும்
விற்பனையாளரும்)

618, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

தந்தி 'கறன்ட்' தொலைபேசி 7110

விவசாயப் பெருமக்களே!
உங்களுக்கோர் நற்செய்தி
உங்களுக்குத் தேவையான
விவசாய மருந்துகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

'வின்ரோ'
ரிரேடிங் கொம்பனி
WINTO TRADING
COMPANY

உமையாளர்கள்
மகேந்திரன் யோசேப்பு
அல்பிரட் யோசேப்பு

6. நவீன சந்தை
மேல் மாடி
யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

M. நாகறட்னம்

62, ஸ்ரான்லி றோட்

யாழ்ப்பாணம்

தொலைபேசி எண் 7606

# பிறப்பாக்கமும் மொழியும்

— கலாநிதி அ. சண்முகதாஸ் —

'பிறப்பாக்கம்' என்பது கணிதவியல், பௌதிகவியல் போன்ற துறைகளுடன் தொடர்புடைய ஒரு கலைச்சொல்லாகும். கணிதவியலில் இதனுடைய தொடர்பினைப் பின்வரும் உதாரணமூலம் தெளிவுறுத்தலாம்: 0, 1, 2, 3, 4, 5 ……… என்னும் மதிப்பீடுகளில் ஒன்றினை x பெறும் போது, $2x+1$ எனும் செயற்கூறு 1, 3, 7, 9, 11 ……… என்னும் தொடரினைப் பிறப்பிக்கின்றது. ஒரு மொழியின் சொற்றொடரியல் அமைப்புக்கள், இலக்கண விதிகளுக்கேற்பத் தர்க்கரீதியாகப் பிறப்பிக்கப்படுகின்றன என்றே கூறவேண்டும். மொழியோடொட்டிய 'பிறப்பாக்கம்' கணிதவியற் பிறப்பாக்கத்துடன் தொடர்புடையதாகவுள்ளது.

நாம் ஒரு நாளிலே எத்தனையோ வாக்கியங்களை அமைத்துப் பேசி விடுகிறோம். இவ்வாறு அமைக்கப்படும் வாக்கியங்களோ எண்ணுக்கடங்காதவை. அத்துடன் நாம் ஒரு தடவை கூறிய வாக்கியத்தை அப்படியே திரும்ப எமது வாழ்நாளிலே கூற முடியாமலுமுள்ளது. ஆனால், எண்ணுக்கடங்காதனவாகிய வாக்கியங்களுக்கு அடிப்படையாக அமையும் இலக்கணக் கூறுகளும் சொற்களும் எண்ணக்கூடியனவாகும். இலக்கணக் கூறுகளையும் சொற்களையுஞ் சேர்த்து வாக்கியத் தொடர்களாக அமைக்க உதவும் விதிகளும் எண்ணக்கூடியனவே. இது மொழியினுடைய 'ஆக்கம்' என்னும் பண்பாகும். இப்பண்பினை எமது மரபுவழித் தமிழ் இலக்கணக்காரர் யாவரும் உணர்ந்திருந்தனர் என்றே கூறவேண்டும். எத்தனையோ எண்ணுக்கடங்காத வாக்கியங்களைப் பிறப்பிக்கக் கூடிய தமிழ் இலக்கணம் எனத் தொல்காப்பியத்தையோ நன்னூலையோ நாம் கூறுவோம். இவ்விலக்கணம் ஒவ்வொன்றும் எண்ணிக் கூறக்கூடிய சூத்திரங்கள் அல்லது விதிகளால் ஆகியிருப்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். 'பிறப்பாக்கம்' என்பதற்கு மொழியினுடைய இத்தகைய ஆக்கப்பண்பு ஒரு பொருளாக அமைகின்றது. ஆனல், மொழியியலில் 'பிறப்பாக்கம்' என்னுஞ் சொல் இக்கருத்தில் மாத்திரம் உபயோகப்படவில்லை. கணிதவியற் கருத்திலமைந்த 'பிறப்பாக்கத்தினை' நவீன மொழியியலார் பெரிதும் விரும்புகின்றனர். இக்கட்டுரையின் முதற் பந்தியில் காட்டிய கணித விதியின் தெளிவு, சுருக்கம், கூர்மை ஆகியன மொழி விதிகளுக்கும் அமைய வேண்டுமென்பதையே நவீன மொழியியலார் வற்புறுத்துகின்றனர்.

மரபுவழித் தமிழ் இலக்கண விதிகளிலே சுருக்கம் காணப்படினும், தெளிவு கூர்மை ஆகியன காணப்படவில்லையென்றே கூற வேண்டும். உதாரணமாகத் தொல்காப்பியர் கூறும் இலக்கண விதியொன்றினை நோக்குவோம்.

''னஃகா னொற்றேயாடூஉ வறிசொல்''

இது தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் ஐந்தாவது சூத்திரமாகும். 'ன்' என்னும் எழுத்தினை இறுதியிற் கொண்ட சொற்கள் ஆண்பாற் சொற்கள் என்பதே இச் சூத்திரத்தின் பொருளாகும். இது கணிதவியற் சூத்திரத்தினைப்போலல்லாது, கூர்மை அற்றதாயுள்ளது என்பதை இலகுவாக விளக்கமுடியும். தமிழிலே 'ன்' ஈற்றினையுடைய சொற்கள் எத்தனையோ உள. நிலன் (112), களன், (376), மடன் (377) வளன், (352) போன்ற சொற்கள் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரங்களிலேயே இடம்பெறுகின்றன (அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளவை சூத்திர எண்களாகும்). இவையெல்லாம் ஆண்பாற் சொற்களா? தொல்காப்பியருடைய சூத்திரத்தின்படி 'ன்' ஈறுகவுடைய சொற்களெல்லாம் ஆண்பாற் சொற்களென்றே கொள்ள வேண்டியுள்ளது. தெளிவின்மை, கூர்மையின்மை ஆகிய பண்புகள் இச் சூத்திரத்திலே காணப்படுகின்றன என்று கூறில் தவறாகாது. இச் சூத்திரத்தின் மயக்கத் தன்மையையும் அத

ஞல் ஏற்படும் தெளிவின்மையையும் பின் வருமாறு காட்டலாம் : சூத்திரத்தினைப் படிப்பவர் அதற்கு இருவகையான பொருள் கொள்ளக்கூடியதாக அது அமைந்துள்ளது

(அ) ஆண்பாலை அறிவிக்குஞ் சொற்கள் னகர ஈறுடையனவே

(ஆ) னகர ஈறுடையனவே ஆண்பாற் சொற்கள்

எவ்வகையிற் பொருள் கொள்ளினும்: இது ஒரு பொதுமைப்பாட்டுச் சூத்திரம் என்று கூறுவதற்கில்லை விதிவிலக்குகளின் தன்மையினையும் முதன்மையினையும் அனுசரித்தே பொதுமை விதி அமைக்கப்பட வேண்டும்.

ஆறுமுகநாவலர் இலக்கணச் சுருக்கத்தில் (195) ''அள், ஆள், இ, ள் என்னும் விகுதிகளை இறுதியிலே உடைய பெயர்கள் உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்களாம்'' என்று கூறுவர். அவர் பெண்பாற்படர்க்கைப் பெயர்களுக்குக் கூறிய விகுதிகள் பெயரடிகளுடனு அல்லது வினையடிகளுடனு சேர்ந்து வரும் என்று கூறினுரில்லை. ஆகவே, வினையடிகளாகிய 'மூடு' 'சேர்' ஆகியவற்றுடன் 'இகர விகுதி' சேர்ந்து 'மூடி' (மூடு + இ) 'சேரி'(சேர்+இ) ஆகிய தொழிற் பெயர்கள் உண்டாகும் பொழுது, அவற்றையும் உயர்திணைப் பெண்பாற் படர்க்கைப் பெயர்கள் என்று கூறுவதற்கும் இடமுண்டல்லவா?

இதுகாறும் கூறியவற்றிலிருந்து பின்வரும் கருத்துத் தெளிவாகின்றது : மொழிக்குப் 'பிறப்பாக்க' இலக்கணம் என்று கூறும்போது, 'பிறப்பாக்கம்' என்பது இரண்டு கருத்துக்களிலே உபயோகப்படுகின்றது. ஒன்று, மொழியின் 'ஆக்கப் பண்பு' ஆகும். மற்றையது மொழியின் சொற்ருெடரமைப்புக்களைப் பிறப்பிக்கும் இலக்கண விதிகள் தெளிவு, சுருக்கம், கூர்மை ஆகியனவற்றைக் கொண்டமையும் 'பண்பு' இரண்டாவது பண்பு மரபுவழிப்பட்ட தமிழிலக்கண விதிகளிற் காணப்படவில்லை என்பதற்கு ஓர் உதாரணமூலம் விளக்கங்கொடுக்கப்பட்டது. இது போன்றுபல உதாரணங்கள் காட்டமுடியும். விரிவஞ்சி விடுக்கப்பட்டுள்ளது. இனி, மொழியின் 'ஆக்கப் பண்பு' பற்றி இன்னுஞ் சிறிது விரிவாக நோக்குவோம்.

மனித மொழியின் ஆக்கப்பண்பினை மிருகங்களுடைய சைகைகளுடன் அதனை ஒப்பிட்டு நோக்கும்பொழுது தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாயுள்ளது. மனிதனைப்போல மிருகங்கள் மொழி வல்லமையுடையன என்று கூறமுடியாது. ஆனல் மனிதமொழி மிருகங்களின் சைகைகளிலிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்று அறிதல் சுவையுடையதாயிருக்கும். உயிர், மெய் எனப்படும் ஒலிகள் சேர்ந்த சிறிய அலகுகளாக மனித மொழியினைப் பிரிக்கலாம். ஒலியன்கள் என அழைக்கப்படும் இவ்வலகுகள் தமிழ்மொழியில் 30 எனவும் ஆங்கிலத்தில் 35—45 எனவும், இத்தாலிய மொழியில் 27 எனவும் அமைந்து கிடக்கின்றன. பல்வேறு வகைப்பட்ட மனித மொழிகள் 11 தொடக்கம் 67 வரையிலான ஒலியன்களைக் கொண்டனவாயுள்ளன. இதே போல மிருகங்கள், பறவைகளின் சைகைகளையும் அடிப்படைச் சைகை அலகுகளாகப் பிரிக்கலாம். அத்துடன் ஒவ்வொரு வகையான மிருகத்துக்கோ பறவைக்கோ எத்தனை அடிப்படைச் சைகை அலகுகள் உண்டு என்பதையுங் கணக்கிடலாம். றஸல் தம்பதிகளால் தயாரிக்கப்பட்ட பின்வரும் அட்டவணையில் மனிதமொழி ஒவ்வொன்றினது ஒலியன் எண்ணிக்கைபோல மிருகங்கள் பறவைகளின் அடிப்படைச் சைகை அலகு எண்ணிக்கைக்ள் கொடுக்கப்பட்டுள்ளன.

| விலங்கினம் | அடிப்படைக் குரற்சைகைகளின் எண்ணிக்கை |
|---|---|
| பறவைகள் | |
| வீட்டுக்கோழி | 20 |
| விலங்குகள் | |
| பசு, எருமை | 8 |
| பன்றி | 23 |
| நரி | 36 |
| டொல்பின் | |
| அமேசன் நதி டொல்பின் | 7 |
| பசுபிக் டொல்பின் | 19 |
| குரங்குவகை | |
| கொரில்லா | 23 |
| சிம்பன்சி | 25 |
| மனித மொழிகள் | 11—67 |

இந்த அடிப்படையில் மாத்திரம் மனித மொழிகளையும் மிருகக் கூப்பாடு முறைகளையும் ஒப்புநோக்க யாராவது முனையலாம். ஆனால் அலகுகளை மாத்திரங் கொண்டு இவ்வொப் புமையைக் கூறமுடியாது. பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே அரிஸ்டோட்டில் ''மனித மொழியின் உச்சரிப்புச் சைகைகள், பிறந்த குழந்தைகளின் அல்லது விலங்குகளின் உணர்ச்சிப் புலப்பாட்டைப் போன்றனவல்ல. விலங்கின் ஒலியரவங்கள் ஒன்று சேர்ந்து சீர்களாகமாட்டா'' என்று கூறியுள்ளார். மனிதரும் குரங்குகளும் ஒலியரவங்கள் ஏற்படுத்தினாலும், அவை ஒன்றுசேரும் பண்பு - அதாவது ஒன்று சேர்ந்து சீர்களாகும் பண்பு மனிதர் உண்டாக்கும் அரவங்களிலேயே காணப்படுகின்றது.

உண்மையான மொழிக்கும் தன்வயப்பட்ட சைகைக் குறிகைகளுக்குமிடையே உள்ள வேறுபாட்டினை இன்னொரு வகையிலே தெளிவுறுத்தலாம். இரண்டும் உணர்ச்சி, பொருளியல்பு ஆகிய இரு வேறு வகைப்பட்ட விடையங்களையொட்டிய செய்திகளை அறிவிக்கும். நாம் ஒருவருடைய குண இயல்புகளைப் பற்றிப் பேசலாம்; எமது உணர்வுகளை வெளிப்படுத்தலாம். எம்மைச் சூழவுள்ள பொருட்களைப் பற்றியும், சமூகத்தில் எமதுவாழ்க்கையோடொட்டிய தொழில்நுட்ப விடயங்களைப் பற்றியும் நாம் பேசலாம். மிருகங்களும் இதே போன்று தமது கோபவுணர்வையோ, பசி நிலையையோ சில ஒலியரவங்களாற் புலப்படுத்தும். உணவு இருக்கின்றது பற்றி அல்லது அபாயம் நெருங்குகின்றது பற்றியும் அவை ஒலியரவங்களாலே தெரியப்படுத்தும். ஆனால் மிருகங்களுடைய ஒலியரவங்கள் தன்வயப்பட்ட சைகைக் குறிகள் என்றே கூறவேண்டும். ஏனெனில், உணர்ச்சிக்கும் அதனைக் குரல், உடற் குறியீடுகள் ஆகியனவற்றாற் புலப்படுத்தலுக்கும் இடையிடையேயுள்ள நெருங்கிய தொடர்பு மிருகச் சைகைச் சேர்க்கைகளை ஆட்சிப்படுத்தி வரையறை செய்கிறது. மிருகங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு சைகையும் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சி நிலையுடன் தொடுக்கப்பட்டுள்ளது. சைகைச் சேர்க்கைகள் உணர்ச்சிச் சேர்க்கைகளையே பிரதிபலிக்கின்றன என்று கூறலாம். ஆனால் மிருகங்களால் அதீத பய உணர்வினையும் அதீத பால் உணர்வினையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே நேரத்தில் புலப்படுத்தும் சைகைச் சேர்க்கைகளை உண்டுபண்ண முடியாது. ஆனால் மனித மொழியிலோ எத்தகைய உணர்வு நிலையினையும் எந்நேரத்திலும் புலப்படுத்த முடியும். அத்துடன் எத்தனையோ வகையான புதிய சேர்க்கைகளையும் உண்டுபண்ண முடியும். இச் சேர்க்கைகளுக்கு, உணர்ச்சி விதிகளுக்குப் பதிலாக அளவை விதிகள் பயன்படுத்தப் படுகின்றன. இவ்வளவை விதிகளையே இலக்கணம் என்றும் சொற்றொடரியல் என்றும் நாம் கூறுவோம்.

மொழியைப் பேசுபவர் தான் முன்னெப்பொழுதும் உபயோகிக்காத சொற்றொடர்களையோ, தன் மொழியினத்தைச் சார்ந்தவர் எவரும் முன்னர் எப்பொழுதாவது உபயோகிக்காத புதிய சொற்றொடர்களையோ உண்டாக்க முடியும். இதுதான் மொழியினுடைய ஆக்கப்பண்பின் இரகசியமாகும். இதனை விளக்குவதற்கு றஸல் தம்பதிகள் நல்லதோர் உதாரணத்தைக் காட்டுகின்றனர்: இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது, இளம் கிழக்காபிரிக்கர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி அளிக்கப்பட்டது. அவ்வேளையில் ''சிவப்பு'', ''பச்சை'' ஆகிய சைகைகளைக் குறிக்க அவர்கள் மொழியிலே சொற்கள் இல்லாத காரணத்தினால் ஒரு பிரச்சினை ஏற்பட்டது. ஆனால், அவர்கள் மொழியிலேயுள்ள ''இரத்தத்தின் நிறம்'', ''இலைகளின் நிறம்'' என்ற சொற்றொடர்களால் அப்பிரச்சினை இலகுவாகத் தீர்க்கப்பட்டது. இவ்வகையிலே முற்றிலும் புதிய சந்தர்ப்ப நிலைகளை மனித மொழியாலேயே விவரிக்கமுடியும்; புதிய நிலைகளுக்கேற்றபடி புதியதொடர்களை ஆக்கவும் முடியும்.

---


குறிப்பு இக்கட்டுரை எழுதுவதற்குப் பின்வரும் உசாத்துணைகள் உதவின :

1. *Lyons, J,* **Chomsky**, *London and New York, 1970*
2. *Claire Russel and Russel, W. M. S. ''Language and animal Signals'' in* **Linguistics at Large**. *Ed. by Noel Minnis, The Trinity Press, London. 1971*

யாழ்ப்பாண வளாகத்

## தமிழ் மன்றத்தின்

பணி சிறப்படைய வாழ்த்துகிறோம்

# யாழ். மெற்றல்

நவீன சந்தை யாழ்ப்பாணம்

தொலை பேசி எண் 7596

# தமிழை மறப்பேனோ?

— காசி ஆனந்தன் —

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் — என்றன்
கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும் — வாழ்வு
கெட்டு நடுத்தெருவோடு கிடந்து
கீழ்நிலையுற்றாலும் — மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ்மகளின் துயர்
துடைக்க மறப்பேனோ?

நோயில் இருந்து மயங்கி வளைந்து
நுடங்கி விழுந்தாலும் — ஓலைப்
பாயில் நெளிந்து மரணமடைந்து
பாடையில் ஊர்ந்தாலும் — காட்டுத்
தீயில் அவிந்து புனலில் அழிந்து
சிதைந்து முடிந்தாலும் — என்றன்
தாயில் இனிய தமிழ்மொழியின் துயர்
தாங்க மறப்பேனோ?

பட்டமளித்துப் பதவி கொடுத்தொரு
பக்கம் இழுத்தாலும் — ஆள்வோர்
கட்டி அணைத்தொரு முத்தமளித்துக்
கால் கை பிடித்தாலும் — என்னைத்
தொட்டு விழுந்து வணங்கி இருந்தவர்
தோழமை கொண்டாலும் — அந்த
வெட்டிமனிதர் உடல்களை மண்மிசை
வீழ்த்த மறப்பேனோ?

பொங்கு வெறியர் சிறைமதிலுள் எனைப்
பூட்டி வைத்தாலும் — என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும் — உயிர்
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும் — ஒரு
செங்களம் ஆடிவரும் புகழோடு
சிரிக்க மறப்பேனோ?

With Best Compliments

From

K. V. KANDAPPA & Co.

General Merchants

PULOLY

வட இலங்கையிற் பிரபல

நகை வியாபாரிகள்

ஹரன் ஜுவல்லர்ஸ்

50, கன்னாதிட்டி

யாழ்ப்பாணம்

With Best Wishes

&

Compliments

From

SRI KRISHNA THEATRE

Sea View Road,

TRINCOMALEE

அழகிய தங்க வைர நகைகள்

தங்கள்

மனதிற்குகந்த நவீன முறையில்

கிடைக்குமிடம்

வி. எஸ். இ. நகைமாளிகை

8, காசுக்கடைத்தெரு,

திருகோணமலை

# தர்ம வியூகம்

— வல்வை ச. பாலசுப்பிரமணியம் —
(விஞ்ஞான பீடம் இறுதி ஆண்டு)

இப்ப ஏழுமணிதானிருக்கும். நிலவும் இப்பதான் மெல்லமெல்லமா மேலே வருகுது. இவ்வளவும் ஒரு மணித்தியாலமா எனக்கு ரவியின்ரை நினைவுதான். இந்த நிலவிலை இருக்கிற பிரகாசம் மாதிரித்தான் அவரின்ரை முகமும் இருக்கும். எனக்கு எப்ப எதைப் பார்த்தாலும் ரவி அதிலையெல்லாம் இருக்கிற மாதிரித்தான் இருக்கு.

"கமலா...... கமலா......"

அம்மாதான் கூப்பிடுகிறு.

"ம்...இதோ வாரன்" ... என்றபடியே கிணற்றடியில் இருந்து குசினிக்குள் வந்தேன்.

"என்னடி! நான் அப்பபிடிச்சுப் பாக்கிறன். நீயும் ஆறுமணியிலேயிருந்து கிணத்தடிதான் தஞ்சம் எண்டு இருக்கிறுய். அந்த மனுசன் வேலையாலை வாற நேரமுமாச்சு. வந்தவுடனை பசி பசி எண்டு பறக்கும். நானும் இந்த பாழாய்ப்போன படத்துக்கு போனதிலை நேரமும் போட்டுது. இந்தா இந்தக் கறியைப் பார்......" எண்டு அகப்பையை என் கையில் திணித்தாள்.

"புளியும் ஒழிஞ்சு போச்சு. கொஞ்சப் புளி வாங்கியாறன். கையிலே காசும் தீர்ந்து போச்சு. மனுசனுக்கு இப்ப உழைப்பும் சரியில்லை. உனக்கும் வயசும் ஏறிக்கொண்டு போகுது. மாப்பிள்ளை ஒண்டும் சரிவராதாம்"

நானும் அகப்பையால் கறியை துழாவியபடி இருந்தேன், அம்மா போயிட்டாள். திரும்பிவர அரை மணித்தியாலம் தன்னும் செல்லும். இன்றைக்கு 'யோகநாயகி' யிலே பார்த்த சிவாஜியின் படத்தைப்பற்றி பக்கத்து வீட்டு மாமிக்கு சொல்லாட்டி அவவுக்கு சோறும் தின்ன வராது மாமியும் பாவம் ... மாமா படத்துக்கு லேசிலை போகவும் விடமாட்டார் ... என்ன செய்கிறது? அம்மா சொல்லுறதை கேட்டுக் கொண்டு அப்படியே இருப்பாள் ...... என்னைக்கூட வரும்படி அம்மா கேட்டா. எனக்குப் போக விருப்பமில்லை. படம் தொடங்கிற நேரம் பார்த்து அந்த பெடியளெல்லாம் தியேட்டருக்கு முன்னலே நிண்டு போற வாற பெம்பிளைப் பிள்ளையள் எல்லாத்தையும் பார்ப்பாங்கள். நான் போனு என்னைக் கண்ட உடனே "பாவம் இந்தப் பிள்ளை" எண்டு என்ரை காதிலை விழத்தக்கதா சொல்லுங்கள். அவங்களுக்கெங்கை என்ரை கவலை தெரியப்போகுது. அவங்களெல்லாம் சிதம்பராவிலைதான் படிக்கிறவங்க போல இருக்கு. எனக்கும் ரவிக்கும் 'லவ்' எண்டு சிதம்பராவிலை இருக்கிற குஞ்சு குருமானுக்கெல்லாம் அப்பவே தெரியும் தானே!

நான் பத்தாம் வகுப்பு படிக்கேக்கை நவராத்திரி கொண்டாட்டம் வந்தது நவராத்திரி பூசை வந்தா அங்கே எல்லாருக்கும் கொண்டாட்டம். பெடியளெல்லாம் படிக்கமாட்டாங்கள்; வாத்திமாரும் படிப்பிக்க மாட்டினம். ஒவ்வொரு வகுப்பும் திருவிழா நடத்தும். கண்ணன் கோஷ்டி, விலாசினி கோஷ்டி எல்லாம் வரும். பத்தாததுக்கு வில்லுப்பாட்டு பிரசங்கம் எல்லாம் நடக்கும். அப்ப ரவி பன்னிரண்டாம் வகுப்பிலை தான் படிச்சவர். எனக்கு இப்பவும் ரவி வகுப்பிலை இருக்கிறது ஞாபகம் இருக்கு. என்ன மாதிரி இருப்பார்...? சரியா சிவாஜி மாதிரிதான் அவரை பார்த்தா இருக்கும். நான் தையலுக்கு டீச்சர் வந்திருச்கிறுவோ எண்டு பார்க்க போகேக்கை கடைக் கண்ணலே பாக்கிறனன். அவர் வகுப்பிலே மாஸ்டர் படிப்பிச்சு கொண்டிருந்தாலும் என்னைப் பார்த்து மெல்லமா சிரிப்பார். எனக்கென்னவோ அவரின்ரை சிரிப்பை பாக்காட்டி என்னவோ மாதிரி இருக்கும். டீச்சர் வந்திருக்கிறு எண்டு தெரிஞ்சாலும் விஜியை சும்மா சும்மா இழுத்துக்கொண்டு அதாலை போவன்.

"கமலா! . கமலா!...இஞ்சை வா. இந்த சைக்கிளை உள்ளே விடு. நான் முகம் கால், கழுவிப்போட்டு வாறன்...!" எண்டபடி ஐயாவும் படலைக்குள்ளாலே வர்ர சத்தம் கேட்குது.நான் கறியைஅப்பிடியேஅடுப்பிலே

விட்டுவிட்டு வீட்டு வாசலுக்கு ஓடிவாறன். ஐயாவும் பாவம்! வயசுமாச்சு!...கட்டுவேலை யாலை வர்ரவர். களைச்சுப் போய்விடுவார்...

''ஏன்பிள்ளை அம்மாவின்ரை சிலமெனை காணல்லை. எங்கேயடி போயிட்டா'' எண்ட படியே கிணத்தடிக்கு போமுர்.

''வேலையாலை வந்தாப்போச்சு...நானும் பக்கத்து வீட்டிலை ரெண்டு நிமிடம் போய் குந்த எண்டு போனனுன். அதுக்குள்ளே சும்மா சத்தம் போட்டுக் கொண்டு வர்ரியள்! எண்டபடியே அம்மாவும் வர்ரது தெரியுது.

எனக்கு தெரியும் அம்மா என்ன தான் கதைக்குஷியிலை இருந்தாலும் ஒரு காதைத் தீட்டிவைத்துக்கொண்டுதான் இருப்பாள். எங்கேயிருந்தாலும் ஐயா வந்த சத்தம் கேட்டவுடனே ஓடிவந்து விடுவாள் அவளுக் குத்தானே தெரியும் ஐயாவின்ரை குணம். பத்துநிமிசம் பிந்தினுப்போதும் என்னமாதிரி உதையும் பேச்சும் விழுமெண்டு. எப்படித் தான் அம்மாவும் இருக்கிறுளோ. நானும் ரவியுமெண்டால் இப்பிடித்தான் இருப் பமே! ... நான் குடுத்து வைச்சது அவ்வளவு தான். நானும் மெல்லமா சைக்கிளை உருட்டி வீட்டுக்குள்ளே விட்டன்.

அப்ப எனக்கெல்லாம் ஞாபகமிருக்கு. ரவிதானே ஒவ்வொருமுறையும் வகுப்பிலை முதலாவதா வாரவர். பிறகேன் அவர் படிக்கிறதை விட்டு விட்டாரோ...தெரி யல்லை ..

ஒரு நாள் ரவி... எனக்கு தெரியாது. விஜிதான் சொன்னவள். அவளின்ரை தமை யன் ராமுவும் ரவியோடைதானே படிச் சவர்... அவரின்ரை வகுப்பிலை தமிழ் படிப் பிக்கிற மாஸ்டர் ஏசினதுக்கு திருப்பி ஏசிப் போட்டாராம் அதுக்கு அந்த வாத்தியார் பிரின்சிப்பலிட்டை கூட்டிக்கொண்டு போய் விட்டாராம்.

எனக்கு அந்த தமிழ் வாத்தியாரை தெரியும். எவ்வளவு நல்லவர். அவரைப் பார்த்தாலே எனக்கென்னவோ எங்கடை அப்புவைப் பாக்கிறமாதிரித்தான். எங் கடை அப்பு செத்தப்பிறகு எனக்கு அவரை கண்டவுடனே எங்கடை அப்பு வின்ரை ஞாபகம் தான் வரும். என்ரை ரவி ஏன் அந்த மாஸ்டரோடை சண்டை போட்டவரோ தெரியல்லே, அதுக்கு அவை யள் ரவியை பள்ளிக்கூடத்தாலை தட்டிப் போட்டினம். அதுக்குப் பிறகு தான் எனக்கு அந்த வாத்தியாரை பார்த்த உடனே ஆத்திரம் ஆத்திரமாக வரும்... ஆனு ரவீயிலே தானும் பிழை... எண்டா லும் எனக்கு ரவியிலே பிழை மாதிரி தெரி யல்லே... என்ரை ரவி ஏன் பிழை விடு கிறுர்.

ரவியை பள்ளிக்கூடத்தாலே தட்டின பிறகு நான் பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்கு பஸ்ஸாலை வந்து இறங்கி நடந்து வரேக்கை தான் கண்டனுன். அப்ப அவர் நெடிய காட்டு வாசிகசாலையடியில் நிண்டவர். நான் அதாலைதான் வீட்டுக்கு வர்ரனுன். அப்ப நான் வரேக்கை ரவிக்கு பக்கத்திலே நிக் கிறபெடியளெல்லாம் மெல்லமா சிரிச்சவன் கள். எனக்கு அப்பதான் தெரியும் எங் கடை லவ் எல்லாம் பெடியன்களுக்கும், தெரியுமெண்டு.

எனக்கு டிசம்பர் சோதனையும் வந்தது. சோதனைக்கு நான் ஒரு நாள் போயிட்டு மத்தியானம் வீட்டுக்கு திரும்பி வந்தனுன். அப்ப ரவிமட்டும் வாசிகசாலையடியிலே நிண் டவர். நான் வாசிகசாலையடிக்கு வந்ததும் ரவி மெல்லமா எனக்கு கிட்ட வந்தார். அப்ப தான் நானும் ''என்ன ரவி?'' எண்டு மெல்லமா கேட்டன்.

''கமலா! நான் இந்தியாவுக்கு வள்ளத் திலே போகப்போறன். இனிமே விழுந்த மாவடி வியாபாரம்தான் சரி ...... என்ன! நான் போய்வாறன்'' எண்டு கேட்டார். நானும் பேசாமல் மெல்ல மெல்லமா நடந்து வந்தேன். ரவியும் சைக்கிளிலை மெல்லமா பக்கத்தாலே வந்தார்.

''ஏன் கமலா! நான் போறது உனக்கு பிடிக்கயில்லையோ ... சொல்லு''

''இல்லை ரவி அந்த ஆமிக்காரங்க ளெல்லாம் பிடிச்சா அடிப்பாங்களாம் கவன மாய் இருங்கோ''

எனக்கு ஞாபகமிருக்கு அப்ப ஒருக்கா ஆமிக்காரன் அடிச்சதிலே அம்மான் கை முறிஞ்சு இருந்தவர். அதுதான் பயமா இருந்தது. நான் அப்பிடிச்சொன்ன உட னே ரவி சிரித்தார். அது என்னைப்பாத்து

ஏளனமாச் சிரிச்சதுபோல இருந்தது. நாங்கள் பெம்பிளையள் அவையளிலே இருக்கிற விருப்பத்திலே அவையளுக்கு ஒண்டும் நடக்கக்கூடாது எண்டு பயப்பிடுறதைக் கண்டா அவைக்கு சிரிப்புத்தான் வர்ரது. அது என்னத்துக்கெண்டுதான் எனக்கு தெரியேல்லை.

ரவியும் கொஞ்சநேரம் பேசாம இருந்துவிட்டு, ''பயப்படாதே நான் போய் உழைச்சுக் கொண்டு வாறன்'' எண்டார்.

''சரி'' எண்டு நானும் சொன்னன்.

அதுக்குள்ளே அந்த தெணிக் கிணத்தடியாலை ஆரோ ரெண்டு பேர் வர்ரது தெரிஞ்சுது. ரவியும் மெல்லமா சைக்கிளை திருப்பிக் கொண்டு போட்டார்.

அதுக்குப்பிறகு நாலு மாதமா ரவியை நான் காணவில்லை. நானும் டிசெம்பர் சோதனைக்கு பிறகு பள்ளிக்கூடம் போகயில்லை. அடுத்த சித்திரையிலை தான் நானும் அம்மன்கோவில் தீர்த்தத்துக்கு அம்மாவோடை வந்தனான். அப்ப பிள்ளையார் கோவில் மோர் மடத்திலேதான் ரவியை கண்டனான். கையிலை பெரிய மோதிரங்களும் பட்டு வேட்டி சால்வையும் உடுத்துக்கொண்டு நிண்டார். பிறகுதான் விஜியை கேட்டனான். ரவிக்கு நல்ல உழைப்பாம். அவரின்ரை லைன் ஒண்டும் பிடிபடாமல் வந்ததாம். அதாலை அப்ப அவருக்கு நல்ல காசு வந்ததாம்.

இப்ப எட்டுமணிதான் இருக்கும் அதுக்குள்ளே நல்ல நிலவும் வந்துட்டுது. முற்றத்திலே இருக்கிற வாங்கில்லை நானும் இருக்கிறன். ஐயா முகம் கழுவிப்போட்டார் போல இருக்கு வீட்டறைக்குள்ளே சாமி கும்பிடுகிறார் போல இருக்கு. அம்மாவின்ரை குரலும் பக்கத்திலேதான் கேட்குது.

ரவி என் முகத்துக்கு முன்னே நிற்கிறார். ஒருநாள் நான் பாடசாலைக்குள்ளே அம்மாவோடை நிண்டனான். அப்ப ரவி கையிலை ஒரு டிரான்சிஸ்டரோடை எங்க வீட்டுக்கு முன்னாலே போனார். எனக்கு டிரான்சிஸ்டரிலே நல்ல விருப்பம் பக்கத்துவீட்டு மாமி வைச்சிருக்கேக்கை நான் சிலநேரம் வேண்டி பாட்டுக் கேக்கிறனான். அம்மா நிண்டதாலே ரவி என்னை சரியாப் பார்க்கவில்லை நான்தான் ரவியை வடிவாப் பார்த்தனான். டிரான்சிஸ்டர் பாட்டுச் சத்தத்திலே பக்கத்து வீட்டுமாமி படலையாலை எட்டிப்பார்த்தா. ''ஆரடி! இந்தப் பெடியன்'' எண்டு அம்மா மாமியைக் கேட்டாள். எனக்கென்னவோ ''இவர்தான் ரவி!'' எண்டு சொல்ல வேணும் போல இருந்தது. ஆனா நான் சொல்லவேயில்லை. பிறகு எங்கடை லவ் அம்மாவுக்கு தெரிஞ்சா சத்தம் போடுவா.

''இது வேம்படி ஒழுங்கேக்கை இருக்கிற முருகேசுவின்ரை பெடியன். இப்ப படிப்பை குழப்பிப் போட்டு வியாபாரம் செய்யுதாம். நல்ல காசும் வைச்சிருக்காம். பாவம் தாயில்லாத பெடியன். ஏன் உனக்குத் தெரியாதே !...'' மாமிதான் சொன்னாள்.

எனக்கு அப்பதான் தெரிஞ்சுது ரவி ஆரெண்டு. அதுக்கு முதல் எனக்குத் தெரியாது. காதலுக்கு கண்ணுமில்லை காதுமில்லை எண்டெல்லாம் சொல்லுவினம். அது என்ரை விசயத்திலையும் சரிபோல இருக்கு. இதுக்கு முதல் ரவியை ஆரெண்டுகூட கேட்காமல் விட்டுட்டன் எண்டு அப்பதான் எனக்கு தெரிஞ்சுது.

அதுக்குப் பிறகு தை மாசத்திலே ரவியின்ரை தகப்பன் என்ரை ஐயாவோடை கதைச்சிருக்கிறார். ரவிக்கு என்னிலே விருப்பம். எனக்கும் ரவியிலை விருப்பம் எண்டெல்லாம் கலியாணத்திற்கு கேட்டாராம். ஐயாவும் அம்மாவை கேட்டுச் சொல்லுறன் எண்டு சொல்லிப்போட்டு வந்தாராம். இதையெல்லாம் அம்மாதான் என்னட்டைக் கேட்டா. அதுக்கு நான் என்ன சொல்லுறது. எனக்கு வெட்கமும் வந்து போச்சு. மெல்லமா பேசாமல் தலை குனிஞ்சு நிண்டுட்டன். அம்மாவும் ஐயாவிட்டை கலியாணத்துக்கு நாள்வைக்க சொல்லிப் போட்டா.

அதுக்குப்பிறகு பத்துநாள்தான் இருக்கும். எனக்கேன் அண்டைக்கு பொழுது விடிஞ்சுது எண்டு இருக்கு. மாசம் முப்பதாம் திகதி...... எனக்கு நல்லா ஞாபகம். அண்டைக்குத்தானே ரவியை...... என்ரை ரவியை...... அந்த ஆமிக்காரங்கள் சுட்டவங்கள்...... எனக்கு பக்கத்து வீட்டு மாமிதான் ஓடிவந்து சொன்னவா...... எனக்கு கேட்ட உடனே அழுகையும் வந்திட்டுது...

கிணத்தடியிலே இருந்து அழுதுகொண்டு இருந்தனான் .... எனக்கென்னவோ அண்டைக்கு கிணத்துக்குள்ளை விழுந்து சாக வேணும் போல இருந்துது... எனக்கு இப்பவும் அழுகை அழுகையாய்த்தான் வருது . அம்மா ஐயா கண்டாலும் ... பிறகு கவலைப்படுவினம்...... மெல்லமா படலேக்கை வந்து நிக்கிறன். பக்கத்துவீட்டு மாமியும் ஆரோடையோ கதைச்சுக்கொண்டு நிக்கிறு... எனக்கு அப்பபிடிச்சு அந்த சம்பவத்தை நினைச்சாலே பயமா இருக்கு......... ரவியின்ரை கட்டுமரம் கொத்தியாலுக்குள்ளை லைனுக்கு நிண்டதாம் ரவியும் லொறியிலை சாமான் வந்ததும் உடனே ஆட்களைக் கொண்டு கட்டுமரத்திலை ஏத்தினாராம். அப்ப அந்த ஆமிக்காரங்கள் அதை கண்டுட்டு ஓடிவந்தாங்களாம். ரவியை விட்டுட்டு எல்லாரும் ஓடிப்போட்டாங்களாம். ரவி மட்டும்...... ஏன் அப்படி செய்தாரோ தெரியல்லை. ......ரவி கட்டுமரத்தில் ஏறி எஞ்சினை ஸ்ராட் பண்ணினாராம். அப்ப பார்த்து அந்த ஆமிக்காரங்கள் சுட்டுப் போட்டாங்களாம்... எனக்கென்னவோ ரவி செஞ்சது மடைத்தனம் எண்டுதான் தெரியுது. பேசாமல் தானும் ஓடிவரத் தெரியல்லை! ...... ஓடிவந்திருந்தா இப்பவும் என்ரை ரவி உயிரோடைதானை இருப்பார்...

ஐயாவும் சாப்பிட்டுவிட்டார் போல இருக்குது. அம்மாவும் ஐயாவும் முற்றத்துக்கு வர்ரது தெரியுது. அம்மா சொல்லுறது என்ரை காதிலை விழுகுது. ''இருங்கோ வாறன். இந்த வெத்திலைத் தட்டை காணேல்லை. எடுத்துவாறன்.'' நானும் உடனே திரும்பி வீட்டுக்குள்ளே போறன். அம்மாவும் "ஏண்டி கமலா! இந்த வெத்திலைத் தட்டு எங்கயடி ''என்கிறு. நானும்'' அந்த வாங்கில்லை தானே கிடக்குது போய்ப்பார் 'எண்டு சொல்லி விட்டு அறைக்குள்ளே போறன்.

அதுக்குப்பிறகு - அதுதான் ரவி செத்தப்பிறகு எனக்கென்னவோ இந்த உலகத்திலே ஒண்டும் பிடிக்காமல் போட்டுது. திருவிழவுக்கு வா, கோயிலுக்குவா எண்டெல்லாம் அம்மா கேட்கிறவ. நானும் வர மாட்டன் எண்டு சொல்லிப் போட்டு வீட்டிலே தான் இருக்கிறனான். நான் அப்ப எல்லாம் ரவியை நினைச்சு நினைச்சு வாய்விட்டு அழுவன்... அம்மாவும் ஐயாவும் என்னைப் பற்றித்தான் கதைக்கினம் போல இருக்கு.

''அது சரியுங்கோ அந்தப் பொடியனும் ஏதோ நல்ல உத்தியோகத்திலை தானே இருக்குது. பருத்தித்துறையிலை இருக்கிற படியால் கமலாவின்ரை விசயமும் தெரிய மாட்டுது. ஊரிலைதான் ஒரு மாப்பிள்ளையும் சரிவராதாம். ஓமெண்டு சொல்லுங்கோ. இந்த வீட்டையும் காணியையும், திணைந்சு பவுண் நகையும்தான் இருக்குது. அவ்வளவையும் குடுப்பம்.

''அதுசரி இதுக்கு கமலா என்ன சொல்லுகிறுள் எண்டு ஒருக்காக் கேள்''

''பாவம் அவளைக்கேளாமல்...''

பொறுங்கோ கமலாவை கேட்பம்

''கமலா கமலா எங்கை நிக்கிருய்'' .. அம்மா எனக்குக் கிட்ட வர்ரு.

.....................

★

85



# தலைவி ஏமாற்ற........ ..........

# தலைவன் சாற்றுகிறான்..................

செல்ல. சபாநாதன்
( விஞ்ஞானம் — இறுதி ஆண்டு )

1. ஏமாற்றம்

புலர்ந்தும் புலராக் காலையிலே
மலர்ந்தும் மலராப் பாதிமலர்
அலர்ந்து முடியும் முன்னாலே
அவசரத்தில் ஆய்ந்து வந்து
அள்ளி முடித்த கூந்தலிலே
அழகு செய்ய அணிந்திருக்க — அது
துள்ளி விழுந்து உவர் மண்ணில்
துவண்டு நசுங்கி உலர்ந்ததுவே

குஞ்சுச் சிட்டுக் குருவி அது
கூவிக் கூவிப் பறந்து வந்து
அஞ்சல் இன்றி அகம் மகிழ்ந்து
ஆவல் கொண்டு தீனி தேட — என்
"பிஞ்சுக் குழந்தை மனம்" விரும்பி
பின்னால் விரைந்து அதை அணுக — அது
பஞ்சாய்க் காற்றில் பறந்து சென்று
மஞ்சின் விளிம்பில் மறைந்ததுவே

குன்றிற் சாரல் மயிலினங்கள்
குலவி மகிழ்ந்து தோகையாட
மன்றிற் கருமுகில் பொதியாகி
மருவிக் காற்றில் குளிராகித்
தென்றல் குளிர மழைவருமாய்த்
தண்மழை பருகும் சாதகப் புள் — அஃது
இன்றேல் தணியாத் தாகம் கொள்ள
மழைதரு கருமுகில் கலைந்ததுவே.

விழியால் மொழிந்த சல்லாபம் — அதை
வியந்து நினைத்த உல்லாசம்
சுழியாய்ச் சுழித்த கற்பனைகள் — அவை
சுமந்து நின்ற இங்கிதங்கள்

அழியாதென்னைத் தொடருமென்று
அந்தரக்கோட்டை கட்டினேனைப்
பழிமேல் செய்த பாவியாக்கி — யாவும்
பாழாய் மனதில் மறைந்தனவே.

2. **காரணம் யாதோ?**

நிலவில் மலர்ந்த மல்லிகைப்பூ
நிலமகள் மேனி தழுவுமுன்னே
உலவும் தென்றல் உலைத்தலைக்க
பல மலர் ஒன்ருய்ப் பறித்து வந்து
முன்றில் மணல் மேல் மகிழ்ந்திருந்து
முன்னை நினைவுபோல் மாலைகட்டி
கூந்தல் நிறைய அலங்கரித்தாய்
கவிஞன் என் கண்களைக் குளமாக்கி

முச்சந்தி முடக்கினிலே சகிய ரொடு
சாலையோரம் நடக்கையிலே கவிஞெழுக
மிச்சம் நடை தளர்த்தி மீன்விழியால் — எனை
மின்னலெனப் பார்த்துவிட்டு எட்டிச் செல்ல
சொச்சம் நானை தொடருமென்று — நீ
சொரிந்த பார்வைக் கருத்தறிந்து — நான்
மிச்சம் தொடர்வதற்காய் வந்தேனே — நீ
மீள என்னைப் பார்க்கவில்லை ஏனோ?

நீ தவித்து நின்றே தேடியதும் — என்னைத்
தேடி நின்றே தவித்ததுவும்
நீ சலனம் இன்றிப் பார்த்ததுவும்
பார்த்து நின்றே பாடியதும்
கோடி காலம் கழிந்தாலும்
மூடி மறைக்க முடியாது;
வாடித் தவிக்கும் பாவி நான் — நீ
வாழ்வுதர விரும்பவில்லை ஏன்?

நேரில் உன்னைப் பார்த்து நின்று
நான் நினைத்த நினைப்பெல்லாம்
நீரில் குமிழி அடைவது போல்
நில்லாது அழிந்து ஒழிந்தனவே;
நேராய்ப் பாதை நீண்டிருக்க
நேரிழையே நீ நெருங்கி வந்தும் — பின்
நேர் மாருய் நீ நடந்ததென்ன
நேயம் பிறதிசை திரும்பியதோ?

## 3. இன்பமும் துன்பமும்

நீ சிரித்த சிரிப்பெல்லாம் — என்
  நினைவில் வந்து அழவைக்கும்
விழிமொழியால் சொன்ன கதை
  விழி நீரில் கரைந்தொழுகும்
வான் வெளியில் முளைத்த வெள்ளி
  விடியற் காலம் மறைவதொப்ப
நான் நினைத்த நினைப்பெல்லாம்
  நாளடைவில் கண் முகிழ்த்தும்.

முன்னர் நினைவில் இன்பாகிப்
  பின்னர் நினைவில் துன்பாகி
முன்னும் பின்னும் முரணுகி
  நினைவும் முடிவும் வேருகி — ஊழ்
வினைகள் நமக்கு எதிராகி
  ஞாலம் நகைக்கும் பொருளாக்கி — உன்
கோலம் மனதில் நினைவுவர — என்
  காலம் துயரில் கரைகிறதே.

[யாவும் கற்பனை]

---

## பாரபட்சம்

''கண்ணன்''

வட்டுக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிந்ருந்தோம். பஸ்ஸினுள் நாங்கள், வளாக மாணவர்கள் நிறைந்திருந்தோம். பஸ்ஸும் காற்று நிறைந்த வெளியினூடு வந்துகொண்டிருதது. இயல்பாகவே எங்களுக்கு குஷிபிறந்தது.

'' என்னடி ராக்கம்மா ... ...... '' என்று ஆரம்பித்தோம் கண்டக்ரர் பஸ்ஸை மணியடித்து நிறுத்தினுர். உஷ் பேசாமலிருங்கள். பிறகு பொலிஸ் ஸ்ரேசனுக்கு கொண்டு போய்விடுவோம் என்று அதட்டினுர். பஸ் நின்று புறப்பட்டது.

எங்களினுடைய நண்பர்கள்—சிங்களவர்கள்—அந்த பஸ்ஸினுள் இருந்தனர்.

அவர்களோ இதைக் கண்டபின் பாட ஆரம்பித்தார்கள் '' சூடாமானிகே பலாலா ................ ''

கண்டக்டரோ காற்று வெளியினுள் எதையோ தேடிக்கொண்டிருந்தார்

நாங்களோ எங்கள் நண்பர்களுடன் சேர்வதா இல்லையா என்று யோசித்துக்கொண்டிருந்தோம்.

தற்கால நவநாகரீக

ஆடவர் நங்கையர் விரும்பும்

நவீன பிடவை வகைகளிற்கு

# ரவி ரெக்ஸ்ரைல்ஸ்

5, மக்கள் சந்தை, பருத்தித்துறை.

# RAVI TEXTILES

**5, People's Market**

**POINT PEDRO**

இசை இன்பத்தை நுகர

**சிறப்பாக இயங்கும் வானொலி அவசியம்.**
**வானொலி சிறப்பாக இயங்க திறமை வாய்ந்த**
**தொழில் நுட்ப வல்லுநர்களை நாடுங்கள்.**
**சிறந்த நிபுணத்துவமுடைய வல்லுநர்கள் உடைய**
**ஒரே ஒரு ஸ்தாபனம் எமதே**
**ஆகையால் இன்றே நாடுங்கள்**

# ஈஸ்வர் கோப்பரேசன்

**18, ஸ்ரான்லி வீதி**

**யாழ்ப்பாணம்**

**தொலைபேசி எண் 7308**

# நம்பிக்கைகளின் சிதைவில்......

# புத்துயிர்ப்புக்கள்

— ஆ. சௌந்தரலிங்கம் —
( மனிதப் பண்பியற் பீடம் 2ஆம் வருடம் )

மார்கழிப் பனி கொட்டிக் கொண் டிருந்தது. 'சல, சல ' என்ற இரைச்சல் அமைதியைக் குலைக்க, அந்தப் பாய்வள்ளம் நீரைக் கிழித்துக் கொண்டு ஓடிக்கொண் டிருந்தது. வள்ளத்தின் கடையாலில் இருந்து சுக்கான் பிடித்துக் கொண்டிருந்தது ஒருருவம். பரீட்சை எழுதும் மாணவன் அடிக்கடி கடி காரத்தைப் பார்ப்பது போல அவ்வுருவமும் அடிக்கடி விடிவெள்ளியைப் பார்த்தபடியே வள்ளத்தைச் செலுத்துவதில் ஈடுபட்டிருந் தது. பனியின் கொடுமையைக் குறைப்பதற் காகக் காதை மூடிக் கட்டியிருந்த தலைப் பாகையினை அவிழ்த்து, காதடியில் சொருகி வைத்திருந்த குறைச்சுருட்டை எடுத்துப் பற்றவைத்தது; நடுங்க வைக்கும் அக் குளி ரின் பிடியில் இருந்து விமோசனம் பெற முயன்றது.

கடலுடன் வருடக் கணக்கில் போராடி வாழ்ந்து வரும் அவ்வுருவம் - யோசேப்பிற்கு மழை, பனி, குளிர் ஒன்றும் புதிதானவை யல்ல. ஆனால் அவரது முதுமைப் பருவம் அவற்றைச் சமாளிக்கக் கஷ்டப்பட்டது.

விடிவெள்ளியை நோக்குகிறார் யோசேப். மணி அதிகாலை 3½ அளவில்தான் இருக்கும் என்பதை அநுமானித்துக்கொள்கிறார். மீண் டும் வானத்தை நோக்குகிறார். கடந்த ஒரு கிழமையாக - நேற்று வரை, களங்கமுற்றி ருந்த வானம் இப்போது களங்கமற்றிருந்தது. நட்சத்திரக்கூட்டங்கள் மின்னிக்கொண் டிருப்பது தெளிவாகத் தெரிந்தது. அது அழகாகவும் இருந்தது. யோசேப்பின் உள் ளத்தில் ஒரு புதிய நம்பிக்கை துளிர்விடுகிறது. தனது கடந்தகால நிகழ்கால வாழ்க்கையும் நேற்று வானம் இருந்தது போலவே இருண் டிருந்து-இருக்கிறது. 'நாளை என் வாழ்வில் தெளிவு ஏற்படலாம் அல்லவா?' சிந்தனை யில் ஆழ்ந்திருந்த யோசேப்பின் சிந்தனை கலைந்தது.

காரணம் வள்ளம் அசையவில்லை, சாரத்தை உயர்த்திக் கட்டிக்கொண்டே கடலில் இறங்குகிறார். வள்ளம் பரப்பில் தரை தட்டிவிட்டிருந்தது. எவ்வளவு கவன மாக, ஆழமுள்ள பகுதியைப் பார்த்து ஓடி வந்தும், இப்படித் தரைதட்டிவிட்டதே என்று முணுமுணுத்தார் யோசேப். ஆமாம் நமது வாழ்க்கையே இப்படித்தான். எவ்வளவுதான் கவனத்துடன் வாழ்ந்தாலும் கூட பிரச்சனைகள் துன்பங்கள் ஏற்படத் தான் செய்கின்றன. யோசேப்பின் வாழ்க்கை என்ற வள்ளமும் அப்படித்தான். துன்பம் எனும் புயலிலே அலைந்தது. பிரச்சினைகள் எனும் பாறையிலே மோதியது. ஏமாற் றங்கள் எனும் பரப்புக்களில் தரைதட்டியது. ஆனால் அவர் அவற்றைக் கண்டு பயப்பட வில்லை. எதிர்காலம் ஒன்றுண்டு என்ற நம் பிக்கையில் அவற்றினைத் துச்சமாக மதித்து வந்தார் - மதித்து வருகிறார். எதிர்காலம் ஒன்றுண்டு என்ற நம்பிக்கையில்தான் மனி தன் நிகழ்கால துன்பங்களையெல்லாம் சகித் துக் கொள்கிறான்.

தனது வைரம் பாய்ந்த நெஞ்சை முட் டாகக் கொடுத்து வள்ளத்தை நகர்த்துகிறார் யோசேப். வள்ளம் நகர்வதாக இல்லை. தனக்கு வயது போய்விட்டதென்பதை அவ ரால் அப்போது உணரக் கூடியதாக இருந்தது. அவரது கடல் வாழ்க்கையில் எத்தனையோ தரம் இப்படிப்பட்ட ஒரு நிலையை எதிர் நோக்கியிருக்கிறார். அப்போதெல்லாம் அவ ருக்கு அது இலகுவானது ஆனால் இப்போ? மூச்சைப் பிடித்துத் தள்ளுகிறார். வள்ளம் ஒருவாறாக நகர்ந்து மிதக்கத் தொடங்கு கிறது.

மீண்டும் வள்ளத்தில் ஏறிய அவர், வெத்திலைப் பெட்டியை எடுக்கிறார். இரண்டு முழு வெற்றிலையையும், பாக்கையும் அள்ளிப் போட்டு வாயைக் குதப்புகிறார். தன்னைக்

கடலுக்கு அனுப்பும்போது, கையில் வெத்திலேப் பெட்டியைக் கொடுத்து மனைவி மரியம்மாள் கூறிய வாசகங்கள் அப்போது அவருக்கு நினைவுக்கு வருகின்றன. ''இண்டைக்குக் காலமை, மெயிலிலே வாறதெண்டு தம்பி கடிதம் போட்டிருக்கிறான். வீட்டுக்கு நல்ல மீனு எடுத்துக்கொண்டு வாணே. அவனுக்குக் கணவாய் என்றால் பிடிக்கும் ''

யோசேப்பின் இல்வாழ்க்கையின் பயன் இரண்டு செல்வங்கள். மூத்தவன் தோமஸ், இளையவள் யசிந்தா.

''பிற்காலத்தில் உனக்குத் தொழிலுக்குத் துணையாக இருக்கும் மகனையும் தொழிலுக்குக் கூட்டிக் கொண்டு போவனணே'' என்று மனைவி மரியம்மாள் அடிக்கடி சொல்லி வந்தாலும், தன்மகன் படித்து அரசாங்க உத்தியோகம் பார்க்கவேண்டும் என்ற ஆசையை இலட்சியமாகக் கொண்டு, அந்த முயற்சியில் பல இன்னல்களை எதிர் நோக்கி, அண்மையில் தான் வெற்றிகண்டவர் யோசேப். ஆம் அவரது மகன் இப்போ கொழும்பில் உத்தியோகம் பார்க்கிறான்.

''மகனுக்கு எல்லாத்தையும் கொட்டிச் செலவழிச்சுப் போட்டாய். உன்ர மகளுக்கு என்ன செய்யப்போறாய்'' என்று கேட்ட அயலவர்க் கெல்லாம் அவர் கொடுக்கும் பதில், ''என்ரமகனுக்கு உத்தியோகம் கிடைச்சிட்டால், அவன்பிறகு தன்ர தங்கச்சியைக் கவனிக்க மாட்டானா? நான் அந்தவிஷயத்தில் அவனைத்தான் நம்பி இருக்கிறன்.''

வள்ளம் பட்டியை நெருங்கிக் கொண்டிருந்தது. இப்போதும் யோசேப் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறார். தன் மகன் உழைச்சுத்தருவான். அதோட அவனை ஒரு நல்ல இடத்தில் கலியாணம் செய்விச்சு, சீதனம் வாங்கி, அதிலே தன் மகள் யசிந்தாவின் கலியாணத்தை நடத்தத் திட்டம் இட்டிருந்தார் யோசேப், அவற்றைப் பற்றிப் பல கற்பனைக் கோட்டைகளைக் கட்டியிருந்தார் அவர்.

பட்டி வந்தும் விட்டது. அவசரமாக வலையை வளைத்துக் கருமங்களை முடிக்கிறார். இண்டைக்கும் உழைப்புக் குறைவு தான், என்று முணுமுணுக்கிறார். பட்டி இழுத்து முடிந்ததும் வானத்தைப் பார்க்கிறார். கிழக்கு நன்றாக வெழுத்து விட்டது. கெதியாய்ப் போனால் தான் நல்ல விலைக்கு விற்கலாம் என்று தனக்குள் கூறியபடியே வள்ளத்தின் பாயை விரிக்கிறார். மெல்லிய காற்றில் வள்ளம் கரையை நோக்கி மெதுவாக நகர்கிறது.

அவருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த அவுட்போட் மோட்டர் வள்ளங்கள் அவரை முந்தியடித்துக் கொண்டு ''விர்'' ரென பேரிரைச்சலுடன் விரைந்து கொண்டிருந்தன.

''எனக்குப் பிறகு தொழில் செய்ய வெளிக்கிட்டவன் அடைக்கலம். அவன் இப்ப புது மோட்டார் வாங்கித் தொழில் செய்கிறான். என்னால் அந்தளவுக்கு முன்னேற முடியவில்லையே'' என்று தனக்குள் குறைப்பட்டுக் கொண்டார் யோசேப். ''சங்கமெண்டு ஒண்டு ஆரம்பிச்சான்கள் நானும் கூடத்தான் அதில அங்கத்துவன். என்ன பிரயோசனம். கட்டுக்காசுக்கு மோட்டார் கொடுத்ததாம் அரசாங்கம். அது கூட அரசியல் செல்வாக்கு பணச் செல்வாக்கு உள்ளவனுக்குத்தான் கிடைக்குது'' என்றெல்லாம் தனக்குத் தானே கூறிக் கொண்டார். அவர் யாருக்கு அதையெல்லாம் கூறுகிறார். தன்மனவேதனையைத் தனக்குத் தானே கூறிப் பெருமூச்சு விடுவதில் திருப்தியடைகிறாரோ ?

வள்ளம் கரையை அடைந்தது. அன்று மாலே வழக்கம் போல கோப்பிறேசனுக்குப் போய்விட்டுத் திரும்பி வரும்போது கூடவந்த செபமாலே யோசேப்பின் காதுக்குள் ஏதோ முணுமுணுத்தான்.

''மரியம்மா மரியம்மா''

பரபரப்புடனும், ஆவேசத்துடனும், மனைவியைக் கூப்பிட்டார் யோசேப்.

''என்னணை ? ஏனிப்படிச் சத்தம் போடுறாய்''

குசினிக்குள் இருந்து மரியம்மாள் குரல் கொடுத்தாள்.

''இந்த மனிசன் இண்டைக்குக் கோப்பிறேசனில் கூடப் போட்டுட்டுது போல''

விளக்கொளியில் பீடிசுற்றிக் கொண்டிருந்த யசிந்தா வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

''இவன் தோமஸ் எங்க போட்டான்''

கோபத்துடன் கேட்டார் யோசேப்.

''கன காலத்துக்குப் பிறகு கொழும்பிலே யிருந்து வந்தவன் சிநேகிதப் பெடியனைச் சந்திக்கப் போயிருப்பான்.

இது மரியம்மாளின் பதில்

வரட்டும், வரட்டும், என்று கூறிக் கொண்டே முற்றத்தில் கிடந்த வலே யொன்றையெடுத்துக் கிழிந்த பகுதிகளேப் பொத்தத் தொடங்குகிறார் யோசேப்.

நேரம் சென்றுகொண்டிருந்தது. ஜனரஞ்சகமான பாடல் ஒன்றைச் சீட்டியடித்துக் கொண்டே வீட்டிற்குள் நுழைகிறான் தோமஸ். அவனை ஒருதரம் ஏறிட்டுப் பார்க்கிறார் யோசேப் நாகரீகம் என்ற பெயரில் வளர்ந்திருந்த தலைமயிர், நீண்ட கன்னக்கிருதிதெறிகள் இருந்தும், பூட்டப்படாது திறந்து விடப்பட்ட சேர்ட், பெல் பொட்டம். தன் புத்திரனை அக்கோலத்தில் கண்டு மாலையில் பெருமைப்பட்ட அவர், இப்போது? அவர் மனம் கொதித்தது.

''தோமஸ் இங்கை வா,'' நான்கேட்கிறதுக்குப் பதில் சொல்லு. இண்டைக்குக் காலமை கோயிலடியில், சவிரியான்ர மகள் றெஜினை எண்ட பெட்டையோட நீ கன நேரம் கதைச்சுக்கொண்டு நிண்டனியாமே''

''யார் சொன்னது''

திருப்பிக்கேட்டான் தோமஸ்.

''சொன்ன ஆளை உனக்கு எதுக்கு''

இது யோசேப்பின் சீற்றம்.

''ஓமையா, போன முறை அண்ணன் லீவுக்கு இங்க வந்திருக்கேக்கையும், அந்த பெட்டையோட கதைச்சதெண்டு ஆரோ சொல்லிச்சினம்''

பீடி சுற்றிக்கொண்டிருந்த யசிந்தா தான் இப்படிக் கூறினாள்.

''என்னடா தோமஸ் அவர் கேட்கிறார் நீ பேசாமல் நிற்கிறாய், சொல்லனடா''

மரியம்மாள் அதட்டினாள்.

''ஓம் கதைச்சனான்தான்''

சுருக்கமாகக் கூறினான் தோமஸ்

''நீ என்னடா சொல்லுறாய்''

நம்ப முடியாதவர் போலக் கேட்டார் யோசப்

''உண்மையைத்தான் சொல்லுறன். நான் அந்தப் பிள்ளையைத்தான் காதலிக்கிறன். அவளைத்தான் முடிக்கவும் போறன்''

என்று கூறிக்கொண்டே நகர்ந்தான் தோமஸ்.

யோசேப்பிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவரது கற்பனைக் கோட்டைகள் எல்லாம் அவர் கண்ணெதிரிலேயே உடைந்து போவது போல இருந்தது.

''தோமஸ் எங்க போறாய்? நில்லு''

தோமஸ் நின்றான்.

''தம்பி, இது நடவாத காரியம், அந்தப் பிள்ளையோட கதைக்கிறதை இனி விட்டுவிடு''

''அது என்னால் முடியாது ஐயா, அவளை நான் கலியாணம் முடிக்கிறதாக வாக்குக் கொடுத்திட்டன், ஏமாற்றக் கூடாது.

என்று அமைதியாக் கூறினான் தோமஸ்

''உன்ர வாழ்க்கையில நேற்று உன்னைச் சந்திச்சவளை ஏமாற்றக்கூடாது என்று சொல்லுறாயே, உன்னை பெற்று வளர்த்த என்னை உன்ர அம்மாவை, உன்ர தங்கைச்சியை ஏமாற்ற எப்படி மனம் வருகுது''

யோசப் சீறினார்.

''படிச்ச பிள்ளைகளுக்கு அறிவு கூட எண்டு சொல்லுவாங்கள். இப்போ படிச்ச பிள்ளையளுக்கெல்லோ அறிவு மட்டமாக் கிடக்குது''

மரியம்மாள் நறுநறுத்தாள்,

யசிந்தா ஒன்றும் பேசாமல் பீடி சுற்றிக் கொண்டே இருந்தாள்.

''உங்களை நான் ஏமாற்றுறேன் எண்டு ஏன் சொல்லுறீங்கள். உங்களுக்கு உழைச்சுத் தரத்தானே போறேன் ''.

இது தோமஸின் வாதம்

'' உழைச்சுத்தந்தால் போதுமா, ஒண்டு செய் உன்ர தங்கச்சியை நல்ல இடத்தில் கரைசேர்கிறதுக்குக் கொஞ்சக் காசை சீதண மாக வாங்கித் தந்திட்டு நீ விரும்பியபடி செய் '' என்றார் யோசப்.

அந்தப்பிள்ளை ஏழை ஐயா அவங்கட்ட அந்தளவுக்குப் பணம் இல்லை ''.

''அப்படியெண்டால் உன்ர இஷ்டப்படி நடக்க நான் விடமாட்டேன் ''.

'' பணம் இல்லாட்டியும், நல்ல குண மான பிள்ளை அது ''

'' குணத்தைக் கொண்டு என்ன செய் வது? உன்ர தங்கச்சியும் தான் குணவதி. பணமில்லாமல் அவளையார் முடிப்பான் நீ கலியாணம் முடிச்சு வருகிற சீதணத்தை வைச்சுத்தான் அவளுக்கும் ஒருவழி பார்க்க வேணும் எண்டு நான் நினைச்சிருக்க நீ இப் படிக் குறுக்கால போகிறாயே''.

''நான் உழைச்சுத் தங்கச்சிக்கு ஒரு கலி யாணம் செய்து வைக்கத்தான் போறன்''

'' எப்ப செய்து வைக்கப் போறாய் நாளைக்கே பெட்டை வீட்டுக்காரர் உன்னைப் பிடிச்சுக் கலியாணம் செய்யச் சொல்லிக் கேட்டால் நீயும் போயுடுவாய். பிறகு எப் படி உழைச்சுத்தரப்போகிறாய். கொழும்பில் நீ உழைக்கிற 300 ரூபா சம்பளம் எதுக்குக் காணும்? உன்னை நம்பித்தானே இவ்வள வும் செலவழிச்சு உன்னைப் படிப்பிச்சேன்''

'' எது எப்படியானாலும் பரவாயில்லை. நான் அவளைத்தான் முடிப்பன் '' என்று கூறிக்கொண்டே அங்கிருந்து நகர்ந்தான் தோமஸ்.

'' நில்லடா, அப்போ உன்ர தங்கச்சி யின் வாழ்க்கை '' தோமஸ் ஒருகணம் நின் றான். பின்னர் மளமளவென்று குசினிக்குள் புகுந்து கொண்டாள்.

யோசேப் யசிந்தாவைப் பார்க்கிறார். ஏமாற்றத்தின் சுவடு அவள் முகத்தில் படிந் திருப்பதை மங்கிய விளக்கொளியிலும், அவர் அவதானிக்கத் தவறவில்லை. தன் எதிர்கால வாழ்வைப்பற்றி அவள் எவ்வளவு கனவுகள் கண்டிருப்பாள். மனதுக்கள் அழுது பார்த்தாள். அடக்க முடியவில்லை. விம்மத் தொடங்கி விட்டாள். கண்ணீர்த்துளிகள் பீடிசுற்றிக் கொண்டிருந்த அவள் கரங்க ளில் பட்டுத் தெறித்தன.

யோசேப்பிற்கு இதனைக் காணச் சகிக்க வில்லை. இப்படி ஒரு ஏமற்றமா? சிறிது நேரம் சிந்தித்தவர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

'' நீ கவலைப்படாதே மகளே, நான் இருக்கிறேன். உன்னை ஒரு நல்ல இடத்தில் கரைசேர்க்கிறேன். மற்றவனை நம்புவதைவிட என்னைநானே நம்புவதே மேலானது ''

அவர்மனதில் ஒரு புதிய வைராக்கிய உணர்ச்சி. அவர்கைகள் இப்போது வேகமாக வலை பொத்திக் கொண்டிருக்கின்றன.



# என்றோ ஒரு நாள்......!

- ரா. ராஜகுமார் -

*( 3 ஆம் வருடம் விஞ்ஞானம் )*

பொங்கும் மங்களம் எங்கும் பரப்பிட
சிங்கத் தமிழரின் சிந்தை மகிழ்ந்திட
விந்தை மாந்தரின் விருப்புகள் மலர்ந்திட — என்றோ ஒரு நாள்
அன்னையின் காலடி அவனியில் தவழ்ந்திடும்.

கண்ணுளோர்க் கெலாம் கவித்துவம் அளித்திட
பண்ணுளோர்க் கெலாம் பாடலை அளித்திட
மண்ணுளோர்க் கெலாம் மனதினை அளித்திட — என்றோ ஒரு நாள்
அன்னையின் காலடி அவனியில் தவழ்ந்திடும்

மிஞ்சுவோர்க் கெலாம் மெலிவினைக் கொடுத்திட
வஞ்சகர்க் கெலாம் வாழ்வினைக் கெடுத்திட
துஞ்சியோர்க் கெலாம் துயிலினைக் கொடுத்திட — என்றோ ஒரு நாள்
அன்னையின் காலடி அவனியில் தவழ்ந்திடும்

அஞ்சுவோரெலாம் வெஞ்சமர் புரிந்திட
அஞ்சுதலிலாது அறம் தழைத்தோங்கிட
எங்கள் குலமினி எங்கும் எழுந்திட — என்றோ ஒரு நாள்
அன்னையின் காலடி அவனியில் தவழ்ந்திடும்

---

## சமயோசிதம்

" கண்ணன் "

எனது ஊர்ப் பாடசாலை ஒன்றுக்கு ஒரு புதிய ஆசிரியர் வந்து சேர்ந்தார்.

வந்தவர் வந்து சில நாட்கள் கழிந்தன ........

அதுவரையும் எல்லா ஆசிரியர்களும் " கிளாஸ் " களிலேயே - பாடசாலை இடைவேளைப் பொழுதுகளில் - தேநீர் அருந்தி வந்தனர்.

வந்த புதிய ஆசிரியர் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்பதை மற்றைய ஆசிரியர்கள் எப்படியோ அறிந்து கொண்டனர்.

'வந்தவரும் எம்முடன் சமமாக இருந்து தேநீரை கிளாசில் அருந்துவதா ?' என்று சில ஆசிரியர்கள் பொருமிக் கொண்டனர். எல்லோரும் சேர்ந்து - புதியவரைத் தவிர - இரகசியமாய்க் கதைத்துக் கொண்டனர்

அதன் பலனாக அடுத்த நாள் .........

புதிய வெள்ளிக் குவளைகளை அவர்கள் வாங்கினார்கள். எல்லோரும் குவளைகள் வாயில் முட்டாமல் ......... அண்ணாந்து தேநீரைக் குடிக்க ஆரம்பித்தனர்.

எங்களிடம்

புதுமனை வைபவத்திற்குரிய

கோயில் தேவைகளிற்குரிய

அபிஷேகத் திரவியங்களும்

மற்றும் வாசனைத்திரவியங்களும்

குறைந்த விலையில்

பெற்றுக் கொள்ளலாம்

C. S. கணபதிப்பிள்ளை & சன்ஸ்

51, கே. கே. எஸ். றோட்,

யாழ்ப்பாணம்

பாடசாலைப் புத்தகங்கள்

உபகரணங்கள் முதலியன

நிதான விலையில்

பெற்றுக்கொள்ளலாம்

ஸ்ரீ தரன்ஸ்

வளாகச் சந்தி

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்

For

TIP - TOP

Tailoring

Visit

FITTEXT

18, Grand Bazaar

Jaffna

அன்பளிப்பு

N. வைத்திலிங்கம்

இரும்பு வியாபாரிகள்

காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்

# படைப்புகள் படைப்பாளி வாழ்க்கை

" கண்ணன் "

ஒரு படைப்பாளி எப்படியிருக்க வேண்டும்?- அவன் படைப்புக்கள் எப்படியானவையாக இருக்க வேண்டும்? அதையொட்டி அவன் வாழ்க்கை நடைமுறைகள் இருக்க வேண்டுமா?- என்ற வினுக்கள் ஒரு தரமான வாசகனின்- படிப்பதில் இன்பத்தை மட்டும் தேடாமல் பயனைப் பெற விழைகின்ற ஒரு வாசகன் மனத்தில் எழுவது இயல்பு.

ஒரு படைப்பாளி எப்படி இருக்க வேண்டும்? அவன் தான் அங்கம் வகிக்கும் சமுதாயத்தின் சிற்பியாகத் திகழ வேண்டும்-அல்லது அதுவே அவனது இலட்சியமாக இருத்தல் வேண்டும்.

குறைபாடுகளுடையது மனிதம், அந்த மனிதத்தின்-அதன் ஒரு மொத்த உருவமே சமுதாயம்.

அது அந்த சிற்பியின் - படைப்பாளியின் - கையில் அகப்பட்ட ஒரு கருங்கல்.

அதனைத் தன் எழுத்து என்னும் உளியினுலும் எண்ணங்கள் என்னும் சுத்தியலினுலும் சிறந்த சிற்பமாக உருவாக்குவதே அவன் கடமையாகும்.

ஆயின், இதிலிருந்து அவன் எழுத்தும் எண்ணங்களும் எப்படியிருக்க வேண்டும் என்று தெரிகின்றதுதானே?

படைப்பாளியின் எழுத்து எவ்வளவு கூர்மையாக இருக்க வேண்டுமோ, அதே போல எண்ணங்களும் பலமானவையா சிறப்புடையனவாக இருத்தல் வேண்டும்.

படைப்பாளியொருவனின் படைப்புக்கள் எப்படிப்பட்டவையாக இருத்தல் வேண்டும்?

அவை சமுதாயச் சீர்கேடுகளை எடுத்துக் காட்டி - அவற்றிற்கான தீர்வுகளையும் எடுத்துச் சொல்வனவாக இருத்தல் வேண்டும்.

முன்னையவைகள் - எழுத்துக் கூர்மையும் எண்ண வலிவும் - இருந்து விட்டால் போதும். பின்னையவைகளான படைப்புக்கள் சிறப்பாக அமைந்து விடும்.

சரி...... இவை இரண்டும் தவிர்ந்த மூன்ருவதைப் பார்ப்போம். அதாவது படைப்பாளியின் படைப்புக்களும் - அவன் வாழ்க்கையும் எவ்வாறு தொடர்புற்றனவாக இருக்க வேண்டும்?

இவைகள் இரண்டிற்கும் இடையே தான் வாசகனின் கடமையொன்றும் இருக்கிறது.

படைப்பாளிகளுள் இருக்கக்கூடிய போலிகளின் முகமூடிகளை கிழித்தெறிந்து அவர்களை இனங்கண்டுகொள்வதோடு - அந்த புறம்பான மனிதர்களைத் திருத்துவதும் ஒரு தரமான வாசகனின் கடமையாகும்.

பத்துப்பேர்களின் - அதுவும் சமுதாயப் போலிகளின் பாராட்டைப் பெற வேண்டும் என்பதற்காக வெறும் வெத்துக் கோஷங்களை தங்கள் எழுத்துகளில் சொருகுகின்ற எழுத்தாளர்களால் எந்த விதப் பயனுமே இல்லை.

அவ்வித எழுத்தாளர்களை இனங்கண்டு கொள்வதோடு - அவர்களின் எழுத்தின் போலித்தன்மையால் ஏற்படக் கூடிய தீமைகளையும் களைந்தெடுக்க முயல்வதே ஒரு வாசகனின் கடமையுமாகும்.

## COURSES OFFERED

**Institute of Administrative Accounting**
**(I. A. A.) Part I, II & III.**

**International Association of Book Keeping**
**(Foundation Intermediate and Final)**

**Pitman Examination's Institute**
**And**
**G. C E. (O/L) Commerce Classes**
**in Tamil Medium**

**New Classes Commence on JANUARY '77**

# SRI MEENAKSHI
# COMMERCIAL COLLEGE

38, Seenivasagam Road, Koddady, Jaffna.



வாழ்த்துக்கள்

# ஸ்கந்தா கல்வி நிலையம்

தபாற் கந்தோர் வீதி

சாவகச்சேரி

அதிபர்
பொ. பரராசசிங்கம்

# மனித மரங்கள்

செல்வி அம்மன்கிளி - கைலாயநாதன்
( 1ஆம் வருடம் மனிதப் பண்பியல் பீடம் )

யாழ்ப்பாணச் சமூகத்தில் நாறிக்கிடக்கும் கொடுமை ஒன்றினால் உலகையே விட்டு பிரிந்துவிட்ட ஒரு பெண்ணின் கதை!

டாங்! டாங்!! பறை மேளத்தில் தம் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்தனர் கந்தனும் நாகனும். செத்த வீட்டுக்கு மேளமடிக்க வந்த அவர்களுக்கு சின்னக் கடைக் கந்தனின் கள்ளு கூடுதலான உற்சாகத்தைக் கொடுத்திருந்தது. அவர்களுக்கு யார் செத்ததோ கவலையில்லை. 'நாங்களிருக்க நயினார் சாக' சுருதிப்படி வந்து கொண்டிருந்தது பறைமேளத்தின் ஒலி!

ஆனால்... அங்கு நின்றவர்களிற் பலருக்கு முகத்தில் ஈயாடவில்லை. எல்லோருக்கும் ஒரு திகைப்பு! ஏன் இப்படி நடந்தது? உள்ளே பிரேதம் கிடத்தப் பட்டிருந்தது. செத்த வீட்டுக்கு அப்போதுதான் வந்த சில பெண்கள் தம் இறந்துபோன உறவினரை நினைத்துக் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைக்கின்றனர்.

செத்த வீட்டு 'புதினம் பார்க்க' வந்த பெண்களில் பலருக்கு வெறும் வாய் மெல்லும் வாய்க்கு அவல் கிடைத்தது போலாயிற்று அந்தச் சம்பவம்.

சிலர் அதையும் மறந்து வட்டிக்குக் கொடுத்த கதை, மகன் இங்கிலாந்துக்கு (S. S. C. பாஸ்பண்ணமல்) போனகதை பற்றி அளந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அங்கே கிடத்தப்பட்டிருந்த சடலத்தின் தாய் நாகம்மாவும் உடன் பிறப்புகள் ராணியும் ரஞ்சியும் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தார்கள். பார்ப்போருக்கு உருகாத மனமும் உருகத்தான் செய்தது. ஐயர் வந்துவிட்டார். கிரிகைகள் முடிந்து விட்டன.

''தூக்குங்கோ பாடையை நேரமாச்சு! கோவியச் சின்னையனின் குரல்!

ஐயோ! என்ரை பிள்ளையைக் கொண்டு போகாதையுங்கோ. என்னையும் கொண்டு போங்கோ ஐயோ! என்று அலறுகிறுள் நாகம்மா. பின்னாலிருந்த பொன்னுக்கிழவி (சம்பளமில்லாமல் ஊர்வம்புபேசுபவள்) ''ம் பெட்டையைப் பெத்தவவுக்கு வளர்க்கத் தெரியாமை நெருவழிய விட்டால் என்ன நடந்துதோ ஆருக்குத் தெரியும். இல்லாட்டா ஏன் இந்தப் பெட்டை இந்த வயதிலை மருந்து குடிக்கவேணும். வயுத்துக்கையும் ஏதுமோ ஆர்கண்டது'' பக்கத்திலிருந்த சின்னச்சி கூறுவது காதில் விழுகிறது.

நாகம்மாவுக்கோ எதுவும் காதில் விழவில்லை அவளுக்கு எதுவுமே புரியவில்லை ராணியும் ரஞ்சியும் கத்துகின்றனர். ஐயோ! அக்காவைக் கொண்டு போகாதையுங்கோ.''

இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன?

நாகம்மா எப்போதோ தன் கணவனை இழந்துவிட்டவள். மூன்று பெண்பிள்ளைகளைப் பெற்றதுதான் கடமை என்றெண்ணியோ என்னவோ தோட்டத்துக்கு நீரிறைக்க வென்று சென்றவன் அக்கிணற்றுக்கே பலியாகிவிட்டான்.

அவன் இருக்கும்போது சிங்கர் கொம்பனியில் கடனை எடுத்த 'மிசினும்' அந்த ஓலைக் குடிலும் தான் அவர்களின் தஞ்சம்... சும்மா இருந்தால் சோறு வருமா? ஏதோ விதானை யார் வீட்டில் ஓலை வாங்கிக் குட்டான் இழைப்பது நூறு ஐம்பது சதமென்றால் என்ன ஒன்றரை ரூபாய் என்றால் என்ன பனங்கட்டிக்காரருக்குக் கொடுத்துக் கூப்பன் எடுப்பதும் வருகிற சட்டைத் துணிகளைத் தைத்துக்கொடுத்து கூலியை வாங்கி உடுதுணி எடுப்பதும்தான் அவர்களின் வாழ்க்கை. ஊர்ப்பள்ளிக் கூடத்தில் S.S.C. வரை படித்து 4 C, 3 S உடன் சித்தியடைந்தவள் மேலே படிக்க வசதியற்று வீட்டிலே நின்றுவிட்டாள் கமலா.

குட்டான் இழைப்பும் தையற்கூலியும் எவ்வளவு நாளைக்குச் சோறுபோடும்? பனங்

சுட்டிக்குக்கூட அச்சு வந்துவிட்டதாம். குட்டான் வாங்க யாருமில்லே. தையலும் தீபாவளி பொங்கல் பண்டிகைக்குத்தானே. அதுவும் அந்த ஊரில் தைத்துக் கொடுத்து வீட்டு கூலி வாங்குவதற்கான பாடு இருக்கிறதே! அப்பப்பா என்னசெய்வது காலமும் போகவேண்டுமே!

அப்போதுதான் ''என்னமோ நெசவாலேயாம் கிராமச் சங்கத்தாலே தொடங்கப்போகினமாம் பழகி முடிய நேசவடிக்கிறதுக்குச் சம்பளம் கொடுப்பினமாம்.'' என்று ஊரிலேயிருந்த குமர்ப் பெட்டயளெல்லாம் போகத் தொடங்கினர். பழகி முடியச் சம்பளம் கிடைக்கும் என்று ஐம்பதுபேருக்கு மேல் சேர்ந்ததுதான் அங்கே இருந்தது ஆகப் பத்துத்தறிகள். நெசவில் ஆர்வமுள்ளோர் தறியில் இருந்த மிகுதிப்பேர் ஊர்த் தொளவாரங்கதைப்பதில் ஈடுபட்டனர். இதன் நிமித்தம் ஒவ்வொருவராக விலகி 8 பேரில் வந்துநின்றது நெசவாலே.

விலக விருப்பமிருந்தும் விலக் முடியாத சூழ்நிலையில் இருந்தவள் கமலா. வீட்டில் 'அக்கா பசிக்குது.' வாத்தியார் புத்தகம் கொண்டு வராட்டாம். அடிப்பானெண்டவர்' 'மேளே கூப்பனெடுக்க வேணும், பொன்னமாக்கு ஐஞ்சுறுவாக் கடன்' இவ்வளவுக்கும் பதில் சொல்ல வேண்டியது அவளின் நெசவில் கிடைக்கும் சம்பளம். சில வேளைகளில் தான் பிறந்த நேரத்தை நினைத்தோ, படைத்த ஆண்டவனை நினைத்தோ, இடைவளியில் விட்டுவிட்டுப் போன தந்தையை நினைத்தோ அழுவாள். இவற்றுக் கெல்லாம் பதில் கூறுவது சுண்ணும்படித்த மண்சுவரும் உக்கிப்போன ஓலைப்பாயும் தான்.

இவை போதாதென்று இடையில் குறுக்கிட்டான் நடராசா. அம்மாவின் தொல்லேகளேப் போன்று தானும் அனுபவிக்க வேண்டாமென்று இருந்தவளே பக்கத்து வீட்டு நடராசாவின் கண்வீச்சுப் பலி கொண்டு விட்டது. உயர்தரம் சித்தியடைந்துவிட்டு இயந்திர கம்பனியொன்றில் யாழ்ப்பாணத்தில் வேலைபார்த்து வந்த அவன் சனி ஞாயிறில் வீடுவரும் போது பனேஓலே வேலிக்கூடாகவோ அன்றி நெசவாலே முச்சந்தியிலோ கடிதம் பரிமாறத் தவறுவதில்லே. ஆனுலும் அது யாருமறியாமல் இருந்து வந்தது.

எவ்வளவு நாளேக்கு இந்த விளேயாட்டு. முச்சந்தியில் கடிதம் கொடுத்ததைக் கண்ட தம்பர் கை கால் மூக்கு எல்லாம் வைத்து திரித்துவிட்டார் நடராசனின் தாயான வள்ளியம்மையிடம். மகனுக்குக் கொடுத்த சீதனத்தோடு வீடும் வாங்க இருந்த வள்ளியம்மைக்கு எப்படியிருக்கும்! போதாக் குறைக்கு வண்டிக்கார மணியத்தார் பதினேந்தாயிரம் சீதனத்தோட விசுவமடுவிலே 3 ஏக்கர் காணியும் வீடுவாசலும் தாறன் என்று மாப்பிள்ளேக்கு வந்தது வள்ளியம்மைக்கு 'புண்ணிலே புளிப்பத்தினமாதிரி' இருந்தது.

'விடிஞ்செழும்பினுப் பொழுதிலங்கையாலே போகும் வரைக்கும்' புத்தகங்களில் இல்லாத புராணங்கள் அவள் வாயிலிருந்து வெளி வந்து கொண்டிருந்தன. ஒரு நாளா? இரண்டு நாளா? ஆசைகாட்டிய நடராசனு 'அம்மா பேசினுவே எவ்வளவு மனம் கஷ்டப்படுவாள்' என்று ஒரு வரி ஊஹூம் கிடையவே கிடையாது. பார்த்தாள், பொறுத்துப் பார்த்தாள். முச்சந்தியில் கண்டபோது கூட தெரியாதவன்மாதிரிபோனுன். அவனுக்கு மணியத்தாரின் 15000 சீதணமும் காணி கல்வீடு வாசலும் கண்முன் நிழலாடும்போது இந்த ஓலேக்குடில் எந்த மூலேக்கு? ஒருநாள் 'ஏன் பேசாமல் போறியள்' என்று கேட்டபோது 'ஏன் நீ என்ன இளவரசியோ கதைக்கிறத் துக்கு' எப்படியிருக்கும் நிம்மதியற்ற அவளுக்கு. நிம்மதிகொடுக்க முடிந்தது மூட்டைப் பூச்சிக்கு வாங்கிவைத்திருந்த 'ரன்பக்'கினுல் தான். ராணியும் ரஞ்சியும் அம்மாவுடன் நித்திரை. இதைவிட வேறென்ன சந்தர்ப்பம் வேண்டும். ராஜ் என்னே ஏமாற்றி விட்டாய் என்றவாறே அவள் உயிர் உடலே விட்டுப் பிரிந்தது.

நித்திரையில் இருந்து எழும்பிய நாகம்மா மகளேத் தேநீர் வைக்கக் கூப்பிட்ட போது அவள் உலகை விட்டே போய்விட்டிருந்தாள். சாவு மேளம் ஒலிக்கிறது. டாங்... டாங் நடராசன் கூட செத்த வீட்டுக்கு வந்திருந்தான். இன்னும் ஒரு வருடத்தில் அவன் இன்னெரு திருமணம் செய்ய மாட்டான் என்பது என்ன நிச்சயம்? சிதை எரிகிறது. ஆனுல் எப்போது இந்த மனித மரங்கள் பூண்டோடு ஒழிக்கப்படுமோ!

★

# சாவு நன்று!

காசி ஆனந்தன்

என்னைப் போலொரு மானிடன் என்னை
எப்படித் தாழ்த்தலாம் தோழா? — அவன்
அன்னை போலவே என்னையும் அன்னை
ஆக்கினள் நானென்ன கீழா?

ஆணை செலுத்தவும் ஆளவும் இங்கே
ஆவி அவன் எடுத்தானோ? — பிச்சைப்
பானை ஏந்திய கையனாய் இந்தப்
பாவி பிறந்து வந்தேனோ?

காற்று வானிலே சிட்டுக்கள் கண்டேன்
களிப்பினில் எனை மறந்தேன் — இன்பம்
ஏற்று மறுபொழுதென்கரம் பார்த்தேன்
இருகை விலங்கோ டிருந்தேன்.

என்ன தமிழனோ? ஏன் பிறந்தேனோ?
என்னடா அடிமையின் வாழ்வு? சீச்சீ
இன்னோர் மனிதனுக் கூழியஞ் செய்தேன்
இருப்பதிலும் நன்று சாவு!

---

**Non Alignement Policies:**

1. *Respect of Soveregnity and Intergrity*
2. *Peaceful co-existence and non--aggression*
3. *Anti--racialism*
4. *Anti--imperialism*
5. *Anti--colonialism*

*Freedom is never voluntarily given by the oppressor; it must he demanded by the oppressor.*

**— Martin Luther King**

SPECIALIST IN

WEDDING SAREES

AND

ALL OTHER REQUIREMENTS

IN TEXTILES

# RAJ GOPALS

**47, Grand Bazaar** **Jaffna**

**With Best Complements**

**From**

# LEYDEN INDUSTRIES Ltd

**(Manufacturers of banians, Socks and**

**ready made garments)**

7. Hospital Road, Jaffna

Tel. No. 279

22-1-1976

# கன்னித் தமிழ் மன்றமே...!

22-1-1977

வீர சுதந்திரம் வேண்டி நின்றோர் — பின்
வேறொன்று கொள்வாரோ ?

# தமிழ் மன்ற அறிக்கை – 1976

மன்றத்தின் செயலாளர் என்ற வகையில் மன்றம் வெளியிடும் ஆண்டுச் சஞ்சிகைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் கடமைப்பாடுடையேன் இதன் மூலம் நடப்பு வருடத்தில் மன்றத்தின் செயற்பாடுகளைப் பற்றி அறியத்தரலாமென விழைகிறேன்.

இம் மன்றமானது வளாகத் தமிழ் மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க 22 - 1 - 1976 அன்று அப்போது மனிதப் பண்பியற் பீடப் பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பிக்கப்பட்டது. மன்றத்தின் முதலாவது செயலவையின் உறுப்பினர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. இ. சி. செல்வேந்திரன் |
| துணைத் தலைவர் | : | ,, செ. ப. யோகேஸ்வரன் |
| செயலாளர் | : | ,, இ. வசந்தநாதன் |
| துணைச் செயலாளர் | : | ,, இ. றி. தேவராசா |
| இளம் பொருளாளர் | : | ,, ஆ. மகாலிங்கம் |
| பத்திராதிபர் | : | ,, அ. விமலதாசன் |

செயலவை உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| திரு. ந. சிவராஜன் | திரு. வ. கனகரத்தினம் |
| ,, பொ. தங்கமயில் | ,, த. மகேஸ்வரராசா |
| ,, ச. பாலசுப்பிரமணியம் | செல்வி. மேரி இன்னாசிமுத்து |
| | ,, ச. சடாட்சரம் |

மன்றத்தின் முதலாவது செயலவை என்ற வகையில் நிதியின்மை, அங்கத்தினரைச் சேர்த்தல், பெரும் பொருளாளர் ஒருவரை நியமித்தல், யாப்பு, இலச்சனை, மன்றத்தைப் பதிவு செய்தல் போன்ற பல்வேறு பொறுப்புக்கள் எமக்கு இருந்தன.

வளாகத் தமிழ் மாணவரை அங்கத்தினராகச் சேர்ப்பதன் மூலம் மன்றத்தின் ஆரம்பகால நிதித்தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. தற்போது சுமார் 250 பேர் மன்றத்தின் உறுப்பினராக உள்ளனர். மன்றத்தின் பெரும் பொருளாளராக பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்களை நியமிக்க விரும்பி, அவரை நாம் அணுகிய போது அவரும் இதற்கு முழுமனதோடு சம்மதித்தார். ஆரம்பத்திலிருந்தே அவரது ஆலோசனையும், உதவியும் எமக்கு இருந்து வந்தன. சென்ற மே மாதமளவில் அவர் யப்பான் சென்றிருந்தமையால் திரு. சி. க. சிற்றம்பலம் அவர்கள் பெரும் பொருளாளர் பதவியை ஏற்றார். இவர்கள் இருவரினதும் உதவிகளும், ஆலோசனைகளும் மன்றத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்றன.

மன்றத்தின் யாப்பைத் தயார் செய்வதற்குச் செயலவையிலிருந்து ஒரு உபகுழு நியமிக்கப்பட்டது. அக்குழு திரு. இ. முத்துத்தம்பி அவர்களின் ஆலோசனையுடன் குறுகிய காலத்துள்ளேயே ஒரு யாப்பை ஆக்கிக் கொடுத்தமையால் மன்றத்தைப் பதிவு செய்ய இலகுவாக இருந்தது. மன்ற இலச்சனையும் அங்கத்தவரிடையே கோரப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனைத் திறம்பட வரைந்து உதவிய பருத்தித்துறை ''மோகன் ஆட்ஸ்''க்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ் மொழியையும், பண்பாட்டையும் வளர்த்தலையே நோக்கமாகக் கொண்ட எமது மன்றம் வளாகத்திலும், வெளியிலும் உள்ள தமிழ் மக்களின் பிரச்சனைகளிலும் அக்கறை காட்டி வருகின்றதென்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த வகையிற் சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யும்படி கோரிப் பிரதமருக்கு அறிக்கையும் சமர்ப்பித்திருந்தோம். அத்துடன், வளாகத்தில் நடாத்தப்பட்ட கவியரங்கு, கருத்தரங்கு, விவாத அரங்கு என்பவற்றிலும் தமிழ் மக்களின் பிரச்சனைகளே மையக் கருவாகக் கொள்ளப்பட்டது என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதோடு மட்டுமல்லாது தமிழ் மக்களிற்கு நன்மையே பயக்கக் கூடியவகையிலும் நாம் சேவை யாற்றி வருகிறோம். இந்த வகையிற் கைதடி சைவ அனாதைகள் இல்லம் நடாத்திய கொடிதின வைபவத்திற் கலந்து கொடி விற்பனைமூலம் பணஞ் சேகரித்துக் கொடுத் துள்ளோம். மேலும் அங்கத்தினரின் விருப்பத்திற்கிணங்க மன்றப் பெயர் பொறித்த கடிதக்கோவைகளை விநியோகித்து வருகிறோம்.

மன்றம் செப்ரம்பர் 4ஆம், 5ஆம் திகதிகளில் ஒரு கலைவிழாவை நடாத்துவதென் றும், அதற்கான நிதியை நிதியுதவிக் காட்சியின் மூலம் சேகரிப்பதென்றும் தீர்மானித் திருந்தது. நிதியுதவிக் காட்சியை குறுகிய காலத்துட் சிறப்பாக நடாத்த ஒத்துழைத்த மன்ற உறுப்பினர்கள், வளாகவிரிவுரையாளர்கள், ஊழியர்கள் தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் யாபேர்க்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்

குறித்த திகதியிற் கலைவிழாவை நடாத்த துணைத்தலைவர் தலைமையில் ஓர் உப குழு உருவாக்கப்பட்டது. இக்குழுவும் தனது கடமையைச் சரிவரச் செய்தமையாற் கலைவிழாவைப் பலரும் வியக்கும் வகையில் நடாத்தக் கூடியதாக இருந்தது. இச்சந் தர்ப்பத்தில் இக்கலைவிழாக் குழுவினர்க்கு நான் நன்றி தெரிவிப்பதோடு, கலைவிழா சிறப்பாக நடக்க வளாகத் தலைவர் என்ற முறையில் மட்டுமன்றித் தனிப்பட்ட முறை யிலும் ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கிய பேராசிரியர் க. கைலாசபதியவர் கட்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடாத்தியும், பங்குபற்றியும், ஒழுங்கு செய்தும் உதவிய சகலர்க்கும் தனித்தனியே நன்றி கூறுவிடினும் மொத்தமாக நன்றி கூறிக் கொள்கிறேன். கலைவிழாவைப் பற்றிக் குறிப்பிடும்போது இன்னொன்றையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது தமிழ் மக்களின் தற்போதைய பிரச்சனைகளை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்ட வழக்குரைமன்றமாகும். இது அரசியல் வட்டாரங்களை மட்டுமல்லாது சகல மக்களினதும் கவனத்தை ஈர்த்தது என்பதை அறிந்து நாம் பெருமைப்படவேண்டியுள்ளோம்.

கலைவிழாவையொட்டி எமது மன்றத்தால் தமிழ் வளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையிற் சிறுகதை, கவிதை கட்டுரைப்போட்டிகளும் நடாத்தப்பட்டன. மன்றத்தின் முதலாவது ஆண்டுச் சஞ்சிகை சம்பந்தமான சகல விடயங்களையும் கவனிப்பதற்கு பத்திராதிபர் தலைமையில் செயலவையிலிருந்து ஒரு உபகுழு தெரிவு செய்யப்பட்டது. இக் குழுவும் வெளியிலுள்ள தனியார் நிறுவனங்களின் ஆதரவுடன் சஞ்சிகையை வெளியிடவுள்ளது. மன்றத்தின் ஏனைய நிகழ்ச்சிகள் போன்று இதுவும் சிறப்பாக அமையுமென நம்புகிறேன்.

வளாகத் தமிழ் மாணவர்களின நலனைப்பேணவும், உரிமைகட்காகப் போராட வும் இம்மன்றம் எந்நேரத்திலும் தயக்கம்காட்டியதில்லை. இத்தகைய செயற்பாட்டினால் வளாகத் தமிழ் மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ற இம்மன்றம் தொடர்ந்தும் அவர்களின் நலனைப் பேண உழைத்து வருமென்பதிற் சந்தேகமில்லை.

மன்றத்தின் முதலாவது செயலவை என்றவகையிற் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. எதிர்காலத்தில் இம்மன்றம் சிறப்பாக இயங்கி அதன் நோக்கத்தை நிறைவேற்ற வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**இ. வசந்தநாதன்**
செயலாளர்



நிற்பவர்கள் : (இடமிருந்து வலம்) திருவாளர்கள் :- வ. கனகரத்தினம், செ. ப யோகேஸ்வரன், (துணைத்தலைவர்) பொ. தங்கமயில், ச. பாலசுப்பிரமணியம், த. மகேஸ்வரராஜா, இ. றி. தேவராசா (இணைச் செயலாளர்), அ. விமலதாசன் (பத்திராதிபர்), ந. சிவராஜன்

இருப்பவர்கள் : (இடமிருந்து வலம்) செல்வி ச. சடாட்சரம், திருவாளர்கள் இ. வசந்தநாதன் (செயலாளர்), பேராசிரியர் கா. இந்திரபாலா (பெரும் பொருளாளர்), இ. சி. செல்வேந்திரன் (தலைவர்), ஆ. மகாலிங்கம் (பொருளாளர்), செல்வி மேரி. இன்னாசிமுத்து

# கலைவிழாக் கோலங்கள்

1976ம் வருடம், செப்டம்பர் 4ம், 5ம் திகதிகளில் எமது மன்றம் தனது முதலாவது கலைவிழாவை "முத்தமிழ்க் கலைவிழா" என்ற பெயரில் நடாத்தியது. மன்றத்தின் செயலவை உறுப்பினர்களினதும், அங்கத்தவர்களினதும் நீண்ட கால அயராத உழைப்பின் பிரதிபலனே இக்கலை விழாவாகும்.

கலைவிழாவின் நிகழ்ச்சிகள் யாவும் நமது சமுதாயத்துடன் நேரடித் தொடர்புள்ளவையாக அமைதல் வேண்டுமென்ற ஒரே நோக்குடனேயே தயாரிக்கப்பட்டன. கருத்தரங்கு, பட்டிமன்றம்; வழக்கு மன்றம் போன்றவற்றிற்கு எடுத்துக்கொண்ட விடயங்களும், ஈழநாட்டில் தமிழ்ச் சமுதாயத்திலுள்ள தலையாய பிரச்சினைகளை ஒளிவுமறைவின்றி அலசி ஆராய்ந்து, நம் சிந்தனைகளைத் தெளிவாக்கும் நோக்குடனேயே தேர்வு செய்யப்பட்டன. இராமாயண பாரதங்களையும், சிலப்பதிகாரத்தையும் 'பிரேத பரிசோதனை" செய்துகொண்டிருப்பதில் அர்த்தமேதும் இருப்பதாக எமது மன்றம் கருதவில்லை.

விழாவின் முதல் நாளன்று காலை நிகழ்ச்சிகளுக்கு, எமது வளாகத் தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி அவர்களும், மாலை நிகழ்ச்சிகளுக்கு நமது வளாக மனிதப் பண்பியல் பீடத்தலைவர் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்களும் பிரதம விருந்தினர்களாக அழைக்கப்பட்டனர். இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிகளுக்கு தொழிலதிபர் திரு. தா. திருநாவுக்கரசு (அதிபர் - யாழ். உலோகத் தொழிற்சாலை) அவர்களும், மாலை நிகழ்ச்சிகளுக்கு எமது வளாக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பே. கனகசபாபதி அவர்களும் பிரதம விருந்தினர்களாக அழைக்கப்பட்டனர்.

எமது வளாகத்தின் முதல் மூன்று முக்கியஸ்தர்களையும் பொதுமக்களுக்கு பெருமையுடன் அறிமுகம் செய்யவும், தமிழ்ப் பிரதேசங்களில் தொழிற்சாலைகளை அமைத்து தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் தொழிலதிபர்களுள் ஒருவரைக் கௌரவிக்கவும், எண்ணிய தமிழ் மன்றம் மேற்படியான பெரியோர்களை பிரதம விருந்தினர்களாக தெரிவு செய்தது.

## இயல் அரங்கில் இடம் பெற்றவை :-

கவியரங்கு : "புதியதோர் உலகம் செய்வோம்" — புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களது பாடல் ஒன்றின் முதல் அடி. இதுவே எமது கவியரங்கின் முடி. கவிஞர் எம். ஏ. நுஃமான் அவர்கள் தலைமையில் காட்டாற்று வெள்ளமெனக் கவிவெள்ளம் பாய்ந்தது.

பட்டி மன்றம் : "இலங்கையில் வர்க்கப் பிரச்சினை தீர்க்கப்படுவதன் மூலம் இனப் பிரச்சினை தீர்க்கப்படும்" — இது இன்று தமிழ் மக்களின் முன் எழுந்துள்ள மிகப் பெரிய கேள்விக் குறி. இதனை ஒட்டிப் பேசியோர் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கூட மாணவர்கள். வெட்டிப் பேசியவர்கள் யாழ் வளாக மாணவர்கள். தமிழ்மன்றப் பெரும் பொருளாளர் திரு. சி. க. சிற்றம்பலம் அவர்கள் தலைமையில் இக் கருத்துப்போர் நிகழ்ந்தது.

கருத்தரங்கு : ''வாழ்வும் மொழியும்'' — என்ற விடயம் பற்றிய கருத்தரங்கு கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது. கார்கால மாரி எனக் கருத்துமழை பொழிந்தோர் —

திரு ஆ. சிவநேயச் செல்வன்
திரு. ஈழவேந்தன்
திரு. மு. நித்தியானந்தன் ஆகியோர்.

வழக்கு மன்றம் : ''குற்றக் கூண்டில் தமிழ் ஈழப் பிரிவினை வாதிகள்'' — சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை விசாரணை செய்ய ஓர் நீதிமன்றத்தை அமைத்த தமிழ் மன்றம் நடுநிலைமையுடன் நின்று வாதப் பிரதி வாதிகளையும் ஏற்பாடு செய்தது சுயவாழ்விலேயே ''தமிழ் ஈழப் பிரிவினை வாதிகள் குற்றவாளிகள்'' எனக் கருதும்,

திரு. நாவேந்தன்
திரு சிவா சுப்ரமணியம்
திரு புதுமைலோலன் ஆகியோர் வாதத்தரப்பு சட்டத்தரணிகளாக ஏற்படுத்தப்பட்டனர்.

திரு. நா. கருணனந்த சிவம்
திரு. க. சிவதாசன்
திரு. பொ. கணேசமூர்த்தி ஆகியோர் பிரதிவாதத் தரப்பில் வாதம் நிகழ்த்தினர்.

மிகவும் பரபரப்பையும் சுவாரசியத்தையும் ஏற்படுத்திய இவ் வழக்கின் தீர்ப்பை மிக நீண்ட நேரமாக வாசித்து முடித்தார் நீதிபதி திரு. தேவன் - யாழ்ப்பாணம் அவர்கள். தீர்ப்பின் விபரம் மலரில் இடம்பெறுகிறது.

## இசை அரங்கின் இனிய நிகழ்சிகள் :-

★ யாழ்வளாக மாணவிகளின் இசைத்திறன் : விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த செல்வி ஜெயந்தி நவரட்ணம் அவர்களின் பாட்டும், செல்வி விஜயலக்ஷ்மி நடராஜா அவர்களின் வீணை இசையும், இராமநாதன் இசைக் கல்லூரி மாணவிகளின் வாத்திய விருந்தும், கர்நாடக சங்கீதமும் சபையோரை இவ்வுலகை விட்டு இசையுலகிற்கு அழைத்துச் சென்றது.

★ யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே மிகப் பெறுமதி வாய்ந்த நிகழ்ச்சிகளான திரு. என். கே. பத்மநாதன் அவர்களின் நாதஸ்வரக் கச்சேரியையும் திரு. இராதா கிருஷ்ணன் அவர்களின் சோலோ இசையையும், எமக்களித்த மேற்படி கலைஞர்களுக்கும், அவர்களது குழுவினர்க்கும் எமது நன்றிகள். இந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்த திரு. ஆ. சிவநேயச் செல்வன் அவர்களுக்கு எமது மன்றம் கடமைப்பாடுடையது.

★ வளர்ந்துவரும் இளம் சந்ததியினரில் கர்நாடக இசை உலகிற்கு நம்பிக்கை ஒளியூட்டும் செல்வி ஸ்ரீரஞ்சனி ஆறுமுகராஜா அவர்களின் சங்கீதக் கச்சேரி எமது கலைவிழாவிற்கு மெருகூட்டியது. இந் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துதந்த திரு. ஆறுமுகராஜா அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

**நாடக அரங்கில் நடை பெற்றவை :-**

'' அமரேந்திரா '' மன்னன் ஒருவன் ஆட்சியில், ஓர் இனம் விலக்கப்படுகின்றது. ஆலயங்களில் பிரவேசிக்கவொண்ணுது தடுக்கப்படுகின்றது. தாழ்த்தப்பட்ட இனத் தலைவன் அமரேந்திரன், மன்னன் முன் மார்தட்டிக் கேட்கிறுன். '' மன்னு ஏனைய இனங்களைப்போல் எம்மையும் சமமாக மதித்து ஆட்சிசெய். அன்றில் எம்மை தனித்துப் போகவிடு. எம்மை நாமே ஆண்டு கொள்கின்றேம்'' ......... நியாயமான கேள்வி. இக் கேள்வியை நாடகமாக்கித் தந்த, விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த திரு. நா. தர்மராஜா அவர்களுக்கு எமது நன்றிகளும், பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

'' வைத்தியர் வரும்வரை '' புதிய தொழில்நுட்ப உத்திகளுடன் கூடிய பரீட்சார்த்த நாடகங்கள், இன்றைய நாடக உலகில் காலடி எடுத்து வைத்திருக்கும் இந்நேரத்தில் எமது மன்றமும் அதனை வரவேற்கின்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் திரு. ஜோர்ஜ் சந்திரசேகரன் அவர்களது இந்நாடகத்தை, தயாரிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் அவர்களும், அறிவிப்பாளர் திரு. நடராஜசிவம் அவர்களும் இரவுபகலாகப் பாடுபட்டுத் தயாரித்தளித்தனர். அவர்களுக்கு நன்றி சொல்ல இது ஓர் நல்ல தருணம்.

''போர்க்களம்'' : நாட்டுக் கூத்து. இது மட்டுநகருக்கு யாழ் வளாகத் தமிழ் மன்றத்தினர் அமைத்த ஓர் கலைப்பாலம். இப்பாலத்தினை அமைத்துத் தந்தவர் திரு. மௌனகுரு அவர்கள். அவருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேம்.

''சமுதாய விலங்கு'' சீதனக் கொடுமை. இது இன்று தமிழினத்தைத் தாக்கி வருகின்ற ஒரு கொள்ளை நோய். இதனை மையமாக வைத்து விரிவுரையாளர் திரு. துரை மனேகரன் அவர்கள் எழுதிய இந் நாடகத்தை அவரே தயாரித்தும் கொடுத்தார். அவருக்கும் எமது நன்றிகள்.

விழாவிற்கான இறுதி ஏற்பாடுகளைச் செய்வதற்கு விழாவின் முதல் நாள் இரவு முழுதும் எமக்கு வாகன உதவி செய்து, எம்முடன் கூடி உழைத்த கலைப்பீடமாணவன் திரு. உருத்திரமூர்த்திஅவர்களுக்கு எமதுமன்றம்கடமைப்பாடுடையது

இறுதியாக,

தமிழ் மன்றத்தினர் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படும்படியாக இவ்வாறுன நிகழ்ச்சிகளை ஏற்படுத்தியபோது, அவற்றிற்கு தடைகளோ மறுப்புக்களோ தெரிவிக்காது ஊக்கமும் உற்சாகமும் அளித்தவரும் வளாகத்தில் அந்நேரத்தில் ஒரு பதட்டநிலை நிலவியபோதும் எமது கலைவிழா இனிது நடைபெறக் காரணமாக இருந்தவருமாகிய எமது வளாகத் தலைவருக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேம்.

செ. ப. யோகேஸ்வரன்

*( கலைவிழாக் குழுத்தலைவர் )*

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

பிரதான விற்பனையாளர்,

★ நவீன மின்சார உபகரணங்கள்
★ எவரெடி பற்றரிகள்
★ கசெலி பைசிக்கிள்கள்
★ எஸ்-லோன் பைப்புகளும் உபகரணங்களும்
★ சி. பி. ஈ. மின்பல்புகள்
★ லோட்டஸ் ரயர், ரியூப்

மற்றும்

உத்தரவாதத்துடன் சகாயமான விலையிலும்
பொருத்தமாக மின் இணைப்பு வேலைகளும்
பைப் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

# நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 7016
கிளை: 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சுவைமிகு கோழிப் புரியாணி, கோழி சூப்ஸ், நூடில்ஸ், வட்டிலப்பம்
மற்றும் பலவகையான உணவுவகைகள்
குளிர் பானங்கள் யாவையும் தரமான முறையில்
நியாயமான வகையில் இரு நேரங்களிலும் சேவைபுரியும்
சிறந்த ஸ்தாபனம்

# ஹோட்டல் பரடைஸ்

பெண்களுக்கு தனி உணவு அறை வசதி,
நவீன தங்குமறைகள் இவைகளிற்கு
இன்றே விஜயம் செய்து பாருங்கள்


# HOTEL PARADISE


91. Kasturiar Road
Jaffna


1



2

3



4


5



6

(1) முதல்வர் விளக்கேற்ற முதல்நாள் விழா தொடங்குகின்றது.
(2) தொழிலதிபர் விளக்கேற்றி தொடக்குகின்றார் விழாவதனை,
(3) பாடுபவர் ஒருவர் — பக்கதுணை ஐவர்
(4) வீணை இசையும் — அதற் கிசையும் மத்தளமும்
(5) ''அடக்கு முறைக்கு அடிபணியான் இந்த அமரேந்திரன்''
(6) ''அடங்காத அவனை அடைத்துவிடு சிறையில், முடங்கிக் கிடக்கட்டும் மூர்க்கம் தணிந்துவிடும்''

JAFFNA LIBRARY

1 

 2

3 

 4

5 

 6

( 1 ) சமுதாய விலங்கு என்ன சாமான்ய விலங்கா?''
( 2 ) விலங்கொடிக்கப் புறப்படுமுன் சிறிதுநேர ஓய்வு
( 3 ) இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?
( 4 ) போர்க்களம் நோக்கிப் புறப்படும் மன்னன்
( 5 ) போர்க்களத்தை வர்ணிக்கும் புலவரிருவர்
( 6 ) பரீட்சார்த்த நாடகமல்ல — பைத்தியங்களைப் பற்றிய நாடகம் ...

## "தமிழ் ஈழப் பிரிவினை வாதிகள் குற்றவாளிகளல்ல"

# 'தேவன்' தந்த தீர்ப்பு

மிகவும் பரபரப்பான இவ்வழக்கு நாட்டின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய வாதங்களை இரு கட்சிகளும் சமர்ப்பித்துள்ளன. அவற்றை இந் நீதிமன்றம் உன்னிப்பாக கவனித்ததுடன் ஆற, அமர தீர்க்கமாக ஆலோசித்துள்ளது.

இவ்வழக்கு விசித்திரமானது. இந்த நாட்டின் எந்த நீதிமன்றத்திலும் இம்மாதிரியான ஒருவழக்கு தாக்கல் செய்யப்பட்டதில்லை. ஆகவே முன்மாதிரி, மேற்கோள் என்று எடுத்துக்காட்டவோ, ஆதாரம் காட்டவோ வாய்ப்புகளில்லை. ஆகையால் உலக நாடுகளில் இம்மாதிரியான பிரச்சினைகள் எப்படி அணுகப்பட்டிருக்கின்றன என்று இந்நீதிமன்றம் ஆராயவேண்டியுள்ளது.

வரலாற்றின் ஆரம்பகாலத்தி லி ரு ந் து கோஷ்டி மோதல்கள் நிகழ்ந்தனவாயினும் தேசிய சிறுபான்மைப் போராட்டம் என்று அவற்றைக் கொள்ளமுடியாது. நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தில் இன, மொழி, மத ரீதியில் அணிசேர்ந்ததாகத் தெரியவில்லை. பிரபு என்றால் பிரஞ்சுப்பிரபு, பிரித்தானியப் பிரபு என்று பேசிக்கொண்டதில்லை. எங்கிருந்தாலும் பிரபுக்கள் ஒரே ரீதியில் கணிக்கப்பட்டார்கள்.

சிந்தனை ரீதியில் மத அடிப்படையில் முதலாவதாக ஏற்பட்டமோதல் கிறிஸ்தவர்கள் பாப்பாண்டவர் தலைமையில் ஜெருசலத்தைப் பெறுவதற்காக முஸ்லிம்களுக்கு எதிராக நிகழ்த்திய 'புனித யுத்தமாகும்'. குறுசேட்ஸ் என்று வர்ணிக்கப்பட்ட இந்த யுத்தங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்ந்தன.

இஸ்லாமியர் கைப்பற்றியும் சித்திரவதை செய்தும் ஆயுத பலத்தினால் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் மதத்தைப் பரப்பினர். அப்போதுதான் லட்சிய அடிப்படையில் அணிகள் திரண்டன - இனரீதியில் அல்ல, லட்சிய - கொள்கை - தத்துவரீதியில் ஹூனர், மங்கோலியர் இனங்கள்தான்.

மெக்ஸிக்கோவில் அஸ்டெக்ஸ், ரோமானியர் பிரித்தாளும் தந்திரத்தை அதிகார அடிப்படையாக வைத்து ஒரு சாம்ராஜ்யங்களை நிறுவினர்.

பாப்பாண்டவருக்கும் இஸ்லாமுக்கும் மாற்றாகவே தேசியம் தலை தூக்கியது.

தனித்திருந்தமையின் ஆதாரத்தில் முதலாவதாக உருவான தேசங்களில் இங்கிலாந்து ஒன்றாகும்.

1870 இல் ஜெர்மனியும் இத்தாலியும் இதைப் பின் பற்றின. கண்டுபிடிப்பு யாத்திரையோடு ஸ்பெயினும் போர்த்துக்கலும், 1779 புரட்சியோடு பிரான்சும், 1776க்குப் பிறகு ஐக்கிய அமெரிக்காவும், 1917 க்குப் பின் ருஷியாவும், புரட்சிக்குப்பின் சீனாவும் இந்நிலை எய்தின

காலனித்துவம் - குடியேற்ற நாடுகளின் தொடக்கம் 16 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது. இதுவே இன, மொழிப் போராட்டங்களின் முன்னோடியாக அமைந்தது.

ஸ்லாவ்சும், சேர்ப்சும் தான் ஜெர்மன் தலையீட்டோடு முதலாவது உலக யுத்தத்துக்கு காரணிகள் - பொருளாதார அடிப்படை வெறும் மேல்பூச்சுத்தான்.

சிறிய, பெரிய மாநிலங்கள் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ் ஒன்றாயிருந்து மதமோதல்களினால் பிளவுற்ற நாடு இந்தியா.

பொருளாதார, அரசியல் போராட்டம் பாகிஸ்தான் பிளவுபடக் காரணமாயிற்று.

அயர்லாந்து மத அடிப்படையில் நிகழ்த்திய போராட்டம் இங்கிலாந்தை இளகச்செய்து 1921 இல் ஐரிஷ் குடியரசு நிறுவப்பட்டாலும் தீர்வுகாணப்பட்டதாய் சொல்ல முடியாமலிருக்கிறது.

கொங்கோவில் ஏகாதிபத்திய கைக்கூலிகள் தூண்டி விட்ட இனக்கிளர்ச்சி ஓரினம் மற்றதை அடிமைப் படுத்துவதில் முடிவடைந்தது.

ஆங்கில ஒன்ராறியோவும் பிரஞ்சு குவெபெக்கும் வேறு இரு ஆங்கில மாநிலங்களும் சேர்ந்து 1867 இல் உருவான ஐக்கிய கனடாவில் மொழிவாரியாக இரு இனங்களுக்கிடையே ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சினை இன்றும் இடையிடையே குமுறல்களுக்கு இடமளித்து வருகிறது.

பயாஃப்ராவில் கைக்கூலிகளினால் தூண்டப்பட்ட பிரிவினை அடக்குமுறையில் முடிவடைந்தது. அந்நிய ஆதரவுடன் அங்கோலா அரசியல் போராட்டம் மொஸ்கோ சார்பினருக்கு வெற்றியையளித்தது.

ரோடிசியா, தியாம்பியா ஆகியவற்றில் சிறுபான்மையினருக்கு தற்காலிக சுமுக நிலை ஏற்பட்டுள்ளது. இரண்டாவதில் ஐ. நா. தலையிட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவில் பிரிட்டிஷ் ஆதிக்க கேப், நேட்டல் ஆகியவையும் டச்சு (போயர்) ஆதிக்க ஒறேஞ்ச் ஃபிறீ ஸ்டேட், ட்ரான்ஸ்வால் ஆகியவையும் 1910 இல் இணைந்தன. இன, மத, கலாச்சார பேதங்களிருந்தும் அங்கே ஒற்றுமை நிலவுவதாகத் தெரிகிறது.

லெபனொனில் கிறிஸ்தவ இஸ்லாமிய மத மோதல் நிகழ்கிறது.

பர்மாவும் உகண்டாவும் இம்மாதிரியான பிரச்சினைக்கு கண்டமருந்து சிறுபான்மையினருக்கு எவ்வித சலுகையும் அந்தஸ்துமளிக்காமல் அவர்கள் சம்மதமின்றி நாட்டிலிருந்து அகற்றியதுதான். பெல்ஜியத்தில் அரசியல் ரீதியாக எவ்விதமான மோதலுமில்லாவிட்டாலும் ஃபிளெமிஷ் - பிரெஞ்சு மனக்கசப்பு இருக்கத்தான் செய்கிறது.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள 10 சதவீத நீகிரோவர் ஒன்றிணைவதில் பிரச்சினை உள்ளன. இங்கிலாந்திலும் பிரச்சினைகள் இல்லாமலில்லை.

இந்தப் பின்னணியில்தான் இலங்கையில் பொருளாதார அடிப்படையில் மொழி ரீதியாக ஏற்பட்ட பிணக்குக்கு தீர்வு காண முடியாமலிருப்பதை அணுக வேண்டும்.

இரு கட்சியினரும் எடுத்துக் கூறிய வாதங்களை இந்த நீதிமன்றம் அக்கறையோடு கேட்டு அவதானித்தது மட்டுமல்லாமல் நிதானமாக ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்த்துள்ளது.

சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் சில பகுதிகளை மட்டுமெடுத்து அர்த்தத்தை குழப்பியடித்திருப்பதாக வாதிடப்பட்டது. நீண்ட நூல்களை முழுமையாகப் படிக்க இந்நீதிமன்றத்துக்கு அவகாசமில்லாத போதிலும் கூறப்பட்ட மேற்கோள்கள் முழுமையான அர்த்தத்துடன் திரிபு படுத்தாமலிருந்தவற்றை இந்த நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது (உ—ம்: ஸ்டாலினின் தேசியம் பற்றிய வரைவிலக்கணம்) ஆவணங்களை ஆதாரமாக சமர்ப்பிக்காமல் மேற்கோள்களை எழுந்தமானமாக சட்டத்தரணிகள் கையாண்டுள்ளார்கள் என்ற குற்றமும் சுமத்தப்பட்டது. சட்டத்தரணியின் நாணயத்தையும், நீதிமன்றத்தின் நேரடி அறிமுகத்தையும் கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்டவையும் உண்டு, நிராகரிக்கப் பட்டவையும் உண்டு (உ—ம்: சுதந்திரன் ஜே. ஆருக்கு வாக்களிக்கும் படி தலையங்கம் தீட்டியது).

வாதிதரப்பில் பிரிவினையினால் தமிழர்கள் கதிர்காமத்தையும் முனீஸ்வரத்தையும் இழந்து விடுவார்கள் என்று கூறப்பட்டது. அப்படியாயின் மெக்காவுக்குச் செல்லும் முஸ்லிம்களும் திருப்பதிக்குச் செல்லும் வைஷ்ணவர்களும் பிரான்சிலுள்ள லூர்ட்ஸுக்கு செல்லும் கிறிஸ்தவர்களும் அவ்வப் பிரதேசங்களை தமதாக்கிக் கொண்டு வழிபாடு செய்கிறார்கள்? முன்னர் நூல் வடிவில் தாம் எழுதி குப்பையில் எறிந்ததை இன்று மேற்கோளாக காட்டுவது நையாண்டி செய்யப்பட்டது. ஒரு அரசியல்வாதி ஒரு மேடையில் தான் கூறியதை மறுநிமிடமே மறுக்கலாம், மறுநாள் அப்படிச் சொல்லவேயில்லை என்று சத்தியமும் செய்யலாம். ஆனால் ஒரு எழுத்தாளன் சிந்தித்து எழுத்தில் வடித்து அச்சில் வந்ததை அடுத்த சந்ததி மேற்கோளாகப் பயன்படுத்துவதை குறைகூற முடியாது. அப்படியாயின் எழுதியவரே ''நான் எழுதும் போது குழப்பத்திலிருந்தேன் மயக்கத்திலிருந்தேன், அபத்தமாக எழுதி விட்டேன்'' என்று ஒப்புக்கொண்டாக வேண்டும்.

பிரதி வாதிகள் தரப்பில் ஐரிஷ் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்ததாகக் கூறப்பட்டது. ஐரிஷ் சுதந்திர போராட்டத்தில் இளம் ஆர்வலர், ஐரிஷ் தேசியக்கட்சி, பின்னர் சின்ஃபீனர்ஸ் வெஸ்ட்மினின்டரில் பாராளுமன்றத்தில் அமர மறுத்தது மட்டுமல்லாமல் தாமாகவே அயர்லாந்தில் ஒரு பாராளுமன்றத்தை ஸ்தாபித்தனர்.

ஐக்கியத்துக்கும் சோசலிசத்துக்கும் வக்காலத்து வாங்கியவர்கள் ஏகாதிபத்தியத்திலிருந்தும் முதலாளித்துவத்திலிருந்தும் பிரிவினை நாடுவதாக வாதிட்டது, இந் நீதிமன்றத்துக்கு வியப்பை த் த ந் த து. இவ்விரண்டுக்கும் சாவுமணியடிக்கக் கங்கணம் கட்டி நிற்பவர்கள் இவர்கள் என்ற எண்ணம் தவறானதோ இரண்டிலிருந்தும் பிரிவினை கோருவதன் மூலம் இரண்டையும் வாழவைக்க நினைப்பவர்களா என்ற ஐயத்தைக் கிளப்பியது.

இலங்கையில் பிரச்சினை இருக்கிறது என்பது இரு கட்சிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் தேசிய இனமொன்று இங்கிருப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒருவர் மாத்திரம் இப்போதுதான் தமிழ்த் தேசிய இனம் என்று ஒன்று வளர்ந்துவருகிறது என்றார். எது எப்படியாயினும் ஏற்பட்டுள்ள சிக்கலிலிருந்து விடுபட மார்க்கமென்ன என்பது கேள்வி.

எந்த ஒருவருக்கும் ஒரு பிரச்சினையைப் பற்றி சிந்திக்கவும் தீர்வு இதுவாயிருக்கலாம் என்று ஆராயவும் பரிபூரண உரிமையுண்டு. சிந்தனைக்குத் தடைவிதித்து தனி மனித உரிமையில் தலையிட இந்த நீ தி ம ன் ற ம் விரும்பவில்லை. சிந்தனை பிழையானது என்பதற்கும் இந்த நீதிமன்றம் தண்டனையளிக்க முடியாது. நாட்டின் சட்டத்துக்கு முரணாக ஏதாவது செய்யப்பட்டுள்ளதா என்பதை நிர்ணயிப்பதுதான் நீதிமன்றத்தின் கடமை.

ஆகவே பிரிவினைவாதம் உலக வழக்கைப் பார்க்குமிடத்து பல்வேறிடத்தில் கூறப்பட்டுவந்த ஒன்றாகும். அது நன்மையோ, தீமையோ, சரியோ, பிழையோ பலன் தரக்கூடியதோ, அல்லவோ என்பதைப்பற்றி ஆராய்வது இந்த நீதிமன்றத்தின் நோக்கமல்ல. பிரிவினைவாதம் ஒரு குற்றமானால் அகராதியிலுள்ள மார்க்சியவாதம், சோஷலிசவாதம், ஜனநாயகவாதம் ஆகிய எல்லா வாதங்களுமே குற்றமெனக் கருதப்பட வேண்டும்.

சிந்தனையில் கிளர்ந்ததை வெளியே எடுத்துச் சொல்லும் பேச்சுரிமை இந்நாட்டின் அரசியல் சாசனத்தில், யாப்பில் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே பிரிவினைவாதப் பிரசாரத்தை ஒரு குற்றமென இந்த நீதிமன்றம் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால் ஒரு கோட்பாட்டை, கொள்கையை செயல்படுத்த முனையும்போது நாட்டின் சட்டங்களுக்கு முரண்பாடான நடைமுறைகள் கையாளப்படலாம். அதற்காக முன் கூட்டியே எவரையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரணை செய்வது இந் நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது. பிரிவினை ஏற்பட்டால் தென் இலங்கையிலுள்ள தமிழ்பேசும் மக்களின் கதி என்னவது என்ற வாதமும் கிளப்பப்பட்டது. நாளையோ, மறுநாளோ அல்லது பத்து வருஷங்களுக்குப் பின்போ என்ன நிகழும் என ஊகித்து, ஆருடம் பார்த்து எப்பொழுதோ நேர இருக்கும் குற்றங்களுக்கு இன்றே தண்டனையளிப்பது நீதி மன்றின் வழக்கமல்ல.

புவியியல் ரீதியில் ஒரு தமிழ்ப்பரப்பு இல்லையென்பதும் இங்கு அலசப்பட்ட ஒரு கருத்தாகும். தென்னிலங்கைத் தமிழர் என்ற குறிப்பிலேயே எங்கோ ஒரு த மி ழ் ப் பி ர தேசம் இருக்கிறது என்பது தொக்கு நிற்கிறது. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களிலிருந்தும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இந்நாட்டில் கால்வைத்த அந்நியர் பெர்கசன், வான்கோயன்ஸ், வான் இம்ஹோஃப், கிளெகோண், பிறவுண்றிக், டெ ன ன் ட் போன்றோர் எழுதிய பிரயாண வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து கிழக்கே மட்டக்களப்பிலிருந்தும் மேற்கோரத்தில் சிலாபத்திலிருந்தும் வடக்கு நோக்கிச் செல்லும்போது சந்தித்த மக்கள் இந்நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்த மக்களைக் காட்டிலும் மொழி மத கலாச்சார தோற்ற வேறுபாடுடையவர்களாகக் காணப்பட்டார்கள் என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே நிலப்பரப்பு இல்லையென்பது இங்கு நிரூபிக்கப்படவில்லை.

வெ ண் ணெ ய் திரண்டுவரும்போது தா ழி யை உடைப்பதுபோல் பிரிவினை வா தி க ள் குட்டையைக் குழப்புகிறார்கள்

என்று வாதிகள் குற்றம் சாட்டினுர்கள். வாதிதரப்பினர் கூறியதிலிருந்து இம்மாதிரி யான ஒரு பிரச்சினை 1956க்குப் பின்னர்தான் உருவாயிற்று என்பது அவர்கள் கட்சி. ஆனல் பிரதிவாதிகள் அதற்கு முன்ன ரிருந்தே இப்பிரச்சினை தலைதூக்கிவிட்டது என்று சாதித்தார்கள். ஆகவே 1956இல் இப்பிரச்சினை தோன்றியதென்று ஒப்புக் கொண்டாலும் சென்ற 20 ஆண்டுகளாக திரளாத வெண்ணெய் — உருவாகாத சமுக நிலை இனியா உருவாகப் போகிறது என்று ஒருவர் சந்தேகிப்பதை யாரும் தடுக்க முடி யாது. அத்தகைய ஒருவர் பிரிவினைதான் மார்க்கம் என்று கூறுவதும் தவிர்க்க முடி யாதது. இது சரியான மார்க்கமா, வேறு மார்க்கமில்லையா என்பதைப்பற்றி இந்த நீதி மன்றம் அக்கறைப்பட வேண்டிய அவசிய மில்லை. ஆகவே பிரிவினைவாதம் ஒரு குற்றம் என்றே பிரிவினைவாதப் பிரசாரமும் ஒரு தவறு என்றே நிரூபிக்க வாதி தரப்பினர் தவறிவிட்டார்கள். ஆகவே இவ் வழக்கில் பிரிவினை வாதிகளை நிரபராதிகள் எனக்கண்டு இவ்வழக்கைத் தள்ளுபடிசெய்து அவர்க ளுக்கு இந்த நீதிமன்றம் விடுதலையளிக்கிறது.

---

## கொதிநீர்... சுடும்... கவனம்!

**'கண்ணன்'**

கன்னியா சென்றிருந்தேன்
தமிழ் மன்னன் இராவணேஸ்வரன் தன் அன்னைக்கு அந்திமக்கிரிகைகள் செய்த இடம் 'கன்னியா'
வெந்நீரூற்றுக்களில் குளித்தேன்.
''ஆ... ஊ .'' என்று நெளிந்தேன்.
''என்ன தம்பி சுடுகிறதோ?'' என்றார் என்னருகில் நின்ற ஒரு பெரியவர்
''ஓம் ஐயா'' என்றேன் (பரிதாபகரமாக)
''ஒம் தம்பி... நானும் பார்க்கிறேன்... இப்பவெல்லாம் வரவரச் சூடு கூடிக்கொண்டுதான் வருகுது......'' என்றார்.
நானும் ''ஏன்... ஐயா '' என்று வினவினேன்
அவரோ மௌனமாக வெந்நீரை அள்ளி... அள்ளி... வார்த்துக்கொண் டிருந்தார்.
நான் யோசித்தேன்... ''தங்களுடைய பாரம்பரிய மண் — திருமலை பூமி இன்று அந்நியரால் ஆக்கிரமிக்கப்படுவதுகண்டு கொதிக்கின்ற தமிழ் மக்களின் நெஞ்சத்துக்கொதிப்பெல்லாம் இந்த வெந்நீரில் வெளிப்படுகின் றதோ?...''
நான் குளித்து முடிந்து திரும்பினேன்.

# நன்றி மறப்பது நன்றன்று..........

★ அகில வளாக ரீதியில் நடாத்தப்பட்ட சிறுக்தைப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்த பேராசிரியர் க. கைலாசபதி, திரு. ஏ. ஜே. கருணரட்ண, தேவன்-யாழ்ப்பாணம்; திலகரட்ன

★ கவிதை, கட்டுரை, என்பவற்றைத் தரம்பிரித்த - கலாநிதி, அ. சண்முகதாஸ் திரு. எம். ஏ. நுஃமான்;

★ சிறுகதைப் போட்டிக்கு முதற் பரிசைத் தந்துதவிய கோமேஷல் அச்சக அதிபர். திரு. பாலச்சந்திரா;

★ ஆனந்தக் குமாரசாமி ஞாபகார்த்தப் பரிசினைத் தந்துதவிய பேராசிரியர் கா. இந்திரபாலா;

★ நிதியுதவிக் காட்சிக்குத் தனிப்பட்ட முறையில் உதவியளித்த திரு. தர்மசேன பத்திராஜா;

★ நிதியுதவிக் காட்சியைச் சிறப்பாக நடாத்த உதவிய சாந்தி சினிமா நிறுவனத்தார்;

★ நிதி நெருக்கடியேற்பட்டபோது பண உதவியளித்த மன்ற அங்கத்தினர்;

★ கலைவிழாவிற்கு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து தந்த திரு. ஆ. சிவநேசச்செல்வன்;

★ நாடக அரங்கில் உதவியளித்த திரு. துரைமனோகரன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த திருவாளர்கள், ஜோர்ஜ் - சந்திரசேகரன் ப. விக்கினஸ்வரன், நடராஜசிவம்;

★ நாட்டுக்கூத்தினைத் தயாரித்தளித்த திரு. எஸ். மௌனகுரு;

★ இசை அரங்கிற் பங்கு கொண்ட இராமநாதன் நுண்கலைப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள்;

★ கலைவிழாவிற்கென மோட்டார் வாகன உதவியளித்த யாழ்ப்பாணம் ''கணேசன் ஸ்ரோர்ஸ்'' உரிமையாளர்;

★ மன்றத்திற்குப் பலவழிகளிலும் உதவியளித்த பேராசிரியர் - பே. கனகசபாபதி, பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், திருவாளர்கள்! ஜே. எச். அரியரத்தினம், பொ. சிவபாதம், பராமரிப்புக் கிளை உத்தியோகத்தர்கள்;

★ பல பிரச்சனைகட்கு மத்தியிலும் கலைவிழாவின் போது தேநீர்ச்சாலையைத் திறந்த நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர்;

★ மேலும் மன்றத்தின் நடவடிக்கைகட்கு ஒத்துழைப்பும், ஆதரவும் நல்கிய மன்ற அங்கத்தினர்கள்;

★ இம்மலர் சிறப்புற அமைவதற்கு விளம்பரங்களும், அன்பளிப்புக்களும் தந்துதவிய நிறுவனங்கள்;

★ குறுகிய காலத்துள் மலரை வெளியிட உதவிய ஆசீர்வாதம் அச்சக நிறுவனத்தார்;

★ கலைவிழாவின்போது விசேடமாகப் பேருந்து ஒழுங்குசெய்து தந்த யாழ், இ. போ. ச. அதிபர் தியாகராசா,

★ மற்றும் பலவழிகளிலும் எமக்குதவியளித்த அன்பர்கள் யாவருக்கும் நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

— செயலவை —

வணக்கம் !!! வருக !!!

நவீன நாகரிகத்திற்கேற்ப தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள

## எஸ். எம். எஸ்.

உங்களது பழைய தங்க நகைகளை விற்கவோ, புதிய நகைகளாக மாற்றி எடுக்கவோ எம்மிடம் விஜயஞ் செய்யுங்கள்,

## S. M. S. & SONS
**JEWELLERY HOUSE**

**172, K. K. S. Road,**
**Jaffna.**

அன்பளிப்பு

## பிரத்தியேக கல்வி நிலையம்

தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

## கலை வர்த்தக வகுப்புகள்

G. C. E. (O/L)
G. C. E. (A/L)
N. C. G. E.

6-ம், 7-ம், 8-ம் தர வகுப்புகளுக்கும்
மோட்டார் எந்திரவியல்
A. M. I. M. I. (Lond)
விசேட ஆங்கில வகுப்புக்கள்

அனுபவமும் திறமையுமுள்ள
சிறப்புப் பட்டதாரி
விரிவுரையாளர்களால்
கற்பிக்கப்படுகிறது

## "MERCURY INSTITUTE"
**NELLIADY**

சகலவிதமான ஜவுளி

வகைகளுக்கும்

பாட்டா பாத அணிகளுக்கும்

சிறந்த இடம்

## BUHARY TEXTILES

**161, Main street**

**POINTPEDRO**

# நாவல் அனுபந்தம்

1876



1976

தமிழ் நாவல்
நூற்றாண்டு நிறைவு
ஞாபகம்

குறைந்த கட்டணம்! நிறைந்த சித்தி!

க. பொ. த. (சாதாரண), க. பொ. த. (உயர்தர), B. Com, G. A. Q., B.A.
பரீட்சைகளிற் சித்தியடைந்த, சித்தியடையத் துடிக்கின்ற
மாணவர்களின் ஏகோபித்த நன்மதிப்பைப்பெற்ற நிறுவனம்

## "பிறைற் சென்ரர்"

## BRIGHT CENTRE

பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களால்
கலை, வர்த்தக, விஞ்ஞான பாடங்கள்
சகல வகுப்புக்களிற்கும் கற்பிக்கப்படுகின்றன.

அதிபர்,
"பிறைற் சென்ரர்"

134, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

*With the Best Compliments*

*of*

# BAMA HARDWARES

**Dealers in General Hardware, Brassware & Paints**

11/3 Stanley Rd, Jaffna.

**T' Phone 456**

# தமிழ் நாவலிலக்கியம்

## ஒரு நோக்கு

(நாகராஜ ஐயர் சுப்பிரமணியம் எம். ஏ.)

தமிழ் நாவலிலக்கியத்தின் கடந்த ஒரு நூற்றாண்டுக்கால வளர்ச்சிப் போக்கை நோக்குபவர்கள் அதில் மூன்று வளர்ச்சிக் கட்டங்களை அவதானிக்கலாம். முதலாவது கட்டம் தமிழ் நாவலின் தொடக்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்தங்கள் வரையுள்ள காலப் பகுதி. இக்காலப்பகுதியில் 'கதை' கூறும் பண்பு தலைமை பெற்றிருந்தது. அடுத்து சுமார் 1960 வரையுள்ள மூன்று தசாப் தங்கள். இக்காலப்பகுதியில் பண்பாடு பேணல், சமூகசீர்திருத்தம், உணர்ச்சி முனைப்புக்களைச் சித்திரித்தல் ஆகிய நோக் கங்கள் முதன்மை பெற்றன. அதன் பின் கடந்த சுமார் 15 ஆண்டுகாலமாக சமூக விமர்சனப் பண்பு தலையாய பொதுப் பண் பாக வளர்ந்து வருகின்றது. இவ் வளர்ச் சிக் கட்டங்கள் எழுத்தாளர்களின் அனுப வம், படைப்பாற்றல் ஆகியவற்றினால் மட்டுமன்றி சமூகத்தின் அறிவு வளர்ச்சி யாலும் ரசனைப் போக்கினாலும் நிர்ண யிக்கப்பட்டனவாகவே காணப்படுகின்றன.

தமிழில் நாவல் தோன்றிய காலப் பகு தியில் - 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக் கால் நூற்றாண்டுக் காலத்தில் - அதனை ஒரு 'கதை' சொல்லும் முறை என்றே பெரும் பாலான வாசகரும் எழுத்தாளர்களும் கருதியிருக்கிறார்கள். நாவலுக்கு 'கதை' முக்கியம்; ஆனால் 'கதை' தான் நாவலல்ல. ஆரம்ப நாவலாசிரியர்கள் பலரும் 'கதை' அல்லது 'சரித்திரம்' என்ற தலைப்பிட்டு எழுதிய படைப்புக்கள் அவர்கள் நாவலைப் பற்றிப் புரிந்து கொண்டமையைத் தெளி வாக்குகின்றன. ஆரம்ப கால நாவலாசிரி யர்களுள் குறிப்பிடத்தக்க இரு இளங் கலைஞர்''களான பி. ஆர். ராஜமையரும், அ. மாதவையாவும் இதற்கு விதிவிலக் கானவர்கள். அவர்கள் 'கமலாம்பாள் சரித் திரம்' (1896), 'பத்மாவதி சரித்திரம்' (1898), எனத் தலைப்புக்கள் கொடுத்த போதும் சமகால சமூகத்தைத் தாம் புரிந்து கொண்ட அளவில் கதைக்குப் பொருளாக்கி அதன்மூலம் உயிரோட்ட முள்ள கதை மாந்தரைப் படைத்துச் சுவைபடச் சித்திரித்தவர்கள். இத்தகைய தரமான படைப்புக்கள் எழுந்த பின்னரும் கால் நூற்றாண்டுக்காலம் சமூகத்தை மறந்து 'கதை' பண்ணும் முயற்சியிலேயே தமிழ் நாவலாசிரியர்கள் ஈடுபட்டிருந் தனர். வாசகர்களுக்கு அதிர்ச்சியும் சுவை யும் ஊட்டும் வகையில் கதை'கள் எழு தப்பட்டன.

1930ஆம் ஆண்டை அடுத்து தேசிய விடுதலையுணர்வு வளர்ச்சி பெற்று வந்த சூழ் நிலையில் — 'அந்நிய' ஆட்சியாளரையும் அவர்களது பண்பாட்டையும் எதிர்க்கும் உணர்வு வலுப்பெற்றுவந்த காலப்பகுதியில் — தேசிய பண்பாட்டின் பழைமையையும் பெருமையையும் வெளிக்கொணரும் நோக் கம் தலையெடுத்தது. சமகால சமூகத்திற் காணப்பட்ட பல குறைபாடுகளையும் களைந்து சீர்திருத்தவேண்டுமென்ற எண்ணம் தேசிய விடுதலைக் காலத்தில் முதன்மை பெற்றது. எழுத்தைத் தொழிலாகக் கொள்ள முயன்ற வர்களும் கல்வித்துறை சார்ந்தோரும் இந் நோக்கங்களுக்கு 'நாவல்' வடிவத்தைப் பயன்படுத்த முன்வந்தனர். பத்திரிகையாசி ரியராக வாழ்ந்த கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி யின் 'மாபெரும்' வரலாற்று நாவல்கள் இலக்கியத் திறனாய்வில் 'சம்பவச் சுவைக் கதை'களாகவே கொள்ளப்படுகின்ற பொழு தும் வரலாற்றறிஞர்கள் ஆராய்ந்து கண்ட பண்பாட்டுப் பெருமைகளைச் சாதாரண தமிழ் வாசகன் உணர்ந்துகொள்ள வழி வகுத்தவை என்பதை மறுக்க முடியாது. இவரின் 'அலையோசை' சமகால அரசியல் நிகழ்ச்சிகளைப் பொருளாக்கொண்ட தென்ற வகையில் குறிப்பிடத்தக்க முக்கி யத்துவம் பெற்றது.

சமூக சீர்திருத்தம் என்ற வகையில் 'வள்ளுவம்' முதலிய பழந்தமிழ் நூல்கள் வகுத்த அறத்தையும் ஒழுக்கத்தையும் சம கால காந்தீயம் முதலிய கோட்பாடுகளையும் கலந்து 'அறந்தழுவிய வாழ்க்கை'யைப் புலப் படுத்தும் வகையில் நாவல்கள் எழுதிய மு. வரதராசன் தமது நாவல்களில் கதையம் சத்திற்கும் சம்பவங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. உணர்ச்சிகளை விடச் சிந்த னைகளுக்கே முதன்மையளித்த காரணத்தால் கலைப்படைப்பு என்ற வகையில் இவரது நாவல்கள் குறைகாணப்படுகின்றன.

சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும் பொரு ளாதார முரண்பாடுகளையும் கண்டு சீர்திருத் தம் பேசவந்த அகிலனின் படைப்புக்கள் 'காதல்' உணர்ச்சியை 'முக்கோணங்'களி லும் நாற்கோணங்களிலும் சித்தரிப்பனவாக அமைந்தன. சமூகப்பிரச்சினைகளுக்கு அகி லன் அதிக முக்கியத்துவமளிக்கவில்லை.

தேசிய விடுதலையை அடுத்துத் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் வளர்ந்துவந்த சுதந் திரச் சிந்தனையின் மலர்ச்சியும் உலகளாவிய பரந்த நோக்கும் அடுத்த சுமார் பத்தாண்டு காலத்தின் பின் இலக்கியத்துறையில் செல் வாக்குச் செலுத்தத்தொடங்கின. சமூகம் என்பது நிலையானதென்றுகொண்டு அதில் தோன்றும் முரண்பாடுகள் தற்காலிக் மானவை என முடிவுசெய்து அவற்றைத் துடைத்தெறியும் முயற்சியிலீடுபட்ட சமூக சீர்திருத்தவாதிகளிலிருந்து பெருமளவு மாறு பட்ட புதுயுகச் சிந்தனையாளர்கள் தமிழ் நாவலுலகில் முன்னணிக்கு வந்தனர். இவர் கள் சமூகத்தின் இயக்கத் தன்மையைப் புரிந்துகொண்டவர்களாகவும் வெறும் சீர் திருத்த கோஷங்களால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகக் கூறித் தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்ள விரும்பாதவர்களாகவும் விளங்கினர். சமூகத்தின் இயக்கவியலைப் புரிந்துகொண்டு அதனை விமரிசனம் செய் யும் முயற்சியில் ஈடுபட்ட இவர்கள் மனி தனின் இயல்பான உணர்ச்சிகள், அவனது சூழல், அவனைப் பாதிக்கும் புறக் காரணிகள் என்பவற்றின் மத்தியில் அவனை 'இனம்' காணவும், அவனுக்கும் சமூகத்திற்குமிடையி லான தொடர்புகளை 'இயற்கை' யாகச் சித் திரிக்கவும் முயன்றனர்.

பண்பாடு, இலட்சியம் என்ற திரை களுக்குள் குமைந்துகொண்டிருக்கும், மனிதனின் இயல்பான உணர்ச்சிகளை யும் ஆசாபாசங்களையும் 'திரைநீக்கி'க் காட்டுவதன் மூலம் தனி மனிதனுக்கும் சமூகத்திற்குமிடையிலான முரண்பாடுகளைச் சித்தரிக்க முயன்ற சிலர் ஆண் பெண் உற வுத் தொடர்பான 'பாலியல்' பிரச்சினைக்கு முதன்மையளித்தனர். கிராமப்புறப் பின்ன ணியில் ஜானகிராமனும், நகரப் பகைப் புலத்தில் ஜெயகாந்தனும், தலைநகர 'கொஸ்மோபொலிடன்' சூழலில் இந்திரா பார்த்த சாரதியும் இப்பிரச்சினையைக் கை யாண்டு தரமான படைப்புக்களைத் தந்துள் ளனர். ஜானகிராமனின் மோகமுள், செம் பருத்தி, அம்மா வந்தாள், மரப்பசு ஆகியன வும், ஜெயகாந்தனின் சில நேரங்களில் சில மனிதர்கள், ரிஷிமூலம் போன்றனவும், இந்திரா பார்த்த சாரதியின் திரைகளுக்கு அப்பால் நாவலும் இவ்வகை குறிப்பிடத் தக்கன.

தனிமனிதனை அவனது சூழலுடன் பொருத்தி இயற்கைப் பகைப்புலத்தைச் சித்திரிக்கும் முயற்சி முப்பதுகளிலேயே தோற்றம் பெற்றுவிட்டபோதும் கடந்த பதினைந்தாண்டுக் காலமாகவே அப்பண்புக்கு 'வகைமாதிரி' யான படைப்புக்கள் பெரு மளவு வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல் போன்ற அறிவியல்களின் வளர்ச்சியும், பண்பாட்டு அம்சங்களை நுட்ப மாக ஆராய்ந்து வெளிக்கொணரும் ஆர்வ மும் இத்தகைய 'சூழல்' சித்திரிப்பு முயற் சிக்குக் காரணமாகின்றன எனலாம். சூழ லைச் சித்திரிக்கும் முயற்சிகள் குறிப்பிட்ட பிரதேசத்தினைக் களமாகக் கொண்டமைவ தாலும் மண்ணின் வளத்தை உணர்த்துவ தாலும் 'பிரதேசம்' மண்வாசனை ஆகிய அடைகளைப் பெறுகின்றன. இன்றைய தமிழ் நாவலின் பொதுப்பண்பாகவும், சிறப்பான துறையாகவும் இப்போக்கு அமைந்துள்ளது. சூழலை மண்வாசனை கமழச் சித்திரிக்கும் முயற்சி இலக்கிய வெளிச்சம் பரவாத பல கிராமப் புறங்களைத் தமிழ் நாவலுலகிற்கு இட்டுவந்துள்ளது. நீலகிரி 'படகர்', 'இர ணியல்' 'செட்டிமார்' 'புளிக்குளம்' 'நாடார்' 'தண்ணிமுறிப்பு 'விவசாயிகள்' முதலிய பலரின் வாழ்க்கை முறையும் பண்பாட் டம்சங்களும் தமிழ் நாவலில் இடம்பிடித்துள்

ளன. இவற்ருல் இன்றைய 'சூழல்' சித்திரிப்பு நாவல்கள் ஒருவகையில் பண்பாட்டுக் களஞ்சியங்களாகவும் திகழ்கின்றன.

'சூழல்' சித்திரிப்பு நாவல்களின் கதையம்சம் பிரதேசமாந்தரின் 'தலைமுறை வேறுபாடு' உணர்ச்சிகளிலேயே பெரிதும் தங்கியுள்ளது. தலைமுறை தோறும் மாறிவரும் சிந்தனைப் போக்கையும் அச்சிந்தனை சூழலையும் சூழல் அச் சிந்தனையையும் எவ்வாறு நிர்ணயிக்கின்றன என்பதையும் புலப்படுத்தும் வகையில் கதைப்போக்கு, பாத்திரப் படைப்பு என்பவற்றிற் கவனம் செலுத்தப்படுகின்றது. சுந்தரராமசாமியின் ஒரு புளியமரத்தின் கதை நீல. பத்மநாதனின் தலைமுறைகள்', பள்ளி கொண்டபுரம், ராஜம்கிருஷ்ணனின் குறிஞ்சித்தேன் ஆ. மாதவனின் 'புனலும் மணலும்' முதலிய படைப்புக்கள் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. ஈழத்து நாவல்களில் அ. பாலமனோகரனின் 'நிலக்கிளி' இவ்வகையில் குறிப்பிடக் கூடிய படைப்பு.

மனிதனைப் பாதிக்கும் புறக்காரணிகளான அரசியல் பொருளாதாரம் ஆகியவற்றிலுருந்து அவன் ஒதுங்கி வாழமுடியாது. சமூகத்தின் ஒரு அங்கமான தனி மனிதன் தனது சமூகத்தினதும் நாட்டின் அரசியலினதும் போக்கைச் சமூக இயக்கவியல் ரீதியாகப் புரிந்துகொண்டு வர்க்க உணர்வு பெறவேண்டும். இவ் வகையில் அவனை வழிநடத்துவது பொதுவுடைமைத் தத்துவம். பிரச்சினைகளது சமுதாய அடித்தளத்தைப் புரிந்து கொண்டு அச்சமுதாய அமைப்பையே மாற்றும் வகையில் இணைந்து போராட வேண்டும். இக்கோட்பாடுகள் உலகளாவிய மார்க்ஸீய சிந்தனைகளாலும் சிறப்பாக சோவியத்ருசிய இலக்கியங்களின் செல்வாக்கினுலும் தமிழில் அண்மைக்காலத்தில் பெருவளர்ச்சி பெற்று வருகின்றன. இக்கோட்பாட்டினடிப்படையில் தமிழில் நாவல் எழுதிய முதல்வர் சிதம்பரரகுநாதன். இவரது பஞ்சும் பசியும் (1953) அரசாங்கத்தின் ஜவுளிக் கொள்கையால் அல்லலுற்ற நெசவாளர் அழுது மடிந்ததைச் சித்திரிக்கின்றது. ஈழத்திலே இளங்கீரன் தென்றலும் புயலும் (1955) நீதியே நீகேள்! (1959) நாவல்களில் தொட்டுச் சென்ற இக்கோட்பாட்டை செ. கணேசலிங்கன் வாழ்க்கையுடன் பிணைத்து நீண்டபயணம் (1965) செவ்வானம் (1967) நாவல்களை எழுதினுர். இவையும் தமிழ் நாட்டில் டி. செல்வராஜின் மலரும் சருகும் (1969) தேனீர் (1973) கு. சின்னப்ப பாரதியின் தாகம் (1675) என்பனவும் இவ்வகையில் தலையாய படைப்புக்கள்.

யாழ்ப்பாணத்தின் சமூக ஏற்றத்தாழ்வுப் பிரச்சினை, கொழும்பு நகரின் வர்க்க முரண்பாடுகள், தமிழ் நாட்டின் கேரள எல்லைப்புற தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் அவல வாழ்க்கை, பொன்னேரிக் கிராமத்தின் விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர் வாழ்க்கைப்பிரச்சனைகள் என்பன இந் நாவல்களில் சித்திரிக்கப்பட்டுள்ளன. பிரச்சினைகளின் அடித்தளத்தை இனங்கண்டு அவற்றுக்கான சமூக அமைப்பையே மாற்றவேண்டும் என்ற கருத்தை முன்வைத்து வர்க்க ரீதியாக மக்களை அணி திரட்டும் கோட்பாட்டுத் தெளிவுள்ள பாத்திரங்கள் இந் நாவல்களில் ஆசிரியனின் பிரதிநிதியாக இயங்குகின்றன இவ்வகை நாவல்களைப் படைக்க முயலும் சிலர் கோட்பாட்டுத் தெளிவு கொண்டிருந்தபோதும் சமூகமாந்தரின் வாழ்க்கை முறை சூழல் என்பவற்றில் அனுபவரீதியான அறிவு போதாமையால் வெற்றிபெறத் தவறிவிடுகின்றனர். வர்க்க உணர்வைத் தூண்டும் வகையில் சமூக விமர்சனம் செய்யும் நாவல்களுங் கூட தாம் எழுந்த சமூகத்தைச் சித்திரிக்கும் வகையில் 'சூழல்' சித்திரிப்புப் பண்புகொண்டிருக்க வேண்டியது இன்றியமையாதது. இவ்வகை நாவல்களில் 'கதை', முரண்பாட்டைத் தெளிவுபடுத்துவதாகத் தொடங்கி வர்க்க உணர்வினைப் படிப்படியாக வளர்த்து வந்து ஈற்றில் போராட்டத்தில் நிறைவுபெறும்· சம்பிரதாயபூர்வமான கதைப் போக்குகளை இந் நாவல்களில் எதிர்பார்க்க முடியாது.

தமிழில் இன்று வெளிவரும் தரமான நாவல்களை மேற்படி மூன்று முக்கிய வகைகளுக்குள் இனங்கண்டு கொள்ளலாம். மார்க்ஸீய கண்ணேட்டத்திற்குப் புறம்பானவகையில் காந்தீய சர்வோதய சிந்தனைகளை முன் வைத்து தனிமனிதனை அரசியலுடன் இணைத்தெழுதும் அரசியல் நாவல்களும் அரும்பிக் கொண்டிருக்கின்றன.

தமிழ் நாவல் வாசகரின் தரமும் நாவல் வளர்ச்சிக்கேற்ப மாற்றமடைந்து வந்துள்ளது. சம்பவச் சுவைக் கதைகளை வாசிக்கும் ஆர்வம் குறையாவிட்டாலும் சமூக விமர்சன நாவல்களைப் படிக்கும் ஆர்வம் அதிகரித்து வருவது தெரிகிறது. இளைஞர் மட்டத்தில் ஏற்பட்டுவரும் 'இலக்கிய தாகம்' மேலும் தரமான சமூக விமர்சனப் படைப்புக்களை நாவலாசிரியர்களிடம் அவாவிநிற்கின்றது.

# ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியம்

## அண்மைக்காலப் போக்குகள்

சித்திரலேகா மௌனகுரு

அண்மைக்காலப் போக்குகள் எனும்போது கடந்த பத்து வருடங்களுக்குள் ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியத்தில் ஏற்பட்ட புதியபோக்குகள், புதிய வளர்ச்சிகள் என்பவையே இங்கு குறிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட இக்காலப் பகுதிக்கு முன்னர் எமது நாவலிலக்கியத்தில் பிரதானம் பெறுதவையாகவும் தற்போது முனைப்பாகக் காணப்படுபவையுமான இப்போக்குகளில், சிறப்பானவற்றையும் அவற்றுக்கான காரணங்களையும் சுட்டிக்காட்டுவதே இச் சிறு குறிப்பின் நோக்கமாகும்.

ஈழத்துத் தமிழ் நாவலிலக்கிய வரலாற்றை நோக்கும்போது ஆரம்பத்திலிருந்தே எமது நாவல்கள் அறப்பண்பும் சமூக சீர்திருத்த உணர்வும் கொண்டிருந்தன என்பதில் ஐயமில்லை. பொதுவாகச் சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளை, அவை தனி மனிதர் வாழ்க்கையில் ஏற்படுத்தும் பிரச்சனைகளின் மூலம் விபரித்து அவற்றிற்குப் பரிகாரம் காண்பது இந் நாவல்களின் பொதுப்பணியாக விளங்கிற்று. சுதேச விருத்தி, சமூக ஒற்றுமை, ஒழுக்க உயர்வு மனித நேயம் முதலியவற்றை இவை எடுத்துரைத்தன. இடைக்காடரிலிருந்து இளங்கீரன்வரை இத்தகையபோக்கு சிற்சில வேறுபாடுகளுடன் நிலவி வந்துள்ளது. இதே காலத்தில் எமது நாவலுலகில் இதற்குச் சமாந்தரமாகக் காணப்பட்ட இன்னோர் போக்கும் மனங்கொள்ளக்கூடியதே. வாசகர்களின் கதைகேட்கும் அவாவினைத் திருப்தி செய்யும் முகமாகவும், அதன் மூலம் விற்பனையைச் சுலபமாக்கவும் கருதி எழுதப்பட்ட மர்மப்பண்பு நிறைந்த, அற்புதக்கதைத் தன்மைவாய்ந்த பரபரப்பு நாவல்களையே இங்கு குறிப்பிடுகின்றேன். 1930 களில் தோன்றி வேகம் பெறத்தொடங்கிய 'பரபரப்புப்' பண்புவாய்ந்த நாவல்களை எழுதிக்குவித்தோரில் அக்காலத்து வீரகேசரி ஆசிரியராகவிருந்த எச். செல்லையா, பிற்காலத்தில் வாஸ் முதலியோர் குறிப்பிடக் கூடியவர்கள்.

இவ்வாறு சமூக உணர்வு, கலைப்பண்பு என்பவற்றைப் பேணும் நாவல்கள், விற்பனையை நோக்காகக் கொண்டு எழுதப்படும் நாவல்கள் என்ற இருமுனைப்போக்கு தொடர்ந்து எமது நாவலுலகில் காணப்படுகிறது. இக்குறிப்பில் முதல்வகையில் எழுதப்படும் நாவல்களையே அவதானிப்புக்கு எடுத்துக் கொள்வோம். (மேற்குறிப்பிட்ட பரபரப்பு நாவல்களிற் கூட அண்மைக் காலங்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு போக்கு வளர்ந்திருக்கிறது. ஆரம்பத்தில் இத்தகைய நாவல்களில் பாழ் மனைகளும், பயங்கரச் சம்பவங்களும் இடம் பெறினும் நல்லோர் இறுதியில் நன்மையே அடைவர் என்னும் கருத்து வாய்ப்பாடு போலப் பேணப்பட்டது. பின்னர் '50ம் ஆண்டுகளில் வீரகேசரி தொடர்கதைகளாக வந்தவற்றில் மர்மத்தன்மையே மிகவும் பேணப்பட்டது. இம்மரபில் இன்று வெளிவரும் கறுப்பு ராஜா, ஜமேலா, பட்லி முதலிய நாவல்களில் குற்றச் செயல்களுக்குக் கொடுபடும் முக்கியத்துவம் பிறழ்வுபட்ட பாலியல் விவகாரங்கட்கும் கொடுபடுகிறது. பாலியல் குற்றங்களையே விபரித்தும் அவற்றையே மையமாகக் கொண்டும் எழுதப்படுவதும் இத்தகைய நாவல்களில் அண்மைக் காலப் போக்கு என்பதும் மனங்கொள்ளத்தக்கதே.)

இக்காலத்து நாவலாசிரியர்களாக செ. கணேசலிங்கம், பெனடிக்ற்பாலன், கே. டானியல், செங்கை ஆழியான் சி. சுதந்திரராஜா, தெணியான், பாலமனோகரன், அருள் சுப்பிரமணியம், எஸ். பொ. முதலியோரைக் குறிப்பிடலாம். இக்காலத்துக்கு முன்னரே இவர்கள் எழுத்துலகிற் பிரவேசித்திருப்பினும், இந் நாவலாசிரியர்களின் பெரும்

பாலான நூல்கள் கடந்த பத்தாண்டுக்ளுக் குள்ளேயே வெளிவந்தன. இவர்களது நாவல்களை எடுத்து நோக்கும்போது, இவற்றில் எவ்வகையிலாவது சமூக உணர்வு, சமகாலப் பிரச்சனைகள் பிரதானம் பெற்றிருப்பதை அவதானிக்கலாம். இக் காலகட்டத்தில் நாட்டில் இடம் பெற்ற பிரச்சனைகள், முக்கிய போக்குகள் என்பவற்றை இவை பிரதிபலிக்க முனைந்தன. யாழ்ப்பாணத்துச் சாதிப் பிரச்சனை, மலையகத் தோட்டத் தொழிலாளர் போராட்டம், நகரத்துத் தொழிலாளர் பிரச்சனை, குடியேற்றப் பகுதி விவசாயிகளின் வாழ்க்கை எனத் தனித்தனி அம்சங்களாக ஆராயப் பட்டன. '56ம் ஆண்டிற்கும் பின்னர் வெளிவந்த சில நாவல்களில் ஆங்காங்கே இப்போக்கு காணப்படினும் கூர்மையான முறையில் நோக்கப் படவில்லை.

சமூகத்தின் குறிப்பிட்டவர்க்கத்தினர், அவர்களது தனிப்பட்ட பிரச்சனைகள் என வரையறை செய்து விபரிப்பதாக அண்மைக் காலப்போக்கு அமைந்துள்ளது. தோட்டத் தொழிலாளர், நகரத்து மத்தியதர வர்க்கத்தினர், சாதிமுறையால் ஒடுக்கப்படும் மக்கள் எனத் தனித்தனிப் பிரிவினரை தனித்தனி நாவல்கள் எடுத்தாள்கின்றன. இங்கு எமது நாவலிலக்கியம் சமூகத்தில் தாழ்ந்த நிலையிலுள்ளோரையும், ஒடுக்கப்படும் வர்க்கத்தினரையும் அதிகமாகச் சார்ந்துநிற்கும் ஒரு போக்கிற்கு உட்படுகிறது. (ஈழத்து நாவலிலக்கியம் ஒரு போதும் உயர்வர்க்கத்தினரைப் பாத்திரங்களாகக் கொள்ளவில்லை. 'மிதிலாவிலாஸ்' போன்ற நாவல்கள் தோன்றுதல் பிரதான போக்காக வளரவில்லை.

அண்மைக்கால நாவலிலக்கியத்தில் சமூகத்தின் அடிமட்டத்திலுள்ளோர் பாத்திரங்களாக அமைந்தமைக்கும், சமகாலப் பிரச்சனைகள் இடம்பெற்றமைக்கும் ஒரு முக்கிய காரணம் உண்டு. '56-ம் ஆண்டிற்குப் பின்னர் பல்வேறு காரணங்களாலும் எமது இலக்கிய உலகில் பெரும்பாலும் இடதுசாரிப் போக்குடையோரே முக்கிய இடம் வகித்து வந்துள்ளனர். அத்தகையவர்களால் இலக்கியப் போக்கு நெறிப்படுத்தப் பட்டது. இதன் விளைவாக சிறுகதையோ கவிதையோ நாவலோ எதுவாயினும் சமூக உணர்வுடன் மக்களுக்கு ஏதாவது ஒரு செய்தியை உணர்த்தவேண்டும். என்ற நோக்குடன் எழுதப்பட்டன. இந்நிலை' 60 க்ளில் இன்னும் வேகம்பெற்றது. இடதுசாரி இயக்கங்கள் தீவிரமாகச் செயல்பட்டமையும், தத்துவங்கள் மக்கள் மத்தியில் பரவலாக இடம்பெற்றமையும், மேலே குறிப்பிட்ட எழுத்தாளர்கள் சிலர் இவ்வியக்கங்களை ஆதரித்தமையும் எமது நாவலிலக்கிய உலகில் சமகாலப் பிரச்சனைகள் அரசியல் உணர்வுடன் எடுத்தாளப்பட்டமைக்குப் பலமான காரணங்களாகும்,

சமகாலப் பிரச்சனைகளை எடுத்தாள்வது என்று கூறும்போது அவற்றின் வெறும் படப்பிடிப்பு விவரணம் மட்டுமன்று. இத்தகைய பிரச்சனைகள் ஏன்தோன்றுகின்றன. எத்தகைய வடிவங்களில் பிரதிபலிக்கின்றன? அவை எவ்வாறு நோக்கப்படல் வேண்டும்? என்பவற்றை, காரணகாரியத் தொடர்புடன் விளக்குவதே வேண்டப்படுவது. இத்தகைய நெறியிலும் எமது நாவல்கள் ஓரளவு சென்றுள்ளன என்று கூறலாம்.

மேற்கூறியவாறு யதார்த்த முறையில் சமகாலப் பிரச்சனைகள் அணுகப்படும் போது அங்கு அரசியல் இடம் பெறுவது தவிர்க்க முடியாததாகிறது. சாதிப் பிரச்சனையோ தோட்டத் தொழிலாளர் பிரச்சனையோ எதுவும் நாட்டு அரசியலுடன் இணைந்தது என்ற உணர்வு பொதுவாக நாவலாசிரியருக்கு ஏற்பட்டது. மேலும் இத்தகைய நாவலாசிரியர் பொதுவாக இடதுசாரி அரசியல் சித்தாந்தங்களினுல் கவரப்பட்டிருந்தனர். இதனுலும் நாவல்களில் அரசியல் உணர்வு இடம்பெறத் தொடங்கியது. அரசியலுக்கும் வாழ்க்கைக்கும் இடையிலுள்ள தொடர்பு ஆராயப்படுவதாலும், அரசியல் சர்ச்சைகள் அடிக்கடி இடம் பெறுதலும், நாட்டின் பிரதான அரசியல் நிகழ்ச்சிகளுடன் சேர்ந்து கதை அமைத்திருத்தலும் இந்நாவல்களின் பிரதான பண்புகளாகும். இந்நிலையில் இவற்றில் வரும் பாத்திரங்கள் ''அரசியற் பிராணி''களாக அமைந்து விடுவதும் உண்டு.

எனவே ஒரு பொது அணுகு முறையில், சமூக சீர்திருத்த உணர்வுடனும், தாராண்மை மனேபாவத்துடனும் முன்

னர் நோக்கப்பெற்ற சமூகப் பிரச்சனைகள் குறிப்பிட்ட அரசியல் சித்தாந்த வழியில் கூர்மையாக நோக்கப்படுவது அண்மைக் காலப்போக்கின் பிரதான பண்பு எனலாம். இங்கு ஈழத்துத் தமிழ் நாவல்களுக்கும் தமிழ்நாட்டு நாவல்களுக்குமிடையே காணப்படும் பிரதான வேறுபாடு சிந்தனைக்குரியது. சமீபத்தில் தமிழ் நாட்டிலும் அரசியல் சித்தாந்தங்கள் நாவலில் வெளிப்படையாக அமையும் போக்கு தலை தூக்கியுள்ளது. எனினும் அங்கு பல்வேறு அரசியல் கருத்துக்களும் இடம் பெறுவதைக் கவனிக்கலாம். அவரவர் வர்க்க நிலைமைக்கும் அரசியற் சார்புக்கும் ஏற்றபடி இவை அமைகின்றன. ஆனால் ஈழத்தைப் பொறுத்தவரை அண்மைக் காலத்தில் எமது நாவல்களில் முதன்மை வகிப்பது இடதுசாரி அரசியற் கருத்துக்களே.

மேலே ஓரிடத்தில் காட்டியவாறு, குறிப்பிட்ட சமூகம், குறிப்பிட்ட பிரச்சனை எனப் பிரித்தெடுத்துக் கையாள்வதன் தவிர்க்க முடியாத விளைவாக குறிப்பிட்ட பிரதேசங்களை நோக்கி நாவல் நகரும் நிலை ஏற்பட்டு விட்டது. கிளிநொச்சி, பாஷையூர், உரும்பிராய், திருகோணமலை எனத் தனித் தனிப் பிரதேசங்களை எடுத்து அவற்றில் வாழும் மக்கள், அவர்களின் தனித்தன்மைகள், நம்பிக்கைகள், வழக்கங்கள், மதிப்பீடுகள், மொழி என்பவற்றை முக்கியப்படுத்தும் போக்கு மேலோங்கியுள்ளது. இவ்வாறு குறிப்பிட்ட பகுதியை அவற்றின் முழுத்தன்மையுடனும் காட்ட வேண்டியிருப்பதன் காரணமாக நாவலில் இடம்பெறும் மொழிநடையில் கணிசமான அளவு மாறுதல் ஏற்பட்டிருப்பதை உணரலாம். நாவலில் ஆரம்பகாலந்தொட்டு பேச்சுவழக்கைத் தழுவிய மொழி கையாளப் பட்டிருப்பினும் அண்மைக்காலத்திலேதான் பிரதேச வழக்கு அல்லது வட்டார வழக்கு அதிகமாக இடம்பெறத்தொடங்கியுள்ளது.

இறுதியாக இவற்றைக் தொகுத்து நோக்கும்போது ஒன்று கவனிக்கலாம். நாவலிலக்கியத்தில் காணப்படும் இந்த அண்மைக் காலப்போக்குகள் நாவலுக்கு மட்டும் உரியவையன்று. சமூக உணர்வு அரசியல் உணர்வு என்பவை கூர்மை பெற்றிருப்பது எமது இலக்கியத்தின் பொது அம்சமே. எனினும் நாவலில் இது சிறப்பாகப் பிரதிபலிக்கிறது.

## ஈழத்து ஆரம்பகால தமிழ் நாவல்கள் (1876-1918)

1885 அசன் பேயுடைய கதை
1891 ஊசோன் பாலந்தை கதை
1905 வீரசிங்கம் கதை
1914 நொறுங்குண்ட இருதயம்
1916 விஜயசீலம்
1918 சுந்தரன் செய்த தந்திரம்

குறிப்பு : 1895-ல் இந்தியாவில் வெளியிடப்பட்ட வசன சம்பிரதாய கதையும் ஈழத்து நாவலே.

தொகுப்பு : நா. சுப்பிரமணியம்

# மர்ம நாவல்

தேவன் — யாழ்ப்பாணம்

இலக்கிய அந்தஸ்து : மேனாட்டு மொழிகளில் மர்மக் கதைகள் ஒரு இலக்கிய அந்தஸ்தைப் பெற்றுவிட்டன. அவற்றை எழுதுவதும் ஒரு தனிக் கலையாகிவிட்டது. முதியவர்கள், பெண்கள்கூட மர்மக் கதைகளை விழுந்து விழுந்து படிக்கிறார்கள். ஒரே கதையை மீண்டும் மீண்டும்கூடப் படிக்கிறார்கள் ஆகவே மர்மம் துலங்கப்பட்டதும் அவற்றின் கவர்ச்சி குன்றிவிடுவதில்லை என்பது புலனாகிறது. தமிழில் மர்மநாவல்கள் அவ்வளவு தூரம் வளர்ச்சியடையவில்லை என்பது வெளிப்படை. சிலர் ஆங்கில நூல்களை அப்படியே தமிழில் பெயர்த்து பாத்திரங்களினுடைய பெயரையும் உடையையும் மாற்றிவிட்டுள்ளார்கள். ஏர்ஸ் ஸ்ரான்லி கார்டினருடைய நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. வேறு சிலர் குறுநாவல் நீளத்தில் ஆழமோ, அர்த்தமோ இல்லாத வகையில் எழுதிக் குவித்திருக்கிறார்கள். அப்பட்டமான இலக்கியத்திருட்டும் நடைபெற்றுள்ளது. ஆனால் தீவிரமாக இத்துறையில் பிரபல எழுத்தாளர்கள் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. அதனால் கற்பனையில் உருவான ஹெர்கியூல் பொய்றோ, பெறிமேசன் போன்றோர் உயிரோடு வாழும் துப்பறியும் நிபுணர்கள் என்று வாசகர்களை மயக்கும்படியான பாத்திரம் இதுவரை தமிழில் இல்லை. பெரும்பாலும் பாடசாலை மாணவர் மட்டத்திலேயே மர்மக்கதை வாசகர்கள் இருப்பதற்கு காரணமும் அதுதான்.

**வளர்ச்சி :** எட்கார் அலென்போவையும் கோனன் டோயிலேயும் மர்மக்கதைகளின் பிதாக்கள் எனலாம். 20 ஆவது சதாப்த பிற்பகுதியில் பிறந்த இவ்வடிவம் பல மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. முதலில் நாம் சற்றும் எதிர்பாராத ஒரு பாத்திரத்தையே குற்றவாளியாக்குவது 'பாஷனா'க இருந்தது. வாசகர்கள் இவ்வுத்தியை விரைவில் உணர்ந்து கொண்டார்கள். ஆகவே பின்னர் ஒரு பாத்திரத்தின்மீது வாசகனுக்கு சந்தேகத்தை எழச் செய்து இடையில் அவனை நிரபராதி என நம்பும்படி செய்து, இறுதியில் அவனையே குற்றவாளியாக்கும் முறையை எழுத்தாளர்கள் கையாண்டனர். இதுவும் நீண்ட காலத்துக்கு 'மௌசில்' இருக்கவில்லை. இப்பொழுது பெரும்பாலும் முதலாவது அத்தியாயத்திலேயே கொலைகாரன் யார் என்ற குட்டை வெளிப்படுத்தி விட்டு 'ஏன் செய்தான்' 'அவனை எப்படி மாட்டுவது' என்ற வேட்டையில் இறங்கிவிடுகிறார்கள். வெறும் புதிர் என்றநிலைமாறி, மர்மக்கதைகளும் நாவல் இலக்கியம்தான் - அவற்றிலுள்ள புதிர்கள் வாசகனுக்கு ஒரு விசேட பரிசு - என்றாகிவிட்டது.

**வாசகர்கள் :** மர்மக்கதைகள் உண்மையிலேயே இருகதைகளாகும். ஒன்று, உண்மையிலேயே நடந்தது, இரண்டு, நடந்தது போல தோற்றமளிப்பது. வாசகன் தற்காலிகமாக அவநம்பிக்கையை மூட்டை கட்டி வைத்துவிட்டு பொழுது போக்காக மர்மக் கதைகளில் ஈடுபடுகிறான். மர்மம் என்றதும் அரைகுறை மனதோடு வாசிக்கத் தொடங்கியவனும் அதில் முற்றாக மூழ்கிவிடுகிறான். இவனை ஏமாற்றுவதுதான். எழுத்தாளனின் திறமை. அதிலும் நேர்மையும் நாணயமும் வேண்டும். எதையும் வாசகனிடமிருந்து ஒழிக்கலாகாது. இறுதியில் துப்பைத் துலக்கும்போது வாசகன் அவதானிக்காமல் விடக்கூடிய அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தக் கூடாது. சொல்லப்போனால் விவேகமுள்ள வாசகன் அரைகுறையாகவாவது சரியான பாத்திரத்தின் மீது சந்தேகம் கொள்ளக் கூடியதாயிருந்தால் சுவாரஸ்யம் குன்றாது. இவ்வகைப் படைப்புகள் மனித இயல்பில் இருண்ட பகுதியைச் சித்திரிப்பனவாகும்.

ஆகையால் கடைசியில் குற்றவாளி தண்டிக்கப்பட்டேயாக வேண்டும் - அது நீதி மன்றத்தின் மூலமாயிருக்கலாம், வேறு வழியாலாயுமிருக்கலாம்.

**பிணம் :** இவற்றுக்கு ஒரு கொலை அவசியம். கூடிய விரைவில் ஒரு பிணத்தை வாசகனுக்கு சமர்ப்பிக்கவேண்டும். எழுத்தாளன் அறிமுகப்படுத்திய பாத்திரங்களில் எதன் மீதாவது வாசகனுக்கு அபிமானம் பிறக்க முன்னர் 'சட்டுப் புட்டென்று, ஒன்றைக் கொலை செய்து விடவேண்டும். நீட்டி முழக்காமல், அசிங்கமான வர்ணனைகளில்லாமல் காரியத்தை முடித்துவிட வேண்டும். யாரைக்கொல்லுவது? அன்றுட வாழ்க்கையில் மரக்கட்டைகளாயிருப்பவர்கள், பொதுமக்கள் அபிமானத்தைக் கவராதவர்கள். இதற்கு 'லாயக்கு'. அரசியல் வாதிகள், சோரம்போகும் கணவர்கள், வைத்தியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், விஞ்ஞனிகள், நடிக நடிகையர் - இவர்களில் யாராவது செத்தால் பொலிசுக்குவேலை, நெருங்கிய உறவினர்களுக்கு கவலை. வாசகனுக்கு இவர்கள் மீது அதுதாபம் ஏது? ஒரு கர்ப்பிணியையோ, ஒரு குழந்தையோ, ஒரு நல்ல மனைவியையோ கொல்லுவது வாசகனின் ஆத்திரத்தைக் கிளப்புவதாகும். ஒருவரின் ஆசைநாயகியைக் கொல்லலாம். கணவனை, குழந்தைகளை அலட்கியம் செய்து இன்னொருவனோடு உறவுவைத்திருக்கும் ஒரு மனைவியும் கொல்வதற்கு ஏற்ற பாத்திரமே.

**ஆயுதம் :** நஞ்சூட்டுவது, விஷப்பாம்பைப் பயன்படுத்துவது, கழுத்தைத் திருகுவது, துப்பாக்கியால் சுடுவது, நீரில் மூழ்கச் செய்வது, வாளால் வெட்டுவது, நச்சுப் புகையூட்டுவது - இப்படி எத்தனையோ வழிகளுண்டு, பெரும்பான்மையான மர்மக் கதைகளில் துப்பாக்கியே கருவி. எழுத்தாளனுக்கு நன்கு பரிச்சயமான ஒரு ஆயுதமே சிறந்தது. துப்பாக்கிக்கும் துவக்குக்கும் வித்தியாசம் தெரியாமல், சுழல் துப்பாக்கி ரவையின் அளவு தெரியாமல், குறிப்பிட்ட துப்பாக்கியில் எத்தனை தோட்டாக்களைப் போடலாம் என்பது தெரியாமல் எவ்வளவு தூரத்துக்கு குறிவைக்கலாம் என்பது தெரியாமல் அதனை எழுத்தாளன் எப்படிக் கையாள முடியும்?

**பாத்திரங்கள் :** எல்லாப்பாத்திரங்களையும் விடுவிடென்று வாசகனுக்கு அறிமுகப்படுத்தி விடவேண்டும். வாசகன் மறக்க முடியாதவாறு, பின்னுல் அப்பெயர் குறிப்பிடப்படும்போது பக்கங்களை பின்னுல் புரட்டி ஞாபகப்படுத்திக் கொள்ளத் தேவையற்ற முறையில் பூரணமாக தெளிவாக்கப்படல் வேண்டும். பாத்திரத்தின் சிந்தனை, உணர்ச்சிகளின் மூலம் வளர்த்தெடுக்கலாம். தோற்றம், நடையுடை பாவனை மூலம் உருவாக்கலாம். குடும்ப வரலாற்றுப் பின்னணியில் படைக்கலாம். நன்கு தெரிந்தவர்களாயும் உயிருடன் நடமாடுபவர்களாகவும் பாத்திரங்களிருக்க வேண்டும்.

முடிவு: 'திடுதிப்' பென்று கதைமுடிய வேண்டும். கடைசிப்பக்கம், கடைசிப்பந்தி, கடைசி வரி - இந்த ஒழுங்கில் குட்டு வெளிப்பட வேண்டும். அதன்பின் விளக்கங்களோ, நீண்ட வியாக்கியானங்களோ தேவையில்லை. வாசகனுக்கு சலிப்புத்தட்டிவிடும். குற்றவாளி தப்பமுடியாதெனக் கண்டதும் மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்தான், ஆகையால் அவன் மனம் குறுகுறுத்தது என்று முடிப்பது வாசகனுக்குத் திருப்தி தராது. அதே போல் ஒருவருக்கும் தெரிந்திருக்க முடியாத ஒரு ரகசியத்தை குற்றவாளி தெரிந்து வைத்திருந்தான் என்பதனுல் 'அவனே குற்றவாளி' என்று முடிவுகட்டுவதும் எழுத்தாளனின் கையாலாகாத்தனம். வாசகனுக்கு அதிருப்தி.

**சூட்சுமம் :** தொடக்கத்திலேயே வாசகனுக்கு இன்னதுதான் நடக்கப்போகிறது என்று தெரிந்துவிடவேண்டும். இறுதிவரை அப்படி நடக்காமல் போகாதா என்று 'படக், படக்'கென்று அடித்துக்கொண்டிருக்க வேண்டும். தேவனின் 'துப்பறியும் சாம்பு' ஒரு நையாண்டி பாத்திரம். ஆயினும் எதிர்பாராத வகையில் அவர் திறமை எதுவுமின்றி புதிர் விடுபடும் தந்திரம் இந்த சூட்சுமத்தில் அரை வாசியைப் புலனுக்குகிறது. துப்புத்துலக்கப் படும் என்பது வாசகனுக்குத் தெரியும். எப்படி என்பது கடைசிவரை மூடி மறைக்கப் பட்டுள்ளது.

அப்பழுக்கற்ற, குறைகளில்லாத ஒரு மர்ம நாவல் இதுவரை எம்மொழியிலாவது எழுதப்பட்டதில்லை. ◉

நன்றி

தேவைக்கதிகமாக விளம்பரங்கள்

பெற்றுத்தந்தவர்களுக்கும்

விளம்பரங்கள் சேகரிக்க

உதவியவர்களுக்கும்

மற்றும் பல்வேறு வகைகளில்

உதவிகள் செய்தவர்க்கும்

செந்தழல்

தனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறது

உள்ளூர் உற்பத்திப்பொருட்களை

நியாயமான விலையில்

வாங்குபவர்கள் விற்பவர்கள்

நம்பிக்கையும் நாணயமும்.

நிறைந்த ஸ்தாபனமும்

விவசாயிகளின் விரும்பத்தக்க

ஒரே ஸ்தாபனம்

ரவி ரேடர்ஸ்

பிரதானவீதி, செட்டிகுளம்

தொலைபேசி: இல 7

செல்லையா & பிறதேர்ஸ்

சகலவிதமான பலசரக்கு சாமான்களும்,
மோட்டார் வாகன சைக்கிள் உதிரிப்
பாகங்களும், பிடவை வகைகளும்,
சகாய விலையில் பெற்றுக்
கொள்ள சிறந்த
ஸ்தாபனம்

செல்லையா & பிறதேர்ஸ்

பருத்தித்துறை வீதி,

காங்கேசன்துறை.

வேண்டிய நேரத்தில் வேண்டிய

பொருட்களையும் அரிசிப் பங்கிட்டுப்

புத்தகத்துக்குரிய பொருட்களையும்

உரிய விலையில் பெறுவதற்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

சிவபாதம் & கொம்பனி

பிரதானவீதி, செட்டிகுளம்

# NEW EDUCATION CENTRE
## புதிய கல்வி நிலையம்

கந்தசாமி கோவில் றேட், (இணுவில் சந்தி) இணுவில்

கலை, விஞ்ஞான, வர்த்தக பாடங்கள்,
க. பொ த (சாதாரண) க. பொ த. (உயர்தர) வகுப்புகளிற்கும்,
புதிய பாடத்திற்கமைய,
6, 7, 8, 9, (N G C E) 10 (H N C E)ம் தர வகுப்புகளிற்கும்,
பயிற்றப்பட்ட பட்டதாரி, தொழில்நுட்ப ஆசிரியர்களால்,
**காலை, மாலை, பகல் வகுப்புகள் நடாத்தப் படுகின்றன.**

விசேட

**ஆங்கில, சிங்கள வகுப்புகளும் நடைபெறுகின்றன.**
**17 - 01 - 77 ல் புதிய வகுப்புகள் ஆரம்பம்.**
விபரங்கட்கு,

தில்லை. விஜயநாதன்
(சந்திரன்)

உங்கள் அச்சுவேலைகள்
எந்த மொழியில் செய்யவேண்டும்?

**தமிழ் சிங்களம் ஆங்கிலம் சமஸ்கிருதம்**

ஆகிய மொழிகளில் அச்சிடுவதற்கு சிறந்த இடம்

# ஆசீர்வாதம் அச்சகம்

50, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 274

கடதாசிவகைகள், பாடசாலை உபகரணங்களுக்கு
ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்

61, பெரியகடை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

# சீமா சில்க் இன்டஸ்றிஸ்

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7170

# மன்கோசெப்

## [MANCOZEB]

சுவிச்சலாந்து "எம்ஸர்வேர்க்" கொம்பனியாரின்
நவீன தயாரிப்பு

சகல இனப்பயிரினங்களையும் தாக்கும்
பூஞ்சண நோய்களைக் கண்டிக்கும்

விசேஷமாக

மிளகாய், வெங்காயம், புகையிலை, உருளைக்கிழங்கு, திராட்சை
முதலிய பயிர்களின் பங்கசு நோய்களுக்கு
மிகவும் சிறந்த நாசினி

மன்கோசெப்

சிறந்த விவசாய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது

மன்கோசெப்

**16** அவுன்ஸ் பைக்கட் விலை ரூபா **27 - 50** சதம் மட்டுமே.
சில்லறையாகவும் மொத்தமாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# ரோரு

32, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்
தொலைபேசி: *7651*

கிளைகள் :

ரோரு
237, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்

ரோரு
சுண்டிக்குளம் சந்தி — தர்மபுரம்


ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம்.